# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 கார்த்திகை 05 செவ்வாய்க்கிழமை (20-11-2001)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:359


# முறைகேடு நடந்தால் மீண்டும் வாக்களிப்பு!

## நடத்துவதற்கு வற்புறுத்துவோம் என்கின்றனர் ஐரோப்பிய யூனியன் கண்காணிப்பாளர்கள்

கொழும்பு,நவம்பர்20

**தேர்தல் மோசடிகள் தொடர்பாக மீண்டும் வாக்கெடுப்பு நடத்தும் விதிமுறைகளை உயர் நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது. வாக்களிப்பில் முறைகேடுகள் நடைபெற்றிருப்பதாகக் கருதின் ஏழு நாள்களுக்குள் மீண்டும் வாக்கெடுப்பை நடத்தமுடியும் என தேர்தல் ஆணையாளருக்குத் தெளிவான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. தேர்தல் முறைகேடுகள் நடைபெற்றமைக்கு ஆதாரம் இருப்பின் தேர்தல் ஆணையாளரை இவ்வதிகாரத்தைப் பயன்படுத்துமாறு வலியுறுத்துவோம்.**

**இலங்கை வந்திருக்கும் ஐரோப்பிய யூனியன் தேர்தல் கண்காணிப்புக் குழு இப்படி அறிவித்திருக்கின்றது.**

ஜோன் குஸ்ஹான் தலைமையில் கொழும்பு வந்திருக்கும் ஐரோப்பிய யூனியனின் தேர்தல் கண்காணிப்புக் குழுவே இப்படி அறிவித்திருக்கின்றது.

நேற்று இக்குழுவினர் கொழும்பில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினர் அதிலேயே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது. அங்கு கண்காணிப்புக் குழு பிரதிநிதிகள் தெரிவித்ததாவது:-

அரசியல் கட்சிகள் திடசங்கற்பம் பூண்டால் தேர்தல் வன்முறைகளை முற்றாகத் தடுத்து நிறுத்த முடியும்.

கடந்த தடவையை விட இம்முறை வன்செயல்கள் அதிகரித்திருப்பதாகக் கூறப்படுவது எமது கவனத்தை ஈர்த்திருக்கின்றது.

கடந்த தடவை தேர்தலின் பின்னர் நாம் தெரிவித்த பல சிபாரிசுகள் இம்முறை செயற்படுத்தப்படாதது கவலைக்குரியதே.

பதினேழாவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் தேர்தல் ஆணையாளருக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பதை வரவேற்கின்றோம். ஆனால் அந்த சட்டவாக்கத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு வழங்கப்படவில்லை.

நாம் இவ்வளவு சீக்கிரமாக மீண்

(14ஆம் பக்கம் பார்க்க)

## இன்று தபால் மூல வாக்களிப்பு புலிகளின் பிரதேசத்திலும் கூட!

யாழ்ப்பாணம்,நவ.20

நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு இன்று நாடு முழுவதிலும் உள்ள அரச திணைக்கள அலுவலகங்களில் நடைபெறுகின்றன.

இதற்கான வாக்குச்சீட்டுக்கள் தேர்தல் திணைக்களத்தினால் அந்தந்தத் திணைக்கள வாக்கெடுப்பு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இன்று காலை 9மணி முதல் வாக்களிப்பு நடைபெறுமென அத்தாட்சிப் படுத்தும் அலுவலர்கள் தெரிவித்தனர்.

குடாநாட்டில் இரண்டாயிரத்து 600 பேர் இன்று தபால் மூலம் வாக்களிக்கவுள்ளனர்.

நாடு முழுவதிலும் இரண்டு லட்சத்து 43 ஆயிரத்து 642 பேர் தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பித்து அதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

இதற்கிடையில் -

மட்டக்களப்பில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பட்டிப்பளை பிரதேச செயலகத்திலும் தபால் மூல வாக்களிப்புக்கான நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

நீண்டகால இடைவெளிக்குபின் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் தபால் மூல வாக்களிப்பு நிலையம் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-180-51-117)

## அரசு, எதிரணித் தமிழ் வேட்பாளர்கள் மட்டக்களப்பில் பிரசாரத்தை நிறுத்தினர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசிய முன்னணி ஆகியவற்றின் தமிழ் வேட்பாளர்கள் தேர்தல் பிரசாரங்களை இடை நிறுத்தியுள்ளனர். அவர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கட்சிகளின் முஸ்லிம் வேட்பாளர்கள் மட்டும் முஸ்லிம் பகுதிகளில் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழ் வேட்பாளர்களைப் போட்டியிலிருந்து விலகுமாறு அவர்களின் உறவினர்கள் வற்புறுத்துவதாகக் கூறப்படுகிறது. அவர்களது ஆதரவாளர்களும் பிரசாரங்களில் ஈடுபடுவதை நிறுத்தியுள்ளனர்.

வேட்பாளர்களுக்கு இலக்கங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அவர்கள் போட்டியிலிருந்து விலகினாலும் அவர்களின் பெயர்கள் வாக்குச்சீட்டுக்களில் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பில் பெரும்பான்மைக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்களுக்கு 'இராஜசிங்கன் படை' என்ற பெயரில் அச்சுறுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.(உ-4)

## துணுக்காயில் வயிற்றோட்டம்

துணுக்காய் மற்றும் அண்டிய பிரதேசங்களில் வயிற்றோட்டம் வேகமாகப் பரவிவருகின்றது.

கடந்த ஒரு வாரகாலமாகத் தினசரி துணுக்காய் மத்திய மருந்தகத்துக்கு சராசரியாக 35 நோயாளர்கள் வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சைக்கு வருவதாக மருந்தகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் -

இந்த மருந்தகத்தில் பனடோல், கொட்றிம், அமக்ஸிலின் ஆகியவற்றுக்கும் சலரோகம், இரத்த அழுத்தம் போன்றவற்றுக்கான மருந்துக்கும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)




பத்திரிகையாளர் மாநாட்டில் ஐரோப்பிய [illegible]ன் கண்காணிப்பாளர்கள்

## குடாக்கடல் ஊடாக 5 சடலங்கள் நேற்று புலிகளிடம் ஒப்படைப்பு

### செஞ். குழுவினர் கையளித்தனர்

யாழ்ப்பாணம்,நவ.20

கடந்த ஏழு நாள்களாக அடையாளம் காணும் பொருட்டு யாழ் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்த ஐவரின் சடலங்கள் நேற்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரால் விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்பட்டன.

கடந்த 11 ஆம் திகதி கைதடிப் பிள்ளையார் கோயில் பகுதியில் இடம்பெற்ற மோதலில் கொல்லப்பட்டதாகத் தெரிவித்து படையினரால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட நான்கு சடலங்களும் -

கடந்த 12 ஆம் திகதி சூட்டுக் காயங்களுடன் கொழும்புத்துறைக்

(14ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரன் - ரணில் - எஸ்.பி. படத்துடன் வர்ணச் சுவரொட்டி!

### கொழும்பில் பல பகுதிகளிலும்

கொழும்பு,நவ.20

கொழும்பில் பல பகுதிகளிலும் பிரபாகரன், ரணில் விக்கிரமசிங்க, எஸ்.பி.திஸநாயக்க ஆகிய மூவரின் படங்களுடன் கண்களைக்கவரும் வண்ண சுவரொட்டிகள் சிங்கள வாசகங்களுடன் ஒட்டப்பட்டுள்ளன.

சுவரொட்டிகளில் கோஷம் ஒன்று பொறிக்கப்பட்டிருக்கிறது. "யானை, புலி, நரி இணைப்பைத் தோற்கடிப்போம்" என்பதே அந்தக் கோஷம்.

சுவரொட்டியில் காணப்படும் படங்களுக்கு பின்வருமாறு குறிப்பு பொறிக்கப்பட்டு இருக்கிறது.

"பிரபா வருவது நாடொன்றை எடுக்க; ரணில் வருவது அதை (நாட்டை) கொடுக்க, எஸ்.பி. பார்த்துக்கொண்டு இருப்பது இடம் கிடைத்தால் முழு நாட்டையும் தின்ன!"

-- இப்படி சுவரொட்டியில் படக் குறிப்பு அமைந்திருக்கிறது. இந்த மூவரையும் கொண்ட சுவரொட்டி நாட்டிலே தென்படுவது இது முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் பிரதேசத்தில் ரெலோ பிரமுகர் பிரசாரம்

மட்டக்களப்பு,நவ.20.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நான்கு தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு சார்பாக போட்டியிடும் வேட்பாளர்கள் மூவர் நேற்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்று தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

இந்தக் கூட்டமைப்பில் போட்டியிடும் ரெலோ பிரமுகர் நித்தியானந்தம் இந்திரகுமார்(பிரசன்னா), தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரமுகர் அ.செல்வேந்திரன் ஆகியோரே நேற்று இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து புலிகளின் கட்டுப்

(14ஆம் பக்கம் பார்க்க)




அஞ்சாத வாழ்வுக்கும் அழிந்த வாழ்வை மீட்பதற்கும்

மீன் சின்னத்துக்கே உங்கள் வாக்கு

தம்பிராஜா சுபத்திரன் (றொபேட்)

சுயேச்சைக் குழு



ஈ.பி.ஆர்.எல்.எவ்.

(93929)

# அனைவரையும் வாக்களிப்பதற்குத் தயாராகும்படி அழைக்கிறது யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம்,நவ.20

நிரந்த சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு இந்தச் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்துவோம். அதற்காக இந்த நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்கு நாம் அனைவரும் தயாராவோம்.

- இப்படி அழைப்பு விடுத்திருக்கின்றது யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம்.

இது தொடர்பாக ஒன்றியம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

அன்பான தமிழ் உறவுகளே!

எதிர்வரும் டிசெம்பர் 5ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் நாம் அனைவரும் வாக்களிக்கத் தயாராவோம்.

நிரந்தர சமாதானத்தை ஏற்படுதத இச்சந்தர்ப்பத்தினை நாம் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

நிரந்தர சமாதானம் ஏற்படுத்தப் படவேண்டுமாயின் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளின் மீதான தடை நீக்கப் படவேண்டும்; மக்களின் மீதான பொருளாதாரத் தடை நீக்கப்பட வேண்டும்.

இவ்விடயங்களில் எமது ஒற்றுமையினை வெளிப்படுத்துவோம்.

சமாதானத்திற்கு எதிராக செயற்பட்டுவரும் ஆயுதம் ஏந்திய தமிழ்க் கட்சிகள் மீண்டும் தேர்தலில் மோசடிகள் மூலம் நாடாளுமன்றம் செல்வதைத் தடுப்பதற்காக நாம் அனைவரும் எமது வாக்குரிமைகளை பயன் படுத்துவோம்.

வாக்களிப்தற்காக அனைத்து மக்களும் தயாராகுங்கள்.

☆ இடம்பெயர்ந்த மக்கள் உங்களது பகுதி தபாலகங்களுக்கு நேரகாலத்துடன் சென்று உங்களது வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

☆ உங்களது வாக்களிப்பு நிலையங்களை முன்கூட்டியே அறிந்து கொள்ளுங்கள்.

☆ இறந்துபோன உங்களது உறவினர்களது அல்லது வெளி நாடு சென்ற உறவினர்களது வாக்காளர் அட்டைகள் வாக்குத் திருடர்களது கைகளில் சிக்காது பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

☆ வாக்களிக்கும் முறை பற்றியும் தெளிவான விளக்கங்களை முன்கூட்டியே அறிந்து கொள்ளுங்கள்.

- இதன் மூலம் தேர்தல் மோசடிகள் வாயிலாக இம்முறையும் நாடாளுமன்றம் செல்லக் காத்திருக்கும் தன்மானம் அற்றவர்களைத் தோற்கடிப்போம் - என்று உள்ளது.

# தமிழர்களின் உரிமைகளுக்கு எதிராக செயற்படுவோரை இனங்காணுங்கள்!

## உயர் தொழில்நுட்பக் கல்லூரி நிறுவக மாணவர் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.20

தமிழ் மக்களின் உரிமைகளுக்கு எதிராகச் செயற்படுபவர்களை இனங்காணுங்கள். அவர்களுக்கு வாக்குகளை அளிக்காதீர்கள். இந்தப் பொதுத் தேர்தல் சமயத்தில் சிந்தித்துச் செயற்படுங்கள்.

- இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவக மாணவர் ஒன்றியம் இவ்வாறு கோரியிருக்கின்றது. இது தொடர்பாக அந்த மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அன்பார்ந்த தமிழீழ மக்களே!

காலங்காலமாக நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்கள் உப்புச் சப்பற்றவையாக நடந்து முடிவது இங்கு வரலாறாகும்.

தேர்தல் என்று வரும்போது 'அதைச் செய்வோம்', 'இதைச் செய்வோம்', 'சந்திரனைப் பிடித்துத் தருவோம்', 'கடலையும் சுருட்டிக்கொண்டு வந்து தருவோம்' என்றெல்லாம் மக்களிடம் தேனொழுக பொய்வார்த்தைகளைக் கூறி ஆட்சியைக் கைப்பற்றுவார்கள்.

வாக்குக் கேட்க வரும்போது தரும் வாக்குறுதிகளை எல்லாம் பின்னர் மறந்து எடுப்பார் கைப் பிள்ளைகளாகி அவர்கள் செயற்படுவார்கள். இவை இன்று வரை தமிழ் மக்களின் நெஞ்சங்களில் மாறாத வடுக்களாகப் பதிந்துள்ளன.

தற்போது அடுத்த தேர்தலுக்காகத் தடல்புடல் ஏற்பாடுகள், தயாரிப்புகள் நடக்கின்றன.

தமிழ் மக்கள் சிந்தித்துச் செயற்படவேண்டிய காலம் இது.

உலகத்தின் கண்களில் தமிழரின் பிரதிநிதிகள் நாம் என்று கூறிக் கொண்டு - அற்ப, சொற்ப சலுகைகளுக்காக நாடாளுமன்றக் கதிரைகளை அலங்கரித்துக்கொண்டு - எறியும் எலும்புத் துண்டுகளுக்காக நாய்கள் விசுவாசம் காட்டுவதுபோல செயற்பட்டுக்கொண்டும் இருக்கின்ற, இந்த உப்புச் சப்பற்ற அடிவருடிகள் நமது இனத்துக்காக நாளை என்ன செய்துவிடப் போகிறார்கள்?

தமிழ் மக்கள் இன்று சொல்லொணாத் துன்பங்கள், துயரங்கள் மத்தியில் உழன்று கொண்டிருக்கிறார்கள். அவர்களது குரல்வளைகள் இரும்புக்கரம் கொண்டு நசுக்கப்பட்டுள்ளன. வெறும் நடைப்பிணங்களாக - வெளியில் எதையும் கூற முடியாதவர்களாக - பல்லாண்டு காலமாக அவர்கள் அல்லலுறுகின்றார்கள். பல்வேறு நாடுகளும் தமிழ் மக்களின் உணர்வுகளை மதிக்காமல் செயற்படுகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் உரிமைக்காகவும் சுதந்திரத்திற்காகவும் - போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

தமிழ் மக்களின் பின்னால் அன்றும், என்றும் நிலைத்திருக்கக் கூடிய இந்தச் சக்தியைப் புரியாமல் 'தமிழன் ஒற்றுமைப்பட்டு விட்டான்' என்று சிங்களப் பேரினவாதம் அதிர்ந்து போய் நிற்கின்றது.

ஆகவே இந்தச் சமயத்தில் சிந்தித்துச் செயற்படுமாறு தமிழ் மக்களைக் கோருகின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

# ஏகப் பிரதிநிதிகள் புலிகள்தான் என்பதை ஓங்கி ஒலிக்கும் வண்ணம் வாக்களியுங்கள்!

## யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,நவ.20

"தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் புலிகள்தான் என்பதை உலகின கவனத்தில் ஓங்கி ஒலிக்கும் வண்ணம் இத்தேர்தலில் மக்கள் தீர்ப்புக் கூறவேண்டும்."

- இவ்வாறு கோரியிருக்கிறது யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம்.

இந்த விடயம் சம்பந்தமாக நடைபெற்ற மாணவர் ஒன்றியத்தின் விசேட ஒன்றுகூடலில் இது தொடர்பான தீர்மானம் பலத்த கரகோஷத்துக்கு மத்தியில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக மாணவர் ஒன்றியச் செய்திக் குறிப்பு தெரிவித்தது.

பொதுமக்கள் அனைவரும் தமது வாக்குரிமையைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும் எனக் கோருவது என்றும் -

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தேசவிரோத சக்திகளைத் தோற்கடிக்கும் முகமாக எடுக்கும் சகல நடவடிக்கைகளிலும் தொழில் நுட்ப மாணவ சமூகம் தோளோடுதோளாக நின்று ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் -

பல்கலைக்கழக மாணவர்களோடு இணைந்து விழிப்புணர்வுப் பிரசாரம் நடத்துவது என்றும் -

அங்கு தீர்மானிக்கப்பட்டதாக அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

"ஈனப் பிறவிகள் சிலர் இனத்தை விற்கினும் மானத் தமிழர் நாம் மண்டியிடமாட்டோம்" என்ற தலைப்பிலான துண்டுப் பிரசுரம் தொழில்நுட்பக் கல்லூரியில் விநியோகிக்கப்பட்டதாகவும் அந்தச் செய்திக் குறிப்புத் தெரிவித்தது.

தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம் இவ்விடயம் தொடர்பாக மக்களுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ் மக்களே!

நடைபெற்ற ஏனைய தேர்தல்கள் போலல்லாது இந்தத் தேர்தலில் உங்களது வாக்குரிமைகளை சரியான முறையில் பயன்படுத்தவேண்டிய வரலாற்றுத் தேவை எழுந்துள்ளது. ஏனெனில் கடந்த தேர்தல்களில் தங்களைத் தாங்களே தெரிவு செய்து நாடாளுமன்றம் சென்றவர்கள் செய்தவற்றை மக்கள் ஒருபோதும் மறந்துவிடமாட்டார்கள் .

அபிவிருத்தி என்ற பெயரில் உலக நாடுகளால் கொடுக்கப்பட்ட நிதியை மோசடி செய்தும், அடியாள்களைத் திரட்டுவதிலும் பயன்படுத்தினார்கள். அத்துடன் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் தாம் எனக் கூறிக் கொண்டு மக்களின் அடிப்படை உரிமைகளைக் கூட நசுக்கினார்கள்.

ஆனால் தேர்தல் வரும் காலங்களில் 'மத்தியில் கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி' என நாடகம் ஆடுகின்றனர்.

இன்றும் தமிழ் மக்கள் மீது பலத்த கெடுபிடிகள், பாலியல் வல்லுறவுகள், கைதுகள், காணாமற்போதல் என்பன தொடர்ந்தவண்ணம் உள்ளன.

ஆனால் இவை ஒன்றும் இங்கு நடைபெறவில்லை என்பது போல இததீயசக்திகள் வெளியுலகிற்கு ஒரு தோற்றப்பாட்டை உருவாக்கி வருகின்றன.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி நடத்தப்பட்ட பொங்கு தமிழ் நிகழ்வை அடக்கி, மக்களின் உணர்வுகளை சிதறடிக்க முற்பட்டது மட்டுமல்லாமல், பொங்கு தமிழ் நிகழ்வை முன்னின்று செய்தவர்களுக்கு எதிராக இராணுவக் கெடுபிடிகளையும் கட்டவிழ்த்தும் விட்டார்கள்.

இன்று இவர்கள் மக்களுக்காக என்றும் வாழ்பவர்கள் தாம் என கூறுகின்றார்கள்.

எனவே தமிழ் மக்களாகிய நீங்கள் இத்தேர்தலில் -

தமிழரின் சுயநிர்ணய உரிமையை எதிர்ப்பவர்களை - புலிகள் மீதான தடைகளை நீக்கமுடியாதவாறு வழி சமைப்பவர்களை - இனங்கண்டு நிராகரிப்பதுடன், தமிழ் மக்கள் திறந்த வெளிச்சிறையில் வாழ்கின்றார்கள் என்பதை வெளிப்படுத்தவும், அடக்கு முறைகளை வெளிக்கொணரவும் ஓரணியில் நின்று தமிழ் மானம் காப்பீர்களாக!

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆனந்தசங்கரியை தீவகத்துக்கு வர அழைக்கிறார் ஈ.பி.டி.பி. அமைப்பாளர்

யாழ்ப்பாணம்,நவ.20

'தீவகத்தை மீட்போம்; அடிமைத் தளை அறுப்போம்' என்று ஆர்ப்பாட்டமாக ஆரவாரம் செய்யும் ஆனந்த சங்கரி அவர்களே! வருக. உங்களை வரவேற்கத் தீவக மக்களாகிய நாங்கள் மிக ஆவலாக உள்ளோம்.

- இவ்வாறு ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பியின் தீவக அமைப்பாளருமான ந.மதனராசா வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

வீ.ஆனந்தசங்கரியின் சார்பாக பிரசுரமான தேர்தல் பிரசார விளம்பரம் ஒன்றில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்களுக்குப் பதிலளிக்கும் வகையில் 'மீட்பரே வருக!' என்ற தலைப்பில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நாடாளுமன்றத்தில் உண்மைகளுக்காக உரைத்துக் கொடுப்பது தான் மரபென்று கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் நீங்களோ, பச்சைப் பொய்களைக் கொண்ட புளுகு மூடையை அவிழ்த்து விட்டிருக்கிறீர்கள். அதற்காக உங்களை வரவேறக வேண்டும்.

கொழும்பிலிருக்கும் 'ஸ்லேவ் ஐலண்ட்' பகுதியில் மக்கள் சுதந்திரமாக நடமாடுவது பற்றித் தெரிந்திருக்கும் உங்களுக்கு, தீவுப்பகுதி மக்களின வாழ்க்கை எப்படி என்று தெரியாமல் போயிருக்கும் அறிவீனத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இதற்காக நீங்கள் ஒரு தடவை தீவுப் பகுதிக்கு வரவேண்டும் என்றே எதிர் பார்க்கின்றோம்.

1989 பொதுத் தேர்தலில் உதயசூரியன் சின்னத்தின் கீழ் வாக்குகளைப் பெற்ற - நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீவுப் பகுதிகளைத் திரும்பிக்கூடப் பார்க்காமலிருந்த நிலைமையை உங்களுக்குச் சுட்டிக்காட்ட வேண்டும். இதற்காக உங்களை வரவேற்க வேண்டி இருக்கிறது. 1989இன் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் 1999இன் ஜனாதிபதி தேர்தல் வரை உதயசூரியன் கொடியின் நிழல்கூட தீவுப் பகுதியைத் தொட்டது கிடையாது. இந்த உண்மையை உங்களுக்கு உணர்த்தவேண்டும். அதற்காக ஒருதடவை இப்பகுதிக்கு வருகை தாருங்கள்.

சுயாட்சிக் கழகத்தின் நவரத்தினம் முதல் பண்டிதர் கா.பொ.இரத்தினம் வரை தீவுப் பகுதிகளிலிருந்து நாடாளுமன்றத்திற்கு தெரிவானவர்கள் செய்துவிட்ட சேவைகளை விட,

(13ஆம் பக்கம் பார்க்க)

## வாழை அழிவுக்கு நஷ்டஈடு

யாழ்ப்பாணம்,நவ.20

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழவு, புனரமைப்பு அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் கமநல கேந்திர நிலையங்களின் ஊடாக விவசாயிகளுக்கான வாழை அழிவு நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது.

புத்தூர், உரும்பிராய், உடுவில் கமநல கேந்திர நிலையங்களின் ஊடாக சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் உரும்பிராய் பிரதேசத்தில் 1372 விவசாயிகளுக்கும், புத்தூர்ப் பிரதேசத்தில் 493 விவசாயிகளுக்கும், உடுவில் பிரதேசத்தில் 67 விவசாயிகளுக்கும் இந்த நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது. இதற்கென 23 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றுள்ளதாக கமநல திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன என்று ஈ.பி.டி.பி. செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது. (உ)

## சிப்பாய் தற்கொலை

கொழும்பு,நவ.20

கட்டுநாயக்கா விமானப்படை முகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த டபிள்யூ. ஜி.லலித் என்பவரே இவ்வாறு தற்கொலை செய்தவராவார்.

## கொழும்பில் நேற்று உயர் மட்ட மாநாடு

பொதுத் தேர்தல் தொடர்பான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து நேற்று கொழும்பில் மாநாடு ஒன்று நடைபெற்றது.

பொலீஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் சகல பிராந்தியங்களினதும் உதவிப் பொலீஸ் மா அதிபர்கள் மற்றும் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

அதிகரித்துவரும் வன்முறைகளை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் -

தேர்தல் தினத்தன்று நாட்டின் சகல பகுதிகளிலும் செயற்பட வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாகவும் -

இந்த மாநாட்டில் நன்கு ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-4)

## காலி வீதி திறந்து விடப்படுகிறது

பிரதமரின் உத்தியோகபூர்வ வசிப்பிடமான அலரி மாளிகைக்கு முனனால் உள்ள காலி வீதி நாளை காலை போக்குவரத்துக்கு முற்றாகத் திறந்து விடப்படுகிறது.

1996 பெப்ரவரியில் கொழும்பு கோட்டை மத்திய வங்கிக் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான போது இந்த வீதிப் பகுதி இரு வழிப் போக்குவரத்துக்கு மூடப்பட்டது. அப்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அலரி மாளிகையில் வசித்து வந்தார். பின்னர் அவர் ஜனாதிபதி மாளிகைக்குச் சென்றார். பிரதமர் ரத்னசிறி விக்கிரம நாயக்கா அலரிமாளிகையில் குடிபுகுந்தார்.

பாதுகாப்பு நிலைமை திருந்தியதால தாமதமின்றி வீதியைத் திறநது விடுமாறு பிரதமர் பொலீஸாரைப் பணித்திருக்கிறார்.

மூடப்பட்ட வீதி ஐந்து வருடங்களின் பின்னர் இப்போது திறந்து விடப்படுகிறது. (உ)

## ஜனாதிபதி நாளை பதிலளிப்பார்

யாழ். குடாநாட்டில் வாழும் மக்களின் கேள்விகளுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாளை நண்பகல் தொலைபேசி மூலம் பதிலளிக்க இருக்கிறார்.

செய்மதி ஊடான இந்த நிகழ்ச்சிக்கு வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சு முழு ஏற்பாட்டையும் செய்துள்ளதாக ஈ.பி.டி.பி. செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது.

யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள அமைச்சர் அலுவலகத்திலிருந்து தொலைபேசி மூலம் கேட்கப்படும் கேள்விகளுக்கு ஜனாதிபதி நேரடியாகப் பதிலளிப்பார் என்றும் -

அண்மையில் இடம்பெற்ற மக்கள் குறைநிவர்த்தி சேவையின் போதும் ஜனாதிபதி மக்களின் கேள்விகளுக்கு பதிலளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாயினும் தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாக இந்த நிகழ்ச்சி இடம் பெறாதுபோனது என்றும் -

அந்தச் செய்திக் குறிப்பு மேலும் தெரிவித்தது. (உ)

# பின்லேடனின் மறைவிடம் சுற்றிவளைக்கப்பட்டது!





காபூல்,நவ.20

அமெரிக்காவில் செப்ரெம்பரில் இடம்பெற்ற தாக்குதல்களின் முக்கியநபர் எனக்கூறப்படும் ஒஸாமா பின்லேடனின் மறைவிடத்தில் இருந்து சுமார் 30 கிலோ மீற்றர் தூரம் வரை முன்னேறிவிட்டதாக அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் படையினர் தெரிவித்துள்ளனர்.

பின்லேடனைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணியில் அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

கந்தகாருக்கு கிழக்கேயுள்ள தொடர் குகைகள் நிறைந்த மலைத் தொடர்களிலேயே பின்லேடன் இன்னமும் மறைந்துள்ளதாக அமெரிக்கப் படைகள் நம்புகின்றன.

"பின்லேடன் இன்னும் ஆப்கானிஸ்தானில் தங்கியுள்ளார் என்றே நினைக்கின்றேன். அவர் அங்கிருந்து வெளியேறியதாக எந்த உளவுத் தகவலும் இல்லை" - என்று அமெரிக்க பாதுகாப்புச் செயலர் கொலின் பவல் கூறினார்.

"அவருடைய இடத்தில் வைத்தே அவரை நாங்கள் கைது செய்வோம்" - என்றும் அவர் சொன்னார்.

"என்னுடைய தகவல் என்னவென்றால் பின்லேடன் கந்தகார் மாகாணத்திலேயே இன்னும் உள்ளார். கந்தகார் நகரில் இருந்து கிழக்கே 130 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள மறைவிடம் ஒன்றில் அவர் இருக்கின்றார்" - என்று கூறினார் வடக்குக் கூட்டணியின் உள்துறை அமைச்சர் யுனிஸ் குவானோனி.

ஆனால் ஒஸாமா பின்லேடன் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறி விட்டார் என பாகிஸ்தானில் உள்ள தலிபான் பிரதிநிதி தெரிவித்தார். (ம)



பலஸ்தீனத்தில் கடந்த ஒருவருடத்துக்கு மேலாகத் தொடர்ந்து வரும் வன்முறைகளில் அப்பாவிப் பலஸ்தீனர்கள் பலர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளனர். இதனால் பலஸ்தீன இளம் தலைமுறையிடம் இஸ்ரேலுக்கு எதிரான மனப்போக்கு மிக அதிகளவில் காணப்படுகிறது. தனது கிராம எல்லையில் நிற்கும் ஆயுதம் ஏந்திய இஸ்ரேலிய சிப்பாய்க்கு கவண் மூலம் தமது எதிர்ப்பை காட்டுகின்றார்கள் பலஸ்தீனச் சிறுவர்கள்.

# பயங்கரவாத அச்சுறுத்தல் மேலும் அதிகரித்துள்ளது

## பிரிட்டிஷ் அமைச்சர் தெரிவிப்பு

லண்டன்,நவ.20

ஆப்கானிஸ்தானின் ஆட்சிப்பீடத்தில் இருந்து தலிபான்கள் அகற்றப்பட்டு விட்டனர். எனினும் பின்லேடன் மற்றும் அவரது குழுவினரின் பயங்கரவாத அச்சுறுத்தல்கள் முன்னரை விட மேலும் அதிகரித்துள்ளது என்று பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் டேவிட் ஸ்மித்வட் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் மூன்றிலிரண்டு பங்கு பிரதேசம் மேற்கு நாடுகளின் ஆதரவுப் படைகள் வசம் வந்துள்ள போதும், பயங்கரவாத அச்சுறுத்தலகள் மறைந்துவிட்டன என்று கூறமுடியாது என்று கூறிய அவர், பின்லேடனும் அவரது ஆதரவாளர்களும் மேற்கு நாடுகளில் மேலும் பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்துவதற்கான சாத்தியங்களை மறுத்து விட முடியாது என்றும் கூறினார்.

இதற்கிடையில் -

பயங்கரவாதச் சந்தேக நபர்களை விசாரணையின்றி நீண்ட நாள்களுக்குத் தடுத்து வைப்பதற்கும் -

விமான நிலையத்தில் சந்தேகத்துக்கு இடமான நபர்கள் காணப்பட்டால் அவர்களை உடனடியாகக் கைது செய்வதற்கும் -

பிரிட்டனுக்குள் விமானப் பயணத்தில் ஈடுபடும் எவரையும் விசாரணை செய்வதற்கும் -

வழிவகுக்கும் வகையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்வதற்கான பிரேரணை ஒன்றை பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பார் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது. (ம)

## தலிபான்கள் நுழைவதைத் தடுக்க

# ஆப்கானுடனான எல்லையை பாகிஸ்தான் நேற்று மூடியது



எல்லையைத் தாண்ட முற்படும் அகதிகளை தடுக்க முயலும் பாக். அதிகாரிகள்.

இஸ்லாமாபாத்,நவ.20

ஆப்கானிஸ்தானில் எதிரணிப் படையினரிடம் இருந்து தப்பி வெளியேறும் தலிபான் படையினர் தமது நாட்டுக்குள் நுழைந்துவிடாமல் இருப்பதற்காக பாகிஸ்தான், தெற்கு ஆப்கானிஸ்தானுடனான தனது எல்லையை நேற்று முற்றாக மூடியது.

"ஆப்கானிஸ்தானை விட்டுத் தப்பியோடும் தலிபான்கள் பாகிஸ்தானுக்குள் நுழைவதற்கு முயன்று வருகின்றனர். இவர்களைத் தடுப்பதில் நாம் தீவிர கவனம் செலுத்தி வருகின்றோம்" - என்று இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்தார்.

எல்லை நெடுகிலும் ரோந்துப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இரவு நேரங்களில் தலிபான்கள் ஊடுருவுவதைத் தவிர்ப்பதற்கு இரவுப் பார்வைக் கண்ணாடிகளையும் பாகிஸ்தான் துருப்பினர் பயன்படுத்திவருகின்றனர். மேற்கில் உள்ள எல்லைகளே தீவிர கண்காணிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. கிழக்கில் மலைத் தொடர்களும் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள் ளன.



எல்லையில் காத்திருக்கும் ஆப்கான் அகதிகள்

எல்லை மூடப்பட்டதைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தானின் கந்தகார் நகருக்குச் செல்லும் வீதிகள் வெறிச்சோடிக் கிடக்கின்றன.

எல்லை தாண்டி பாகிஸ்தானுக்குள் நுழைவதற்காக நூற்றுக்கணக்கான ஆப்கானிஸ்தானியர்கள் எல்லையில் காத்திருக்கின்றனர். இவர்கள் தமது நாட்டுக்குள் நுழைவதையும் பாகிஸ்தானிய அதிகாரிகள் தடைசெய்துள்ளனர். அகதிகளுடன் சேர்ந்து - அகதிகள் என்ற போர்வையில் - தலிபான்களும் நுழைந்துவிடக்கூடும் என்பதே இதற்குக் காரணம்.

இளம் சிறுவனுடன் சேர்ந்த குடும்பம் ஒன்றை மட்டுமே எல்லை தாண்டி நுழைய பாகிஸ்தான் அதிகாரிகள் நேற்று அனுமதித்தனர். (ம)

# சரணடைவு! அல்லது சாவு! தலிபான்களுக்கு நேர்ந்த கதி

காபூல்,நவ.20

தலைநகர் காபூல் மற்றும் தமது வலுவான கோட்டையான கந்தகார் நகரம் என்பவற்றிலிருந்து வெளியேறிய தலிபான் படையினர் தற்போது இறுதியாகத் தஞ்சமடைந்துள்ள குண்ட்சூ நகரைக் கைப்பற்றுவதற்கான தமது இறுதித் தாக்குதல்களை வடக்குக் கூட்டணிப் படைகள் ஆரம்பித்துள்ளன.

நிச்சயமற்ற எதிர்காலத்துடன் வடக்குக் கூட்டணிப் படைகளிடம் சரணடைய வேண்டும் அல்லது இறுதிவரை போரிட்டு மடிய வேண்டும் என்ற பரிதாப நிலைக்குத் தலிபான் படையினர் தள்ளப்பட்டுள்ளனர்.

"தலிபான் படையினர் சரணடைய வேண்டும் அல்லது கடும் தாக்குதல் நடத்தி அவர்களைக் கொன்று குவிப்போம்" என்று வடக்குக் கூட்டணிப் படைகள் சூளுரைத்துள்ளன.

குண்ட்சூ நகரில் சிக்கியுள்ள தலிபான் தளபதி ஒருவர், தங்களைப் பாதுகாப்பான முறையில் வெளியேற அனுமதித்தால் இந்த முற்றுகைப் போர் அமைதியான முறையில் முடிவடையும் என்றும் -

இதற்காகப் பேச்சு நடத்தத் தயார் என்றும் - கூறி உள்ளார். அவரது இந்தக் கோரிக்கையை வடக்குக் கூட்டணியும் அமெரிக்காவும் நிராகரித்துள்ளன.

இந்த நிலையில் கூட்டணிப் படைகளிடம் சரணடைதல் அல்லது போரிட்டு மரணமடைதல் என்ற இரு வழிகளே தலிபான் படையினர் முன் இருக்கின்றன.

அநேகமான தலிபான் தலைவர்கள் ஏற்கனவே பாதுகாப்பான இடங்களுக்குத் தப்பிச் சென்றுவிட்டனர். எஞ்சியவர்களில் பலர் அமெரிக்காவின் தாக்குதல்களில் கொல்லப்பட்டு விட்டனர்.

குண்ட்சூ நகரில் தற்போது எஞ்சியுள்ளவர்கள் சாதா



ரண தலிபான் போராளிகளே. வடக்குக் கூட்டணிப் படைகளிடம் சரணடைந்தால் அவர்களால் ஒட்டுமொத்தமாகக் கொல்லப்படக் கூடும் என்றும் இவர்கள் அஞ்சுகின்றார்கள்.

90களின் ஆரம்பத்தில் துரிதமாக வளர்ச்சி அடைந்து மிகக் குறுகிய காலத்திலேயே நாட்டைத் தமது கட்டுப்பாட்டின் கீழ்கொண்டு வந்தவர்கள் தலிபான்கள். 1996 ஆம் ஆண்டு தலைநகர் காபூலைக் கைப்பற்றியதன் மூலம் ஆப்கானின் பெரும் பகுதியை தமது இஸ்லாமிய அடிப்படைவாத ஆட்சிக்கு உட்படுத்தியிருந்தார்கள். அதன் பின் கடந்த ஐந்து ஆண்டு காலமாக ஆப்கானிஸ்தான் தலிபான்களின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது.

இஸ்லாமியத்தின் அடிப்படைவாதத்தைத் தீவிரமாகக் கடைப்பிடித்துவந்த தலிபான்களில் தசாப்தம் இன்னும் சில வாரங்களில் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு விடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

## ஆப்கானிஸ்தானில்

# புதிய அரசு குறித்த பேச்சு இன்னும் ஓரிரு நாள்களில்!

காபூல்,நவ.20

ஆப்கானிஸ்தானில் புதிய அரசு அமைப்பது தொடர்பான இராஜதந்திர முயற்சிகள் முழுமூச்சாக நடைபெற்றுக்கொண்டிருக்கையில், அது தொடர்பான உத்தியோகபூர்வப் பேச்சுக்கள் இன்னும் ஓரிரு நாள்களில் ஜேர்மனி, சுவிற்ஸர்லாந்து அல்லது ஆஸ்திரேலியாவில் நடைபெறும் என்று வடக்குக் கூட்டணி வெளிவிவகார அமைச்சர் அப்துல்லா அப்துல்லா தெரிவித்தார்.

ஆனால் புதிய அரசு குறித்த பேச்சுக்கள் ஆப்கான் தலைநகர் காபூலிலேயே நடைபெற வேண்டும் என்று வடக்குக் கூட்டணி கண்டிப்பாகத் தெரிவித்துள்ளது.

"ஆப்கானிஸ்தானை புனரமைப்புச் செய்வதில் நாம் அதிக அக்கறையும் கவனமும் எடுக்கவேண்டும். உலக நாடுகள் இதற்கு முழுமையான ஆதரவு வழங்கும். கடந்த கால வரலாற்றையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்" - என்று ஆப்கானுக்கான ஐ.நாவின் விசேட தூதுவர் பிரான ஸிஸ் வென்ட்ரல் தெரிவித்தார்.

"முன்னாள் மன்னரான ரபானியே போட்டிகள் ஏதுமின்றி மீண்டும் ஆப்கானின் தலைவராக வருவார்" - என்றும் அவர் சொன்னார்.

புதிய அரசு அமைக்கப்பட்டு மூன்று வருடங்களில் பொதுத் தேர்தல்கள் நடத்தப்படும் என்று வென்ட்ரல் மேலும கூறினார்.

இதற்கிடையில் -

ஆப்கானிஸ்தானில் அமையவிருக்கும் புதிய அரசு தொடர்பாக ஆராய்வதற்காக ரஷ்ய உயரதிகாரிகள் குழு ஒன்று காபூலுக்குச் சென்றுள்ளது.

ரஷ்ய பாதுகாப்புத் துறை அமைச்சர் சேர்ஜி இவானோவ் தலைமையிலான குழுவே காபூல் சென்றுள்ளது. ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் காலத்தில் மூடப்பட்ட ரஷ்யத தூதரகம் மீண்டும் திறக்கப்படும் என்று இவானோவ் தெரிவித்தார்.

ஆப்கானில் புதிய அரசு அமைக்கும் விடயத்தில் ரஷ்யா மிகப்பெரும் பங்கு வகிக்கும் என்று கருதப்படுகின்றது. (ம)

# சரணடைவதற்கு தலிபான்கள் தயார்?

காபூல்,நவ.20



தலிபான் வேட்டையில் வடக்குக் கூட்டணியினர்

தலிபான்கள் வசம் உள்ள கடைசி நகரான குண்ட்சூ மீது அமெரிக்க விமானங்கள் இடைவிடாது நடத்திய தாக்குதல்களை அடுத்து தாம் சரணடையத் தயார் என்று தலிபான்கள் கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாகிஸ்தானிலிருந்து வெளியாகும் 'டான்' செய்தித்தாள் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

தலிபான்களின் வடபகுதித் தளபதியான முல்லா பஸில், சரணடைவதற்குத் தலிபான் தயாராக இருப்பதாகக் கூறியதாக அந்தச் செய்தித்தாள் கூறியுள்ளது. "சரணடைவதாக இருந்தால் ஐ.நாவின் மேற்பார்வையில்தான் சரணடைவோம்" - என்றும் அவர் கூறினார்.

தலிபான்கள் தத்தமது வீடுகளுக்குத் திரும்பி தமது குடும்பங்களுடன் இணைந்துகொள்ள அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் -

தலிபான்களின் கனரக ஆயுதங்கள் நடுநிலையான பராமரிப்பாளர் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் -

தளபதி மேலும் கூறியுள்ளார்.

அதேசமயம் -

சரணடைவது தொடர்பாகத் தலிபான்களிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக வடக்குக் கூட்டணிப் படைகளின் உள்துறை அமைச்சர் யுனுஸ் கானுமே கூறியுள்ளார்.

நிபந்தனை ஏதுமில்லாமல் சரணடைவதற்கு சில தளபதிகள் விரும்புவதாகவும், ஆனால் அவ்வாறு சரணடைவது ஆபத்து எனப் பெரும்பாலான தலிபான்கள் தெரிவித்ததாகவும் அவர் மேலும் சொன்னார். (ம)

# கொக்குவில் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை அதிபர் உயர்திரு. நா.ஜெயனொளிபவன் அவர்களின் அறுபதாம் அகவை நிறைவு 20-11-2001

## புதிய அதிபர், ஆசிரியர்களின் மனதிலிருந்து...

எங்களிடம் இருந்து பிரியாது சேவையிலிருந்து விடைபெறும் திருவாளர் நா.ஜெயனொளிபவன் அதிபர் S.L.P.S.2:I அவர்கள் 1990.11.07 இலிருந்து அதிபராக யா/கொக்குவில் சி.சி.த.க. பாடசாலையினை பொறுப்பேற்றவர். அவர் பொறுப்பேற்ற காலத்தில் பாடசாலை ஆளணி அற்ற, வளம் குறைந்த நிலையினைக்கொண்டிருந்தது. அவரது அயராத விடாமுயற்சியும் சேவையும் மனத் திடமும் சொல்லிலடங்காது.

ஆசிரியர்களுடனும் மாணவர்களுடனும் அன்பு கலந்த கண்டிப்புடன் நடந்து கொள்ளும் இயல்பினன். இப்பாடசாலைப் பிள்ளைகளின், பெற்றோரின் நிலைமையை அறிந்து இங்குள்ள மாணவரை உயர்நிலைக்குக் கொண்டுவரும் பேரவா நிறைந்தவர். அவர்களது இன்ப துன்ப நிகழ்வுகளில் தவறாது பங்குகொள்வார்.

விளையாட்டுப் போட்டியினை நடத்தி இவ்வருடம் முதல் தடவையாகப் பரிசளிப்பு விழாவும் நடத்தி தனது நிர்வாகச் சிறப்புக்கு முத்திரை பதித்துள்ளார். யாழ்.வலத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டிகளையும் உற்சாகமாக நடத்தி வைக்கும் ஆற்றல் வாய்ந்த விளையாட்டு நிபுணரும் அறிவிப்பாளருமாவார்.

கொக்குவில் கிராமத்தில் அவரது ஆலோசனை பெறாதவர்கள் யாரும் இருக்க முடியாது. இவர் மேலும் பல சிறப்புக்களைப் பெற்று நீண்ட ஆயுளுடன் வாழ வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

செல்வி கமலநாயகி கதிர்காமலிங்கம் (புதிய அதிபர்),
ஆசிரியர்கள், மாணவர்கள்.

## அரும்பணி ஆற்றிய அதிபர்

திரு.நா.ஜெயனொளிபவன் அதிபர் அவர்கள் கடந்த 39 வருடங்கள் கல்வி உலகுக்குத் தன்னை அர்ப்பணித்து தனது அறுபதாவது அகவையில் ஓய்வுபெறுக் கின்றார்.

சிறந்த ஆசிரியராய், அதிபராய் விளங்கி சிறந்த மாணவ சமுதாயத்தை உருவாக்கிய பெருமைமிக்கவர். ஆளுமையும், நிர்வாகத் திறனும், கடமை உணர்வும் கொண்ட இவர், எடுத்த காரியத்தைத் திறம்பட முடிக்கும் ஆற்றல் மிக்கவர். தன்னைத் தன் பாடசாலையில் மட்டும் வைத்திராது சமூகத்துடனும், ஏனைய பாடசாலைகளுடனும் நல்லுறவை ஏற்படுத்தித் தனக்கென ஓர் உயரிய இடத்தைப் பெற்றிருக்கிறார்.

மனித நேயம், அன்பு, இரக்கம், பொறுமை, இன்சொல் இவரின் சிறந்த குணங்கள், இறைபக்தியிலும், ஆலய சேவையிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

அவர் ஓய்வுபெற்றாலும் அவரின் சமூகப் பணிகள் தொடரவும், பல சிறப்புகள் பெற்று வாழவும் இறையருள்வேண்டி வாழ்த்துகின்றேன்.

திருமதி மா.வேதநாதன்
அதிபர், யா/கொக்குவில் மேற்கு, சி.சி.த.க.பாடசாலை.

## நல்லூர் கோட்டக்கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளரின் பாராட்டுச் செய்தி

திருவாளர்.ஜெயனொளிபவன் அவர்கள் தனது கல்வி ஞானத்தால் நல்லாசானாகவும், கோட்டக் கல்வி அலுவலக உதவியாளராகவும், அதிபராகவும் முப்பத்தொன்பது வருடங்களுக்கு மேலாகச் சேவையாற்றி, யா/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையில் தனது அளப்பரிய அதிபர் கடமையில் பொறுப்புணர்வுடன் பதினொரு வருடங்கள் பணிபுரிந்து பாடசாலைச் சமூகத்தின் நன்னலம் கருதிய சேவை நாயகனாக விளங்கி இன்று தனது அறுபதாவது வயதைப் பூர்த்திசெய்து சேவையிலிருந்து ஓய்வு பெறும் நாயகனது சேவை, கல்வி உலகில் மேலும் தொடர வேண்டுமெனப் பாராட்டி மனமார வாழ்த்துகின்றோம்.

திருமதி.ச.காங்கேயன்
உதவிக் கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்வி அலுவலகம்,
நல்லூர்.

(94672)



**திரு.நா.ஜெயனொளிபவன்**
(அதிபர், S.L.P.S. 2:1)

இவர் நாகலிங்கம் - பாக்கியம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரராக மலேசியாவில் பிறந்தார். பின்னர் தனது 4ஆவது வயதில் உடுவிலில் குடியமர்ந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் பயின்றார். பின் கனிஷ்ட சிரேஷ்ட கல்வியை யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகத்தில் கற்றார். 1954 ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட தமிழ்மொழி பேச்சுப் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றார். இவர் சிறந்த மெய்வல்லுநர், உதைப்பந்தாட்ட வீரர். நல்லூர் கோட்டத்தில் 1991ஆம் ஆண்டுக்கான நல்லாசிரியர் விருதினைப் பெற்றவர்.

இவர் தனது தொழில் தகைமையினை 1977/1978 காலப் பகுதியில் யா/கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் தமிழ்ப் பயிற்சி நெறியினை (T.T.) பெற்றவர். இவர் கொக்குவிலில் வாழ்ந்த சுப்பிரமணியம் அரியமலர் என்பவரை தனது வாழ்க்கைத் துணையாகக்கொண்டார். இவர்களுடைய இல்லற வாழ்க்கையிலே மூன்று பிள்ளைச் செல்வங்களைப் பெற்றெடுத்தனர். அவர்கள் 2 ஆண் பிள்ளைகளும் ஒரு பெண் பிள்ளையும் ஆவர். இவர்களில் மூத்த மகன் பொறியியலாளர், விரிவுரையாளர், லண்டன் கிங்ஸ்டன் பல்கலைக்கழகம், லண்டன். இவரின் மகள் திருமணம் புரிந்து ஜேர்மனியில் வாழ்ந்து வருகிறார். கடைசி மகன் கணனி இறுதியாண்டு மாணவன் (IBS).

### சமூக சேவை

கம்பளை பாடசாலைகளின் அதிபர்களின் செயலாளர் பதவி வகித்தார். அத்துடன் அகில இலங்கை தோட்டப் பாடசாலையின் பொருளாளர், செயலாளர் பதவிகளை வகித்தவர். தோட்ட கிராம ஒன்றிணைப்பு கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் பதவியினை வகித்தவர். 1977-1999 வரை வேம்படி முருகமூர்த்தி ஆலய நிர்வாக சபைத் தலைவராகச் செயல்புரிந்தவர். நல்ல சிறந்த ஆங்கிலக் கல்விப் போதனை ஆசிரியர். கொக்குவில் மேற்கு சனசமூக நிலையத்தில் சமூக சேவையினை மேற்கொண்டவர். இவரது சேவைக்காலம் 39 வருடங்கள் 6 மாதங்கள் 4 நாள்கள் ஆகும்.

## வலயக் கல்விப் பணிப்பாளரின் செய்தி

யா/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை அதிபர் திரு.நா.ஜெயனொளிபவன் அவர்கள் தமது சேவையிலிருந்து இளைப்பாறுதல் தொடர்பில் அவரை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆரம்ப காலக் கல்வியை உடுவில், சுன்னாகம் ஆகிய பிரதேசங்களிலுள்ள பிரபல்யமான பாடசாலைகளில் கல்வி கற்று, மலையகத்தில் தனது ஆசிரிய சேவையை ஆரம்பித்து, பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராகச் சேவை புரிந்து, யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய இடங்களில் கொத்தணி, வட்டாரம் ஆகிய நிர்வாகக் கூறுகளில் உதவியாளராகக் கடமையாற்றி; அதிபர் சேவையில் உயர்ந்து கடமையாற்றியுள்ளார்.

யாழ்ப்பாண பிரதேசக் கல்வி அலுவலகம் நடத்திய பொதுப் பரீட்சைகளிலும் சிறந்த சேவையாற்றியுள்ளார். இடைக்காலத்தில் முல்லைத்தீவு பிராந்திய கல்வி அலுவலகத்தில் திட்டமிடல் துறையில் உதவியாளராகச் சேவையாற்றியுள்ளார். தொடர்ந்து யாழ்ப்பாணத்திலுள்ள ஓர் ஆரம்ப பாடசாலை அதிபராக இருந்து மாணவச் சிறாரின் நலன் பேணும் அதிபராக, ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வுபெறுகின்றார்.

மும்மொழியிலும் தேர்ச்சியுள்ள, திறமையான கல்விமான் ஓய்வுபெறுவது எமது வலயத்திற் கற்கும் மாணவர்களுக்குப் பேரிழப்பாகும். இவர் தனது ஓய்வுகாலத்தில் சிறப்பாக வாழ எல்லாம்வல்ல இறைவன் அருள்பாலிப்பாராக.

திருமதிசெ.மகாலிங்கம்
வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

### சேவை விவரம்

| பாடசாலை | பதவி | காலம் தொடக்கம் | காலம் வரை |
|---|---|---|---|
| க/ரம்புரெல்ல தோ.த.க. பாடசாலை | உதவிஆசிரியர் | 15.05.1962 | 05.11.1967 |
| க/போமன் தோ.அ.த.க. பாடசாலை | தலைமை ஆசிரியர் | 06.11.1967 | 31.05.1977 |
| யா/கொழும்புத்துறை ஆ.ப. கலாசாலை | ஆசிரிய மாணவர் | 01.06.1977 | 31.12.1978 |
| க/போமன் அ.த.க. பாடசாலை | தலைமை ஆசிரியர் | 01.01.1979 | 15.01.1985 |
| யா/கொக்குவில் இந்து ஆ. பாடசாலை | உதவி ஆசிரியர் | 16.01.1985 | 31.12.1986 |
| யா/நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி | உதவியாளர் | 01.01.1987 | 20.05.1989 |
| யா/கொக்குவில் கொத்தணி | கொத்தணி உதவியாளர் | 21.05.1989 | 01.11.1990 |
| யா/கொக்குவில் ஸ்தான C.C.T.M.S. | அதிபர் | 07.11.1990 | 30.11.1995 |
| மு/கல்வித் திணைக்களம் | திட்டமிடல் உதவியாளர் | 26.01.1996 | 01.06.1997 |
| யா/கொக்குவில் ஸ்தான C.C.T.M.S. | அதிபர் | 02.06.1997 | இன்றுவரை. |


# நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் 2001

## யாழ். மாவட்டம்

## முஸ்லிம் காங்கிரஸின் ஒரேயொரு தமிழ் வேட்பாளர்

## ஞானசுந்தரம் ஆனந்தகுமார்

தமிழினத்தின் தன்மானம் காத்திடவும்
சுயநிர்ணய உரிமையுடன் சுதந்திரமாக வாழவும்
தமிழீழ விடுதலைப் புலிகள் தம் உயிர்களை
தியாகம் செய்து தமிழினத்திற்காகப் போராடுகின்றனர்.
தியாக வரலாற்றை எழுதிக்கொண்டிருப்பவர்களை சர்வதேச
நாடுகள் பல பயங்கரவாதிகள் என முத்திரை குத்தியுள்ளன.
ஆளும் கட்சியின் உயர் அமைச்சர்
இதற்காக ஒத்து ஊதித் திரிகின்றார்.
களத்தில் நின்று போராடும் போராளிகளின்
கரங்களை வலுப்படுத்த நாடாளுமன்றத் தளத்தில் நின்று
குரல் கொடுப்பேன்.








(C/19369)


## பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## முக்கிய அறிவித்தல்

வடக்கு-கிழக்கு புனரமைப்பு, புனர்வாழ்வு மாண்புமிகு அமைச்சர் **K.N.டக்ளஸ் தேவானந்தா** அவர்களால் எமது சங்க அங்கத்தவர்களுக்கு வழங்கப்படவுள்ள கொடுப்பனவு தொடர்பான கலந்துரையாடல் நாளை (2001.11.21) புதன்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள (ஸ்ரீதர் திரையரங்கில்) அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளதால் அதற்கு 2000 ஆம் ஆண்டு தொழில் புரிந்த சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகந்தரும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

*குறிப்பு: 18.11.2001 ஆம் திகதிய விளம்பரத்தில் 26.11.2001 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது தவிர்க்கமுடியாத காரணத்தால் நாளை (21.11.2001) புதன்கிழமை என மாற்றஞ்செய்யப்படுகிறது. எனவே அனைவரும் நாளை தவறாது சமுகம் தரும்படி வேண்டப்படுகிறீர்கள்.*

செயலாளர். தலைவர்.

*பளை ப.தெ.வ.அ.கூ.சங்கம்.*

(94677)

## மரண அறிவித்தல்

### நாகநாதர் பொன்னம்பலம்

*(பொன்னுத்துரை வாத்தியார்)*

சுன்னாகம் கிழக்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும்; வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதர் பொன்னம்பலம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) நேற்று (19.11.2001) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நாகநாதர் - பார்பதிப்பிள்ளையின் அருமைப் புதல்வனும், ஆறுமுகம் - இளையபிள்ளையின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அன்னலட்சுமியின் (அன்னம்) அன்புக் கணவரும், ஜெயதேவி (இந்தியா), தர்மவேல் (இந்தியா), தர்மதேவி (குட்டான்), தியாகராஜா (மன்னார்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற லிகிதர் - இந்தியா), பூர்ணஉதயம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், சாவகச்சேரி இ.க.), மகாலிங்கம் (பிரபல புகையிலை வர்த்தகர் - பெரியண்ணை), அருந்ததி (மன்னார்) ஆகியோரின் மாமனாரும், சுஜீதரன் (விண்வெளி ஆய்வாளர்-அமெரிக்கா), கவிதா (லண்டன்), மயூரன் (2000ஆம் ஆண்டு கணிதப் பிரிவு மாணவன்; யாழ்.இந்துக் கல்லூரி), கஸ்தூரி (இராமநாதன் கல்லூரி), அபிராமி (யூனியன் கல்லூரி);, தேனுயா (இந்தியா), துசியந்தி, விதுசன் (மன்னார்), ஜெயகாந்த் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும்,, ஷர்ஜோனாவின் (லண்டன்) அன்புப் பூட்டனும் சிவசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற பொலீஸ் திணைக்கள எழுதுவினைஞர், கரவெட்டி) அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2001) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*சுன்னாகம் கிழக்கு* தகவல்:
*சுன்னாகம்.* (94676) மகாலிங்கம் *(பெரியண்ணை)*

## உதயன்

### இணையத்தின் இணையிலா சேவை

"யாழ்.குடாநாட்டில் அவ்வப்போது ஏற்படும் நெருக்கடிகள், அவலங்களை வெளியுலகுக்குத் தெரியப்படுத்தி, சம்பந்தப்பட்டோருக்கு அழுத்தத்தைக் கொடுப்பதன் மூலம் அவ்வாறான நிலைமையைத் தளர்த்தி, பொதுமக்களை பொருளாதாரக் கஷ்டங்களில் இருந்து பாதுகாப்பதில் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் தீவிர தொண்டாற்றிவருகின்றது. இதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் நெருக்கடிகள் குறைகின்றன."

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைத்தின் பதினொராவது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் இவ்வாறு கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரை, மிக நெருக்கடியான காலகட்டத்தில், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் அவலத்தை நீக்கும் தொண்டுப் பணியில் முக்கிய நடவடிக்கையாக இணையம் ஸ்தாபிக்கப்பட்டது என்றால் அது மிகையாகாது.

இந்த ஒரு தசாப்தத்துக்கு அதிகமான காலத்தில் பல கஷ்டங்கள், நெருக்குதல்களை எதிர்கொண்டு தாண்டி வந்திருக்கின்றது இணையம். மக்களின் அவலத்தை - நெருக்கடிகளை - அம்பலப்படுத்தும்போது - புள்ளிவிவரங்களோடு வெளிப்படுத்தும்போது - வெகுஜன ஊடகங்கள் போன்று இணையமும் நெருக்குதல்களை, அழுத்தங்களை எதிர்கொள்ள வேண்டிய கஷ்டத்துக்குத் தள்ளப்பட்டே வந்திருப்பது யாதார்த்தம்.

அரசிலும், படையிலும், சிவில் நிர்வாகத்திலும் அரசின் சார்பாக பொறுப்பிலிருப்பவர்கள், இங்குள்ள உண்மை நிலை சர்வதேச மட்டத்தில் அம்பலப்படுத்தப்படுவதால் எழும் எரிச்சலை, அவற்றை அம்பலப்படுத்தும் ஊடகங்கள், இணையம் போன்ற பொது அமைப்புக்கள் மீதே காட்டி வந்திருக்கின்றனர்.

எனினும் அத்தகைய எதிர்ப்புக்கள் - நெருக்குதல்களுக்கு -அஞ்சாமல் தனது பணியை இணையம் இயன்றவரை சிறப்பாக ஆற்றியிருப்பது பாராட்டுக்குரியது.

அரசியல்வாதிகள் தங்கள் அரசியல் உள்நோக்கங்களுக்காக எதையும் கூறுவர். இராணுவ, சிவில் அதிகாரிகள் பதவியின் காரணமாக தமக்கு இருக்கவேண்டிய அரச விசுவாசத்தின் கட்டாயத்தால் அரசுக்குச் சார்பாகவே விடயங்களை முன்வைப்பர். ஆனால் அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களின் இணையம் மற்றும் சுதந்திர ஊடகங்கள் அப்படிச் செயற்பட முடியாது. மக்களின் பிரச்சினையை பிரதிபலித்து நெறிப்படுத்தும் கடமையும் பொறுப்பும் அவற்றுக்குரியவை.

உதாரணத்துக்கு அண்மையில் யாழ். ஆஸ்பத்திரியின் குறைபாடு குறித்து வானொலியில் பிரஸ்தாபிக்கப்பட்ட கருத்துக்களைக் கூறலாம். நிகழ்ச்சியை நடத்திய செய்தியாளரின் 'துடுக்கான' கேள்வி காரணமாகவோ அல்லது தமது அரசியல் நிலைப்பாட்டை ஸ்திரப்படுத்தும் நோக்குடனோ ஓர் அரசியல் பிரமுகர் யாழ். ஆஸ்பத்திரிக்குப் பெரிய குறைபாடுகள் இல்லை, அங்கு மருந்துத் தட்டுப்பாடே இல்லை என்று கருத்துக் கூறும் நிலை ஏற்பட்டுவிட்டது.

அதுபற்றிய, உண்மை நிலையை அரசு அதிகாரிகள் உறுதிப்படுத்த முடியாது. அல்லது அவர்களின் உறுதிப்படுத்தல் நியாயமானதாக இருக்குமென எதிர்பார்க்க முடியாது; எதிர்பார்க்கக் கூடாது.

இத்தகைய விடயங்களில் உண்மையை அம்பலப்படுத்தும் பொறுப்பு, இணையம் போன்ற பொது நிறுவனங்களையும் 'உதயன்' போன்ற ஊடகங்களையும் சார்ந்ததாக இருக்கின்றது.

இதேவரிசையில் தற்போது நிலவும எரிபொருள் பற்றாக்குறை விடயம் கூட சேர்த்துக்கொள்ளப்படக் கூடியதே.

இதுவிடயத்தில், அரசியல் கலப்பற்று - பொதுமக்களின் பிரச்சினைகளை இணையம் போன்ற அமைப்புக்கள் அம்பலப்படுத்தினால்தான் அவை, சர்வதேச மட்டத்தில், கூடிய நிறைகொடுத்து கணிக்கப்படும். உரிய நடவடிக்கை எடுக்க வாய்ப்பு ஏற்படும்.

யாழ்.குடாநாட்டில் இயங்கும் அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள், இத்தகைய விவகாரங்களில் தொடர்ந்து ஒற்றுமை பேணி, குடாநாட்டின் குரலாக ஒலித்து, மக்கள் குறை களையும் பணியில் தனது சேவையை மேலும் சிறப்புடன் ஆற்றவேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

---

20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கியும்

## மருதனார்மடம் பொதுச் சந்தை திருத்தம் செய்யப்படாத நிலையில்

### வியாபாரிகள், பொதுமக்கள் சிரமம்

வலிகாமம் தெற்கு,நவ.20

மருதனார்மடம் பொதுச்சந்தையின் புனரமைப்புக்கென 20 லட்சம் ரூபாவை வலி.தெற்கு பிரதேச சபையினர் ஒதுக்கீடு செய்துள்ள போதிலும், புனரமைப்பு வேலைகள் எதுவும் மேற்கொள்ளப்படாமையால் மழை காலத்தில் வியாபாரிகளும் பொதுமக்களும் பெரிதும் சிரமங்களை எதிர்கொள்ளவேண்டி ஏற்பட்டுள்ளது.

சந்தைக் கட்டடத்தின் கூரை அமைப்புக்கள் போடப்படாத இடங்களில் வியாபாரிகள் கயிறுகள் கட்டி சாக்குகளை அதில் போட்டு அதன் கீழ் இருந்து வியாபாரத்தை மேற்கொண்டுவருகின்றனர்.

மழைகாலத்தில் கூரைக்கட்டடத்துக்கு வெளியே மரக்கறிகளை வைத்து வியாபாரம் செய்யும் வியாபாரிகள், மழை பெய்யத் தொடங்கியதும் அவசரம் அவசரமாக தமது பொருள்களை நனையவிடாது கூரைக் கட்டடத்துக்குள் எடுத்துச் செல்கின்றனர்.

ஏற்கனவே அங்கு வியாபாரம் செய்பவர்களுடன் மழைக்காக ஒதுங்கும் பொதுமக்களும் சேர்ந்து பெரும் இடநெருக்கடியை உண்டுபண்ணுகின்றனர்.

மழையில் நனையும் வெங்காயம், மிளகாய் போன்ற பொருள்கள் பின்னர் அழுகிப் போய்விடுவதுடன், முளைகள் வந்து விற்கமுடியாத நிலையை ஏற்படுத்துகின்றன. இதனால் வியாபாரிகள் பெரிதும் நஷ்டம் அடைய நேரிடுகிறது.

மேலும் சந்தை வளவில் மழை நீர் வழிந்தோட முடியாது தேங்குவதால் அந்த அழுக்கு நீரில் நனையும் மரக்கறிகளை பின்னர் வாங்குவதற்குப் பொதுமக்கள் முன்வருவதில்லை. இதுவும் வியாபாரிகளுக்கு நட்டத்தை ஏற்படுத்தும் செயலாக விளங்குகின்றது.

உரிய ஒதுக்கீட்டு நிதியைப் பயன்படுத்தி சந்தையை விரைவில் புனரமைப்புச் செய்யவேண்டுமென வியாபாரிகளும் பொதுமக்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(க-152)

---

## வாகரை உதவி அரச அதிபர் கடத்தப்பட்டார்

மட்டக்களப்பு வாகரை உதவி அரசாங்க அதிபர் எஸ்.டி.பாலசுப்பிரமணி கடந்த சனிக்கிழமை விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் கடத்திச் செல்லப்பட்டிருப்பதாக இணையத்தளச் செய்தி ஒன்று தெரிவித்தது.

உதவி அரச அதிபர் அவரது வாகனத்துடன் கடத்தப்பட்டிருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் படையினரிடமும் செஞ்சிலுவைச் சங்கத்திடமும் முறையிட்டிருக்கிறார். (ஐ)

---

## பங்கீட்டு முறையில் பெற்றோல் விநியோகம்

தென்மராட்சி,நவ.20

கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்க எரிபொருள் நிலையத்தில் அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளின் வாகனங்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் பெற்றோல் வழங்கப்படுகிறது.

சங்கத் தலைமை அலுவலகத்தினால் வழங்கப்படும் விசேட 'பெர்மிட்'களுக்கே பெற்றோல் விநியோகிக்கப்படுகிறது. (க-117)

---

## புன்னாலைக் கட்டுவனில் மாடுகளுக்கு நாளை தடுப்புமருந்து

புன்னாலைக்கட்டுவன்,நவ.20

மாடுகளுக்கு ஏற்படும் தொண்டையடைப்பான் நோய்க்கு எதிரான தடுப்புமருந்து ஏற்றுதல் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு புன்னாலைக்கட்டுவன் கணேசா சன சமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

கால்நடை வளர்ப்போர் அன்றைய தினம் தவறாது தமது மாடுகளுக்குத் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள வேண்டுமென வலி.தெற்கு கால்நடை வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (க-7-133)

---

### நாளை

கார்த்திகை 6
புதன்கிழமை
திதி : ஷஷ்டி
பிற்பகல் 2.31 வரை.
நட்சத்திரம் : திருவோணம்
பின்னிரவு 3.05 வரை.
ஸ்கந்தஷஷ்டி விரதநாள்
சுபநேரம் : 4.40 - 5.10
ராகுகாலம் : 12.10 - 1.40
(பழைய நேரப்படி)

---

## நாட்டு நடப்பு

களவு - IV

முன்னம் ஒருகால் மூஷிகனே உனை நினைக்காமல்
வண்ணமுறு வீடு ஒன்றைச் சுருட்டி விட்டேன் - கண்கெட்ட
ஊர்காவற் படையார் உடனே துரத்திவந் தெனைப் பிடிக்க
சீரழிந்து சிக்குண்டேன் சினந்து.

- விகடகவி.

---

புதிய கல்வி ஆண்டில் அனுமதிகள்

## தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு இம்முறை கஷ்டப் பிரதேசங்களில் இருந்தும் 25 வீத மாணவர்

முதல் தடவையாக நேர்முகப் பரீட்சை மல்லாவியிலும்

யாழ்ப்பாணம்,நவ.20

தேசியக் கல்வியியற் கல்லூரிகளுக்கு புதிய கல்வியாண்டில் கஷ்டப் பிரதேசங்களில் இருந்தும் 25 வீத மாணவர்கள் தெரிவுசெய்யப்படுவர் என வவுனியா கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி செ.அழகரெத்தினம் அறிவித்துள்ளார்.

புதிய மாணவர் அனுமதியில் புள்ளி முன்னுரிமை அடிப்படையில் 75 வீத மாணவர்கள் தெரிவுசெய்யப்படுவர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

2001 ஆம் ஆண்டுக்குரிய தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு ஆசிரிய பயிலுநர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் கல்வி உயர் கல்வி அமைச்சினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் வவுனியா, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய மூன்று தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கும் ஆசிரிய மாணவர்களை அனுமதித்தல் பற்றிய தகைமையை பரிசீலனை செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகளை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி தலைமையிலான நேர்முகப் பரீட்சைக்குழு நடத்தவுள்ளது.

ஆரம்பக் கல்வி, கணிதம், விஞ்ஞானம், உடற்கல்வி, மனைப்பொருளியல், விவசாயம், இந்துசமயம், கத்தோலிக்க சமயம், தமிழ்மொழி, சமூகக்கல்வி, தொழில்நுட்பக் கல்வி, நூலக விஞ்ஞானம், சித்திரம், சங்கீதம், நடனம் ஆகிய பாடநெறிகளுக்கான தமிழ்மொழி மூல மாணவர்களைத் தெரிவுசெய்வதற்குரிய நேர்முகப் பரீட்சைகள் திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மல்லாவி ஆகிய ஐந்து இடங்களில் இம்முறை நடத்தப்படவுள்ளன. இதற்குரிய அனைத்து அழைப்புக் கடிதங்களும் உரிய விண்ணப்பதாரிகளுக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கோப்பாயில் இயங்கும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இந்தமாதம் 26ஆம், 27ஆம், 28ஆம், 29ஆம், 30ஆம் திகதிகளிலும் -

வன்னிப் பகுதி மாணவர்களுக்காக இம்முறை முதற்றடவையாக மல்லாவி வலயக் கல்வித் திணைக்களத்தில் டிசெம்பர் மாதம் 8ஆம், 9ஆம், 10ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளன.

அவ்வப் பகுதியைச் சார்ந்த மாணவர்களின் நலன், செலவுச் சிக்கனம் ஆகியவை கருதியே இம்முறை இவ்விசேட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-7)

---

## எமது மண்ணில் நிரந்தர சமாதானம் ஏற்பட பக்தி எழுச்சிப் பிரார்த்தனை வழிகாட்டட்டும்

### இந்துசமயப் பேரவை நிகழ்வில் அருட்கவி உரை

யாழ்ப்பாணம்,நவ.20

பக்தி எழுச்சிப் பிரார்த்தனை எமது மண்ணில் நிரந்தர சமாதானம் ஏற்பட வழிகாட்டட்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் அருட்கவி சீ.விநாசித்தம்பி.

யாழ்.இந்து சமயப்பேரவை ஏற்பாடு செய்த பக்தி எழுச்சிப் பிரார்த்தனை கடந்த தீபாவளி அன்று இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்றது. இந்தப் பிரார்த்தனை நிகழ்வுக்குத் தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே அருட்கவி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமதுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

எமது மண்ணில் நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டும் என பிரார்த்திக்கும் வகையில் பக்தி எழுச்சிப் பிரார்த்தனை நடத்தப்படுகிறது. இசைத்துறையில் வல்லவர்கள் அனைவரும ஒன்றுகூடி இசையினால் இறைவனைப் போற்றுவது இந்தப் பிரார்த்தனையின் முக்கிய அம்சமாகும்.

நரகாசுரன் வதம் செய்யப்பட்ட தீபாவளி நாளில், தேவர்கள் மகிழ்வடைந்ததுபோல், நாமும் சாந்தி, சமாதானம் வேண்டி, சமாதானத் தீபத்தை ஏற்றி பக்தியுடன் வழிபாடு நிகழ்த்த வேண்டும் - என்றார்.

ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு தமதுரையில்:-

இந்த நாட்டில் கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக நடைபெறும் போர் ஓய்ந்து சமாதானம் ஏற்பட வேண்டும் என்று அனைவரும் விரும்புகின்றனர். எனினும் அரசியல்வாதிகளின் தீர்க்கதரிசனம் அற்ற அணுகுமுறையே இன்று நடைபெறும் போருக்கு வழிசமைத்துள்ளது. இன்றைய சூழ்நிலையில் அரசியல்வாதிகளைப் பார்த்து நாம் ஒன்றைக் கூறிவைக்க விரும்புகின்றோம் நாடாளுமன்றக் கதிரைகளைப் பிடிப்பதற்காக, உங்களுக்குள்ளே போட்டி போட்டு அடிபட்டுக்கொள்வதை நிறுத்திவிட்டு, இந்நாட்டின் நலனுக்காகச் செயற்படுங்கள் எனபதே அந்த வேண்டுகோளாகும்.

நீங்கள் நாடாளுமன்றம் சென்றால் தமிழையும் சைவத்தையும் காப்பாற்றுவதற்கு உங்களால் இயன்றவற்றைச் செய்யுங்கள். சிங்கள மக்களிடையே ஏற்பட்டுள்ள மொழி, மத எழுச்சியை ஏன் உங்களால் இங்கு ஏற்படுத்த முடியாது? இதனையே உங்களைப் பார்த்து நாம் கேட்கின்றோம் - என்றார்.

யாழ்பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவரும், இந்து சமயப் பேரவை உப தலைவருமான பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் பேசுகையில்:-

இந்த நாட்டின் பெரும்பான்மைச் சமுதாயமான சிங்கள இனம், தமக்கே இந்த நாடு சொந்தம் எனக் கூறியதால், தமிழ் மக்கள் தமது உரிமைகளை இழக்க வேண்டியதாயிற்று. இழந்த உரிமைகளை மீளப் பெற்று நம்மை நாமே ஆள்வதற்காக எமது தமிழ்த் தலைவர்கள் பல சாத்வீகப் போராட்டங்களைத் தொடக்க வேண்டியதாயிருந்தது. எமது மக்களில் பெரும்பான்மையினர் அஹிம்சைப் போராட்டத்தையே வரவேற்றனர்.

இலங்கை அரசாங்கம் சாத்வீகப் போராட்டத்துக்கு மதிப்பளிக்காத காரணத்தால், தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தாங்கிய போராட்டத்துக்கு தம்மைத் தள்ள வேண்டிய நிலைக்கு ஆட்பட்டனர். இந்த முடிவைத் தமிழ் இளைஞர்கள் விரும்பி மேற்கொள்ளவில்லை. இந்த மனவருத்தமான முடிவிற்கு எமது இளைஞர்களை ஆட்படுத்தியமைக்கான முழுப்பொறுப்பையும் இலங்கையை மாறி, மாறி ஆண்ட அரசாங்கங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் - என்றார்.

இவ்விழாவின் இயலிசை வாரிதி பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர் சமாதான கீதத்தை இசைத்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் நா.வி.மு.நவரத்தினம், சங்கீத பூஷணம் ந.சிவசண்முகமூர்த்தி, விரிவுரையாளர் எஸ்.தர்சன், செல்வி சிவகௌரி ஆகியோர் சிறந்த குயிலுவக் கலைஞர்களோடு பக்திக் கீதங்களை இசைத்தனர். (க-7)

---

## பகவான் பாபாவின் ஜயந்தி தின விழா

மானிப்பாய் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பகவான் பாபாவின் 76 ஆவது ஜெயந்தி தின விழா நடைபெறவுள்ளது,

அஷ்டோத்திரம், பஜனை என்பன இடம்பெற்று "அவதார மகிமை" என்னும் தலைப்பில் வைத்தியகலாநிதி ஆர்.கணேசமூர்த்தி நிகழ்த்தும் சிறப்புரையும் இடம்பெறும். (க-7-90)

---

### உதயவாக்கு

அடக்கம் ஓர் அணிகலன் மட்டுமன்று; அது ஒழுக்கத்தின் பாதுகாப்புமாகும்.

---

## வன்செயல்களைக் கட்டுப்படுத்துமாறு பொலீஸாருக்கு ஜே.வி.பி. கடிதம்

கொழும்பு,நவ.20

தேர்தல் தினம் நெருங்க, நெருங்க வன்செயல்களும் அதிகரித்த வண்ணம் உள்ளன. நீதி, நியாயமான தேர்தல் இடம்பெற வன்செயல்களைக் கட்டுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை உடனே எடுங்கள்.

-இவ்வாறு பொலீஸ் மா அதிபரிடம் கோரியுள்ளது ஜே.வி.பி.

அதன் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, பொலீஸ் மா அதிபருகக்கு அனுப்பியுள்ள அவசர கடிதம் ஒன்றில் இந்தக்கோரிக்கையை விடுத்துள்ளார். தேர்தல் தினத்துக்கு இன்னும் இரண்டு வாரங்களே இருக்கும் போது வன்செயல்கள் அதிகரித்துக் கொண்டே போகின்றன.

கூடுதலான வன்செயல்கள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஐ.தே.கட்சியும் வன்செயல்களில் ஈடுபட்டுள்ளது. வன்செயல்கள் அதிகரிப்பை நோக்கும்போது நீதி, நியாயமான தேர்தல் இடம்பெறுமா என்ற கேள்வியே எழுந்துள்ளது.

- இவ்வாறு கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

NOKIA கையடக்கத் தொலைபேசிக்குரிய புதிய பற்றறிகள் சார்ச்சருடன் விற்பனைக்கு உண்டு. SANYO கையடக்கத் தொலைபேசிக்கு உரிய அதி சக்திவாய்ந்த அன்டனாக்களும் விற்பனைக்கு உண்டு. உங்களது கையடக்கத் தொலைபேசியுடன் மாலை 4 மணிக்குப் பின்னர் நேரில் தொடர்பு கொள்ளவும். எஸ்.தவநாயகம், சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலி. 070-212559. (94617)

## முட்டையிடும் கோழி விற்பனைக்கு

18.05.2001இல் அச்சுவேலிப் பண்ணையில் இருந்து பெறப்பட்டு ஒழுங்கான கூட்டு வளர்ப்பில் 04.10.2001இல் இருந்து முட்டையிடும் நிலையிலுள்ள 20 கோழிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.55, சீனியர் லேன், யாழ்ப்பாணம். (94664)

## தவறிவிட்டது

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த கந்தசாமி மாலதி என்பவருடைய வீ.அ.அ. (இல.091033960), தேசிய அ.அ. (இல. 758042413V) என்பன நெல்லியடியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள், நெல்லியடி லவ்லி கூல்பாரில் அல்லது செ.சுப்பிரமணியம் (தலைவர், ப.நோ.கூ.சங்கம்), துரையன் தோட்டம், நெல்லியடி, கரவெட்டி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.(94641)

களையோடை அம்மன் வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய் எனும் முகவரியைச் சேர்ந்த சுப்பிரமணியம் தேவராசா என்பவருடைய தேசிய அ.அ. (இல.620541915V), விசேட அ.அ. (இல.0905021612) இரண்டும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள விலாசத்தில் ஒப்படைத்துதவவும். (94663)

## இலகு திருமண சேவை

1967, செவ்வாய் 2, பூரட்டாதி, உத்தியோக மணப்பெண்ணுக்கு வெளியூரிலும், 1965, பூரட்டாதி, செவ்வாய் 2 மணப்பெண்ணுக்கு உள்ளூரிலும் மணமகன்கள் தேவை. இருவருக்கும் சீதனமுண்டு. துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (94456)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 24 வயது, பட்டப்படிப்புப் படிக்கும் அழகிய மணமகளுக்கு லண்டன், படித்த, ஸ்பொன்ஷர் மணமகன் தேவை. தொடர்பு: விள.இல.1396, மே/பா உதயன். (94669)

## வீடற்றவன்

வானொலியில் வாழ்க்கைகள் பல விதம் நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல் வீடற்றவன் நாவலின் விளக்கமும் விமர்சனமும். ரூபா 25/- (94666)

## தொண்டர் ஆசிரியர் அவசர ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,நவ.20

நிரந்தர ஆசிரியநியமனத்திற்காக நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றிய யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள், பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் அனைவரையும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஆரியகுளத்தடியில் உள்ள யாழ். புதிய உயர்கலைக்கல்லூரியில் கூடுமாறு தொண்டர் ஆசிரியர் சங்கத்தினதும், பகுதிநேர ஆங்கில ஆசிரிய சங்கத்தினதும் தலைவர்கள் கேட்டுள்ளார்கள். (க-173)

## கொடிகாமம் பஸ் வரணி சந்தையுடன் நிறுத்தம்

தென்மராட்சி,நவ.20

பருத்தித்துறையிலிருந்து கொடிகாமத்திற்கான பஸ் சேவை கடந்த சில்தினங்களாக வரணி சந்தை வரையே நடத்தப்பட்டு வருவதால் கொடிகாமம், மிருசுவில் ஆகிய பகுதி பயணிகள் சிரமப்படுகின்றனர்.

வரணி 'அம்மா' கடையடிப் பகுதியில் போக்குவரத்துக்கென அமைக்கப்பட்ட மண் வீதியில் வெள்ளம் தேங்கி நிற்பதால், அப்பகுதியூடாகச் செல்லும் வாகனங்கள் புதைவதை அடுத்தே பஸ் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-117)

# மக்கள் விழிப்புக் கருத்தரங்குகள்

மாரிகாலத் தொற்று நோய்களைத் தடுப்பது தொடர்பாக கரணவாய்ப் பகுதி பொது நிலையங்களில் பொது மக்கள் மத்தியில் விழிப்புக்கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கரணவாய் சுகாதாரப் பரிசோதகரின் ஏற்பாட்டில் இக்கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. (க-173)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

20-11-2001

HAPPY



BIRTHDAY

### செல்வன் கி.ஜெயப்பிரணவ சர்மா

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த

பிரம்மஸ்ரீ கிருஷ்ணேஸ்வரக் குருக்கள் - சிவசோதி

தம்பதியரின் செல்வப்புதல்வன்

*செல்வன் ஜெயப்பிரணவ சர்மா*

அவர்கள் தனது முதலாவது பிறந்தநாளை இன்று (20-11-2001) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

ஜெயப்பிரணவ சர்மாவை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, மற்றும கொழும்பில் வசிக்கும் நடேச சர்மா தம்பதியினர், ஆனைக்கோட்டையில் வசிக்கும கௌரீஸ்வர சர்மா தம்பதியினர், சங்கானையில் வசிக்கும் சிவசர்மா தம்பதியினர், கரணவாயில் வசிக்கும் நாகேஸவர சர்மா தம்பதியினர், நந்தாவிலில் வசிக்கும் சந்தனக்குருக்கள் தம்பதியினர், நாகேஸ்வரி அம்மா தம்பதியினர் மற்றும் உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரும் விநாயகப் பெருமான் திருவருள் பெற்று, சகல செல்வத்துடனும், சௌபாக்கியத்துடனும் சீரும் சிறப்புமாக பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.

*சங்கரப்பிள்ளை வீதி,*
*ஆனைக்கோட்டை.*

பிரம்மஸ்ரீ க.கிருஷ்ணேஸ்வரக் குருக்கள்
*(தந்தை)* (C/19368)

## மூன்றாவது பிறந்ததின வாழ்த்துக்கள்

20-11-2001



ஜேர்மனியில் வசிக்கும்

திரு.திருமதி விக்மறாஜ் - கீதா தம்பதியினரின்

### செல்வப் புதல்வி திவ்வியா

தனது மூன்றாவது பிறந்த தினத்தை இன்று (20.11.2001) செவ்வாய்க்கிழமை ஜேர்மனில் இருக்கும் தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

திவ்வியாவை அன்பு அப்பா, அம்மா, சித்தப்பா, சித்திமார், லண்டனில் வசிக்கும் மதன் சித்தப்பா, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் ஆசை அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, மாமா, மாமிமார், பெரியப்பா, பெரியம்மா மற்றும் ஜேர்மனில் வசிக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகிய நாம் அனைவரும் குழந்தை யேசுவின் அருளால் பலகலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம்.

*11, கொண்டடி வீதி,*
*குருநகர்.* (94655)

வாழ்த்துவோர்:
அ.யேசுதாசன் தம்பதியினர்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவரும்
சைவவித்தியாவிருத்திச் சங்க உப தலைவருமான
**பேராசிரியர்**
**ப.கோபாலகிருஷ்ண ஐயர்**
அவர்கள் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதியாக நியமிக்கப்பெற்றமையை மனங்கனிந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*"சிவகிரி"*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

சிவஸ்ரீ சு.முத்துக்குமாரசாமிக் குருக்கள்,
(சிவாச்சார்ய பீடாதிபதி)
சிவஸ்ரீ க.சோமசுந்தரக் குருக்கள்,
சிவஸ்ரீ தி.சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்,
அனைத்துலக சைவக்குருமார் அர்ச்சகர் பேரவை.
(94668)

## மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதியாகப் பதவியேற்றுள்ள சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியத்தின் கௌரவ வித்வத் சபைத் தலைவராக இருந்து தமிழுக்கும், இந்துசமயத்திற்கும் பெரும் தொண்டாற்றிவரும் பேராசிரியர் கலாநிதி **பிரம்மஸ்ரீ ப.கோபால கிருஷ்ணஐயர்** அவர்கள் மேலும் சிறந்த உயர் பதவிகளைப் பெற்று சிறப்புடன் வாழ மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

***- சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியம்.***

*தலைமைச் செயலகம்,*
*யாழ்ப்பாணம்.* (94674)

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகிறோம்

எமது ஆலயத் திருப்பணிக்கு நிதி வழங்கி
சிறப்புற அமைய உதவிய,



வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு,
இந்துசமய கலாசார அமைச்சர்
மாண்புமிகு
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



வடமராட்சி பிரதேச ஈ.பி.டி.பி.
அமைப்பாளரும், பருத்தித்துறை பிரதேச
சபைத் தலைவருமான
உயர்திரு. **ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்**
அவர்களையும்

*மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

பரிபாலனசபை
**வெள்ளுருவை ஞானவைரவர் ஆலயம்**
அல்வாய் கிழக்கு, அல்வாய்.
(C-19364)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு

நடத்தும்

## சமய அறிவுப் போட்டி - 2001

வலயக் கல்விப் பணிப்பாளர்களின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே 04 பிரிவுகளைக் கொண்ட சமய அறிவுப் போட்டியை (எழுத்துப் பரீட்சை) பின்வரும் 04 நிலையங்களிலும் நடத்துவதென எமது குழு ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

01. யா/வட இந்து மகளிர் கல்லூரி
02. யா/இராமநாதன் கல்லூரி
03. யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
04. யா/இந்து மகளிர் கல்லூரி

தீவகத்திலிருந்து கணிசமான மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்றுமிடத்து அங்கும் பரீட்சையை நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாணவர்களின் பாடத்திட்டத்திற்கமைவான மேற்படி போட்டியில் அனைத்து மாணவர்களும் தவறாது பங்குபற்றி தமது திறமைகளை வெளிப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேற்படி போட்டிக்குரிய விண்ணப்பப் படிவங்களை 15.12.2001ஆம் திகதி வரை பாடசாலை அதிபர்களிடமிருந்தோ அன்றேல் யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகங்களிலிருந்தோ ரூபா 10/=ஐ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

***பரீட்சைத் திகதி - 23-12-2001 முற்பகல் 9.30 மணி***

சைவசமய விவகாரக் குழு,
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.
(C-19367)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை

சுன்னாகம்/உடுவில்/ஏழாலை உப அலுவலகங்கள்

## ஆதனவரி அறிவித்தல்கள் - 2002

1987ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் கட்டளைச் சட்டம் இல.15 இன பிரகாரம் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் சார்பாக, ஆதனவரி அறவீடு சென்ற வருடம் அறவிட்ட விகிதத்தின் பிரகாரம் 2002ஆம் ஆண்டும் அறவீடு செய்யப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2002ஆம் ஆண்டுக்கான ஆதனவரியை 31-01-2002ஆம் திகதிக்கு முன்னர் முழுமையாகச் செலுத்துபவர்களுக்கு இவ்வருடத்துக்கான மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். இவ்வொரு கந்தாயத்திற்கும் உரிய வரியை அந்தக் கந்தாயத்தின் முதல் மாத இறுதிக்குள் செலுத்துபவர்களுக்கு அக்கந்தாயத்துக்கான வரியின் 5% கழிவு வழங்கப்படும்.

குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியைச் செலுத்தத் தவறின், வசிப்பிடங்களுக்கும், வெற்றுக்காணிகளுக்கும் 15%மும், ஏனைய ஆதனங்களுக்கு 20%மும் விறாந்துக் கட்டணமாக ஆதனவரியுடன் சேர்த்துச் செலுத்தப்படவேண்டும்.

ஆதலினால் வரியிறுப்பாளர்கள் தங்கள் ஆதனங்களுக்கான வரியை 2002-01-31ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன்பதாக அந்தந்த அலுவலகங்களில் முழுவதுமாகச் செலுத்தி சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

*குறிப்பு:-*

01. சேதமடைந்தும், காலியாகவுள்ளதுமான ஆதனங்களுக்கான வரிவிலக்கல்கள் மற்றும் ஏதாவது ஆட்சேபனைகளுக்குமான விண்ணப்பங்கள் யாவும் எழுத்துமூலமாக 2002-01-31ஆம் திகதிக்கு முன்பதாக அந்தந்த அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
02. தற்போதைய காலச் சூழ்நிலை காரணமாக வருடாந்த ஆதனவரி அறிவித்தல்கள் காலதாமதமானாலும் இந்த அறிவித்தலையே ஆதனவரி அறிவித்தலாக ஏற்று தங்கள் தங்கள் ஆதனங்களுக்கான ஆதனவரியை உரிய காலங்களில் செலுத்தி நிர்வாகத்துடன் ஒத்துழைக்குமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோன்.

*வலி. தெற்கு, பிரதேச சபை,*
*சுன்னாகம்.*
2001-11-19

க.கமலசேகரன் ஜே.பி.யு.எம்,
தலைவர்
வலி.தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
(C/19366)

# புதுக்குடியிருப்பில் நாம் வாழ்ந்த வீடு அழகானதொரு விலங்குகள் காப்பகம்

**விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் துணைவியாரான அடேல் பாலசிங்கத்தின் 'சுதந்திர வேட்கை' என்னும் ஆங்கில நூலின் மொழிபெயர்ப்புத் தொடர் இது.**

யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்துவந்த மற்றொரு குடும்பத்தினர் எங்கள் வீட்டின் பின்பக்கத்திலிருந்த தரவை நிலத்தில் வசித்தனர்.

இவர்கள் தங்கள் குடும்பத்தின் நகைகள் மற்றும் பொருள்களை ஈடு வைத்து ஒரு சிறிய வீட்டைக் கட்டினர். தங்களுடைய கௌரவத்தைக் காப்பாற்றவும் மரியாதையான வாழ்க்கையை நடத்தவும் பெற்றோரும் அவர்களுடைய வளர்ந்த பிள்ளைகளும் படாதபாடுபட்டனர்.

அசல் யாழ்ப்பாணத்தவர்களுக்குரிய பெருமையுடன் இவர்கள் தனியாக ஒதுங்கியே வாழ்ந்தனர். ஆயினும் தங்களுடைய ஏழ்மையைத் தங்களுக்கு மிக நெருங்கிய சில நண்பர்களுக்கு மட்டுமே வெளிப்படுத்தினா.

**தமிழில் : எம்.ஜீ.**


தாயும் மகளும் தங்கள் தேவைக்கு விறகு பொறுக்கி, தங்கள வருவாய்க்குட்பட்ட முறையில் உணவு சமைத்து அமைதியாக வாழ்க்கையைக் கொண்டுநடத்தினர்.

இந்தத் தாயும் மகளும் தமிழர்களுக்குரிய தாராள மனப்பான்மைக்கேற்ப எனக்கு ஒழுங்காக சர்க்கரைப பொங்கலும் வாழைப்பழங்களும் தருவார்கள். சந்தோஷமான அன்பளிப்புகளையும் அனுப்பிக்கொண்டிருப்பார்கள்.

இந்தக் குடும்பம் தமிழீழ விடுதலைப் புலிகளின் அசைக்க முடியாத ஆதரவாளர்கள். ஒரு மகனும் ஒரு மகளும் ஏற்கனவே விடுதலைப் புலிகளுடன் இணைந்துகொண்டார்கள். மற்றொரு மகள் தனது இருபது வயதின் தொடக்கத்தில் கரும்புலிகள் அமைப்பில் ஓர் உறுப்பினரானார்.

தாயாரின் உருக்கமான வேண்டுகோளில் மனமுருகிப்போய் விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து வெளியேறி மீண்டும் குடும்பத்துக்கு வந்து சேர்ந்தார்.

ஆனால் இரண்டு பிள்ளைகளும் தொடர்ந்து விடுதலைப் புலிகளுடனேயே இருந்தனர். கடைசியில் வறுமையினால் இந்தக் குடும்பம் அக்கரைப் பச்சையைத் தேடி வெளிநாடு செல்லவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளானது.




அவர்கள் புதிய வாழ்க்கையைத் தொடங்குவதற்காக இந்தியாவுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். போகும்போது அவர்கள் செல்லமாக வளர்த்த புத்திக்கூர்மையுடைய அழகான வெள்ளை பொமனேரியன் நாய்க்குட்டியை எனது பராமரிப்பில் விட்டுச்சென்றனர்.

எங்களின் மற்ற அயலவர்கள் புதுக்குடியிருப்பில் காலம் காலமாக வாழ்ந்துவந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். வேறுபட்ட மக்களைக் கொண்டிருந்தாலும் புதுக்குடியிருப்பு சமூக அமைப்பில் இரண்டு மூன்று குடும்பங்கள் மூத்த குடியினராக இருந்தனர்.

இவர்கள் தங்களுடைய ஆதனங்களுக்கு நிரந்த சொந்தக்காரர்களாக இருக்க வேண்டிய அவசியமிருந்தது. இநதுக்களாக வாழும் இவர்கள், தங்களுக்குள்ளேயே திருமணம் செய்துகொள்ள வேண்டியது அவர்களுக்குள்ள சட்டமும் சம்பிரதாயமுமாகும். முற்காலத் தமிழர்களின் பழக்க வழக்கங்களைப் பின்பற்றி இந்த மக்களின அன்றாட வாழ்க்கை ஆலயங்களையும் சமயச் சடங்குகளையும் சுற்றியே வருகின்றது.

எப்படியாயிருந்தாலும் இந்த மக்கள் தங்கள் வாழ்க்கை நடைமுறையில் எனக்கும் இடம் தந்தனர். தங்களுடைய சமூகச் சடங்குகளுக்கு அடிக்கடி என்னையும் அவர்கள் அழைத்தனர்.

அந்த வீட்டுக்கார அம்மா வைபவங்களுக்கு பொங்கல் பொங்கித் தருவார். இது வழமையான நடைமுறை.

அவருடைய பத்து வயது மகன் தனது தாயார் கொடுத்த பொங்கல் பிரசாதத் தட்டுடன் எனது வீட்டுச் சமையலறை வாயிலில் அடிக்கடி காணப்படுவான்.

### அணில்களும் மயில்களும்

பாலாவின் அலுவலகத்தைச் சூழ்ந்து மகிழ்ச்சியுடன் விளையாடும் அணில்களுக்கும், எங்களின் சக்தி, சிவா என்ற இரு மயில்களுக்கும் ஊட்டுவதற்காக அந்த அம்மையாரின் கணவர் சாக்கு மூடைகள் நிறைய கச்சான் கடலைகளை பாலாவுக்கு கொடுத்திருந்தார்.

நாங்கள் 'பரா'என்று அன்புடன் அழைக்கும் பரராஜசிங்கத்துக்கு இந்தக் குடும்பம் நெருங்கிய உறவுடையது. எங்கள் குடும்பத்தின் நெருங்கிய நண்பரும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் நீதித்துறைத் தலைவருமான பரா அருகில்தான் வசித்து வந்தார்.

தென்னையும் மரமுந்திரிகையும் சோலையாக வளர்ந்து நிற்கும் நான்கு ஏக்கர் காணியில் எங்கள் புதுக்குடியிருப்பு வீடு ரம்மியமான சூழலில் அமைந்திருந்தது.

பல்வேறு வகையான அழகிய பறவைகள், மிருகங்கள், ஊர்வனவும் கூட இங்கு எங்களுடனும் எங்களைச் சூழ்ந்தும் வாழ்ந்து வந்தன. அந்த இடம் விலங்குகள் காப்பகம் போல் காட்சியளித்தது.

எங்கள் வீட்டு வளவில் கட்டுப்பாடற்ற கொடிய நாக பாம்பைத் தவிர எந்தப் பிராணியையோ, பறவையையோ எவரும் கொல்லமுடியாது; தீங்கு செய்யவும் எவருக்கும் அனுமதி கிடையாது.

இந்த நடைமுறை பற்றி அந்தப் பிராணிகள் பலவற்றக்கும் தெரிந்திருக்கும் போலிருக்கிறது. அணில்கள் துள்ளிக் குதித்து விளையாடின. மயில்கள் ஆற அமர நடந்தும், சில சமயங்களில் ஆடியும், களித்தும் திரிந்தன.

சாப்பிட ஏதாவது கிடைக்குமா என்று கட்டாக்காலி நாய்கள் வந்து எட்டிப்பார்த்துச் சென்றன. பூனைகள் வந்து சுற்றித் திரிந்தன. பறவைகள் தங்கள் கூடுகளை அமைத்துப் புதிய குஞ்சுகளை பூரண பாதுகாப்பிற்கிடையில் பொரித்து புதிய பரம்பரையைத் தோற்றுவித்தன.

கிணற்றில் நாங்கள் குளிப்பதிலும் தோய்ப்பதிலிமிருந்து வெளியேறும் நீரைப் பயன்படுத்துவதற்காக நாங்கள் நட்டு வளர்த்த வாழைக்குட்டிகள செழித்து வளர்ந்திருந்தன.

பெரிய மரத்தின் கீழ், தென்னை மரங்கள் எல்லைகளாக அழகான வட்டவடிவ அலுவலகம் பாலாவுக்கென அமைக்கப்பட்டிருந்தது.

### விருந்தினர் வருகை

எங்களைத் தேடி இங்கு வரும் விருந்தினர் பலரையும் நாங்கள் இந்த அமைதியான சூழலில் வரவேற்றுப் பேசியிருக்கிறோம்.



எங்கள் வீடு பல்வேறு சமூக உறவுகளுக்கு மையமாக இருந்திருக்கிறது.

எங்கள் பாதுகாப்பு ஏற்பாடு கடுமை குறைந்ததாக இருந்ததால் விடுதலைப் புலிகள் அமைப்பின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த போராளிகளும் பொது மக்களும் வெவ்வேறு பிரச்சினைகளுடன் எங்கள வீட்டுக்கு வந்து போவார்கள்.

தங்களுக்கும் பிரபாகரனுக்குமிடையில் பாலா உறவுப் பாலமொன்றைக் கட்டியிருக்கிறார் என்று போராளிகள் பலரும், பொதுமக்கள் பலரும் தெரிந்திருந்தனர்.

பல்வேறு பிரச்சினைகள், சிறப்பான கோரிக்கைகள் முதலியவைகளை பாலா பொறுமையுடன் செவிமடுப்பார்.

ஏதாவது ஒரு பிரச்சினைக்குத் தம்மால் தீர்வுகாண முடியாதென்பதை உணர்ந்தால் அதைப் பாலா பிரபாகரனிடம் எடுத்துச் சென்று கலந்துரையாடி தீர்வுகாண்பார்.

அந்தரங்கங்கள், 'வாக்குறுதிகள்' வெளிவரும். அபிலாஷைகள், விரக்திகள் வெளியிடப்படும். ஆலோசனைகள், புத்திமதிகள் கோரப்படும்.

(இப்போதைக்கு இத்துடன் முற்றுப்பெறுகிறது)

## கடந்தகாலத் தவறுகளை மறந்துவிடுவோம்

# தமிழினத்தின் விடுதலைக்காக அனைவரும் புலிகளை முன்னிலைப்படுத்தி செயற்படுவோம்

## திருமலை பிரசாரக் கூட்டத்தில் ஸ்ரீகாந்தா

திருகோணமலை,நவ.20

கடந்தகாலத்தில் இடம்பெற்ற தவறுகளை மறப்போம். சின்னச்சின்ன வேறுபாடுகளையும் மறந்துவிடுவோம். இனியாவது தமிழ் இனத்தின் விடுதலைக்காக - நலனுக்காக - விடுதலைப்புலிகளை முன்னிலைப்படுத்தி எமது நடவடிக்கைகளைத் தொடருவோம்.

- இவ்வாறு தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட வேட்பாளரும் ரெலோ அமைப்பின் முதல்வருமான ந.ஸ்ரீகாந்தா தெரிவித்தார். -

திருகோணமலை தில்லைநகரில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீகாந்தா அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

தமிழ் இனத்தின் தலைமைக்குரியவர்கள் விடுதலைப் புலிகளே. காரணம் தலைமைத்துவப் பண்பு அவர்களிடமே உண்டு.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்பதைக் காட்டிலும், அதைச் 'சுதந்திர பூமி' என அழைப்பதே பொருத்தம். நாங்கள் ஒன்று சேராததன் காரணமாக பல விடயங்களை இழந்தோம். கடந்தகாலத் தவறுகளில இருந்து பாடம் படித்துள்ளோம். ஒற்றுமையாகச் செயற்படாவிட்டால் எமக்கு விமோசனம் இல்லை. சின்னச் சின்ன வேறுபாடுகளை மறந்து சிந்தனை மூலம் உயர்த்தி ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கப்போகும் கடமை எமக்கு உண்டு.

தமிழர் உரிமை பற்றி இந்த அரசோடு பேசுவதானால் கைத்துப்பாக்கியை மேசைமீது வைத்துக்கொண்டே பேச வேண்டும். இந்தத் தேர்தலில் யார் தெரிவுசெய்யப்பட்டாலும் நாடாளுமன்றத்தினுள் இனத்தின் குரலாக அவர்கள் ஒலிப்பார்கள்.

இனத்திற்காக நாடாளுமன்றத்திற்கு உள்ளே வாதாடுவதும், போராடுவதும் எமது கடமைகளில் ஒன்று. அதுபோல் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இலட்சியத்தோடு போராடுவதும் எமது மற்றைய கடமையாகும்.

**தேர்தல் களம் X**

தமிழ் இனத்தின் எடுத்துக்காட்டாகத் திருகோணமலையை நாம் மாற்றுவோம். பேசுகின்ற வார்த்தைகளைச் செயற்படுத்துபவர்களாக நாம் இருக்கவேண்டும் - என்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் அங்கு உரையாற்றுகையில்:-

திருகோணமலை மாவட்டத்தின் தமிழ் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்றும் பொறுப்பு உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இம் மாவட்டத்தில் 78ஆயிரத்திற்கும் சற்று அதிகமான தமிழ் வாக்காளர்களே இருக்கிறார்கள். இவர்களின் வாக்குகள் முழுமையாக அளிக்கப்படுவதன் மூலமே பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

கிராமப்புறங்களில் மக்கள் மிகவும் ஆர்வமாக இருக்கின்றார்கள். தமிழ் வாக்காளர்கள் மற்றைய வாக்காளர்களைக் காட்டிலும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குபவர்களாக இருக்கின்றார்கள் - என்றார்.

இதேவேளை -

தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு சார்பில் வன்னி மாவட்டத்தில் போட்டியிடும் செல்வம் அடைக்கலநாதன் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தனின் இல்லத்தில் கடந்த ஞாயிறன்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில்:-

நடைபெறப்போகும் நாடாளுமன்ற பொதுத்தேர்தல் தமிழ் இனத்தின் விடுதலையைப் பெற்றுத்தருவதற்கான காலகட்டத்தில் வந்திருக்கின்றது. தேர்தலை திருகோணமலை மண் எப்படி எதிர்கொள்ளப்போகின்றது என்பது கேள்விக்குறியாகவுள்ளது.

இன விடுதலைக்கு ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது. இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காகப் பேசப்படக்கூடிய மேடையாக தேர்தல் வந்துள்ளது. விடுதலைப் புலிகளுடன் பேசி, அரசாங்கம் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கவேண்டும். இல்லையேல் இந்நாடு இரண்டாவதைப் பார்த்து அரசு இரத்தக் கண்ணீர் வடிக்கப்போகின்றது. இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமாயின் ஒவ்வொருவரும் தமது கடமைகளைச் சரிவரச் செய்யவேண்டும். எமது தமிழ் மண்ணை மீட்பது எமது பிறப்புரிமையாகும் என்றார்.(க-7-145)

## ஒரு வேட்பாளரின் ஆதங்கம்

உங்கள் செயல்களைக் கண்டு என் நெஞ்சம் பதறுகிறது; வெடித்து விடும்போல் இருக்கிறது. நடு சாமம் எழுந்து இதை வரைகிறேன். கற்றவர்களே முதியோர்களே பணிவுடன் வேண்டுகிறேன். இரகசியமாக என்றாலும் எடுத்தியம்புங்கள். ஆண்டவன் பெயரால் கேட்கிறேன். உங்கள் மௌனத்தைக கலையுங்கள். வரலாற்றைப் படிப்பவர்களே, படிப்பிப்பவர்களே சோதனைக்குப் படிப்பதும், படிப்பதும்வேறு. தமிழன் படித்தவனா? மானமுள்ளவனா? என்ற வினாக்கள் எம்மை நோக்கிக் காத்திருக்கின்றன. ஐ.தே.க. அரசு செய்ததெல்லாம் மறந்துவிட்டோமா? காசுக்காகச் செய்கிறீர்களா? இல்லை விசுவாசமாகச செய்கிறீர்களா? எது என்பது எனக்குப் புரியவில்லை.

கிழக்கு ஆசியாவிலேயே சிறந்த நூல் நிலையத்தை - ஹிட்லர் கூடச செய்யாத செயலை - எரித்துச் சாம்பல் ஆக்கியதை மறந்துவிட்டீர்களா? நூல் நிலையம் எரிக்கப்பட்ட செய்திகேட்டு, அதிர்ச்சியால் இறந்த டேவிட் அடிகளாரை ஒரு கணம் எண்ணிப் பார்க்கிறேன். தலை சுற்றுகிறது. எமது பரம்பரைத் தலைவர்களும், தாய்நாடென நாம் கருதும் நாடும் செய்த வரலாற்றுத் தவறால் ஆயுதம் ஏந்திய எமது பிள்ளைகள் பல்வேறு கோலம் கொண்டு நிற்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளானார்கள். அது அவர்கள் செய்த குற்றமில்லை; தமிழன் செய்த பாவங்களின் விளைவு. சகல இயக்கங்களையும் சேர்ந்த பிள்ளைகள் 41 பேரை வெலிக்கடைச் சிறையில் காடையரைக் கொண்டு கொடூரமான முறையில் கொன்றுகுவித்த அரசு இந்த ஐ.தே.க. அரசு என்பதை ரியூசன் வாத்திமார் உங்களுக்குச் சொல்லித் தந்திருக்க நியாயமில்லை. நான் சரித்திர வாத்தியில்லை. இவ்வரலாற்றுச் சம்பவங்களின் சாட்சிகளில் நானும் ஒருவன்.

**தேர்தல் களம் X**

1980 ஜூலை பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட சகல தொழிலாளர்களையும் மீள வேலைக்கமர்த்தும்படி அமைச்சரவை தீர்மானித்தது. எல்லா அமைச்சர்களும் விரைந்து நடவடிக்கை எடுக்கையில் அன்று கல்வி அமைச்சராக இருந்த ரணில் விக்கிரமசிங்கா மட்டும் மீள் நியமனம் செய்யாதிருந்தவர். தமிழன் மட்டுமல்ல சிங்களத் தொழிலாளர்களுக்கும் இவரின் இச்செயலால் பாதிக்கப்பட்டனர். இவற்றையெல்லாம் மறந்த தமிழர்களால் நாடாளுமன்றம் சென்ற எமது பிள்ளைகளில் ஒன்று அவருடன் அருகில் நின்று புன்சிரிப்புடன் படம் எடுத்து எதுவுமறியா எம்பேரப்பிள்ளைகளைக் கொண்டு, எதையோ கொடுத்து, குக்கிராமம் எல்லாம் ஒட்டுவிக்குது. இப்படங்களைப் பார்த்ததால் என் நெஞ்சு பதறியது. உள்ளம் குமுறுகிறது. மௌனம் சாதிக்க எனக்குத் தெரியவில்லை. சொல்லவேண்டியது எனது வரலாற்றுக் கடமை. சாதாரண மகனாக இதைப் பகிரங்கமாக எழுதினால் யார் இவர் என்ற வினா எழும். இவரும் 132 வேட்பாளர்களில் ஒருவர். இதைத் தெரிவிப்பதால் எனக்கு வாக்களியுங்கள் என்று நான் எவரிடமும் கேட்கவில்லை. எனது கடமை முடிந்தது. நீங்கள் ஐ.தே.கவுக்கு அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் யாழ்.நூல் நிலையத்திலிருந்த ஒரு நூலைச் சாம்பராக்கியதற்கான அங்கீகாரமாகும். "காசேதான் கடவுள்" என்னும் அக்காசாலே பெரிய யாகபூசையர்ச்சனை செய்விக்கும் வர்த்தகப் பண முதலைகளுக்கு நூலின் அருமை, மதிப்பு விளங்காது. இவர்களுக்கு ஆசீர்வாதம் வழங்கும் சமயப் பெரியார்களே! நீங்கள் வழங்கும் ஆசீர்வாதம் நூல் நிலையத்தை சாம்பலாக்கியதற்கான ஆசீர்வாதமே.

சங்கானை.

**மு.தியாகராசா,**

*(வேட்பாளர், ஜனநாயக இடதுசாரி முன்னணி.)*

## தெல்லிப்பழை வைத்தியசாலையில்

# மனநோயாளர்கள் பிரிவில் தாதியர்களுக்கு பற்றாக்குறை

தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்தியசாலையின் மனநோயாளர்கள் வார்ட்டில் தாதிய உத்தியோகத்தர்களுக்கு பற்றாக்குறை நிலவி வருகின்றது. இங்குள்ள மன நோயாளருக்கான ஆண் - பெண் வார்ட்டுகளில் அதிக எண்ணிக்கையிலான மனநோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை -

இவ்வைத்தியசாலையில் ஓய்வு பெற்றபின் மீள நியமனம் பெற்று கடமையாற்றி வரும் இரு பதிவு பெற்ற வைத்திய அதிகாரிகள் எதிர்வரும் 2002 ஆம் ஆண்டில் தொடர்ந்தும் கடமை புரிவதற்கு விண்ணப்பிக்கவில்லை என்று தெரிய வருகின்றது.

அடுத்த ஆண்டில் மீள நியமனம் பெற்று கடமையாற்றுபவர்களுக்கு அவர்கள் தற்போது பெற்று வரும் ஓய்வூதியம் வழங்கப்படமாட்டாது என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது தெரிந்ததே.

மீள் நியமனம் பெற்று பணியாற்றி வரும் டாக்டர்கள் அடுத்த ஆண்டில் தொடர்ந்தும் பணியாற்ற விண்ணப்பிக்காது விட்டால் யாழ்.மாவட்டத்திலுள்ள பல அரச வைத்தியசாலைகளிலும், அரசினர் மத்திய மருந்தகங்களிலும் வைத்திய சேவைகள் பெரிதும் பாதிப்படையும் என்று கவலை தெரிவிக்கப்படுகின்றது. (க-135)

## பிறந்த நாள் வாழ்த்து



### திரு.பஞ்சாட்சரம் ஜெயக்குமார்

பெரியமாவடி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் மாவடி, வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட ப. ஜெயக்குமார் தனது 25 ஆவது பிறந்ததினத்தை இன்று (20.11.2001) செவ்வாய்க்கிழமை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா – பஞ்சாட்சரம், அம்மா – பூமணி, மனைவி – அனித்தா, அண்ணாமார்களான பரமேஸ்வரன் (சுவிஸ்), சுகுமார் (லண்டன்), உதயகுமார் (கனடா), தம்பியான – சுரேஸ்குமார் (லண்டன்), மச்சான்மார்களான சின்னத்தம்பி, சிவநேசன் (லண்டன்), நந்தகுமார், அக்காமார்களான ரேணுகா, கீதா (லண்டன்), கவிதா, பெறாமக்கள், மருமக்கள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சகல நலனும் பெற்றுப் பல்லாண்டு காலம் நீடுழி வாழ்கவென மனமுவந்து வாழ்த்துகின்றார்கள்.

*மாவடி,*
*வட்டுக்கோட்டை.*

தகவல்:
செ. பஞ்சாட்சரம் *(தந்தை)*

(94597)

## நீங்காத நினைவில் ஓராண்டு

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 | 20 |
| 12 | 11 |
| 1976 | 2000 |



### அமரர் அருட்பிரதாசன் முரளீதரன்

பல்லோரும் நினைந்து நிதம் பரவு பெருகுணம்
படைத்தாய் பழகினர்க்கும் உதவி
இல்லார்க்கும் இயன்றவே கொடுத்து உதவும்
இயல்புடையாய் உன் மரணம் மரணமில்லை
வல்ல ஆன்மாவின் சட்டை மாற்றமன்றோ!

எந்நாளும் நின் நினைவலையில் நீடுதுயர் நாம் கொண்டு
காலமெல்லாம் கண்ணீர் மழையில் கனிந்தழுது நாம்
வாழ்வோம்

மன்னவனே! உன் நினைவு மாறாது ஆறாது
இந்நிலத்தில் என்றும் நினைவினில் வாழ்கின்றோம்.

(94638)

தகவல்:
*ஆ.பாலச்சந்திரன் (மாமா),*
*திகிரி ஒழுங்கை,*
*தும்பளை, பருத்தித்துறை.*

மனைவி: மு.யஷோ,
தாய், தகப்பன், மாமன், மாமி
குடும்பத்தினர்.

## காசிகாண்ட புராணப் படிப்பு

சுழிபுரம்,தெற்கு,நவ.20

வழக்கம்பரை அம்பாள் ஆலயத்தில் கடந்த வெள்ளி முதல் காசி காண்ட புராணப் படிப்பு ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

புராண உரையை பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் நிகழ்த்தி வருகின்றார். தினமும் பி.ப 3 மணி முதல் 5 மணிவரை புராணப் படிப்பு இடம்பெறும். (க-7-28)

## இராசகோபுர வேலைகள் துரிதம்

சுழிபுரம், நவ.20

சுழிபுரம் பறாளை ஈஸ்வர விநாயகர் ஆலயத்தில் தேர்முட்டி மண்டபம், இராச கோபுர வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. (க-7-28)

## கந்தபுராண முற்றோதல்

வலிகாமம் தெற்கு,நவ.20

சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தானத்தில் கந்தசஷ்டி விழா விசேட பூசைகளுடன் நடைபெற்று வருகின்றது. இதன்போது கந்தபுராண படிப்பும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கந்தபுராண முற்றோதல் திருக்கார்த்திகை நாளன்று பூர்த்தியடையும்.

நாளை புதன்கிழமை காலை 6 மணிக்கு சுன்னாகம் சந்தியில் அமைந்துள்ள முனியப்பர் ஆலயத்திலிருந்து பக்தர்கள் பாற்குடம், கற்பூரச் சட்டி ஏந்தி ஊர்வலமாகக் கதிரமலைச் சிவன் கோயிலுக்குச் சென்று விசேட அபிஷேகம், பூசைகள் நிகழ்த்தி கந்த சஷ்டி விழாவில் கலந்துகொள்வர். (க-152)

## பரிசுப் புத்தக கொள்வனவுக்கு 12ஆயிரம் ரூபா!

வலிகாமம் தெற்கு,நவ.20

உடுவில் கல்விக் கோட்டத்தினால் நடத்தப்பட்ட திருமுறையோதல், பண்ணிசை, தொண்டுபடும் செயன்முறைப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குரிய புத்தகப் பரிசுகளைக் கொள்வனவு செய்வதற்கென இவ்வருடம் 12 ஆயிரம் ரூபாவைச் சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தான "குஞ்சர நிதியில்" இருந்து ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டுள்ளது.

சென்ற வருடம் குஞ்சர நிதியில் இருந்து மயிலணி சைவ வித்தியாலய நீர்த்தாங்கி அமைப்புக்கென 90 ஆயிரம் ரூபாவை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-152)

## தேவை

கணனியில் Type Setting, Page Making, Corel Draw செய்வதில அனுபவம் வாய்ந்தவர்கள் தேவை. உடன் நேரில் வரவும்.

தொடர்பு:
திருவள்ளுவர் அச்சகம்,
698, பருத்தித்துறை வீதி, நல்லூர்
(யாழ்.மாநகரசபை அருகில்)

(94608)

## அமைச்சர் டக்ளஸுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், நவ.20

வடபகுதியில் உள்ள பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினருடன் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா நேரடியாகக் கலந்துரையாடுவதற்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பியின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக நாளை 21ஆம் திகதியன்று யாழ்ப்பாணம், தீவகம், கோண்டாவில், அரியாலை மற்றும் தெல்லிப்பழைப் பிரதேசங்களைச் சேர்ந்த சங்க அங்கத்தவர்களுடனும் -

22ஆம் திகதி அன்று கோப்பாய், சுன்னாகம், சங்கானை, மானிப்பாய் பிரதேசங்களைச் சேர்ந்த சங்க அங்கத்தவர்களுடனும் -

23ஆம் திகதி அன்று வடமராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த சங்க அங்கத்தவர்களுடனும் கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது.

- இவ்வாறு அந்தக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (க)

## தொழில்நுட்ப உத்தியோகத்தர் (கட்டட வேலை) பதவி வெற்றிடம்

எம்மால் அமைக்கப்பட்டுவரும் தேவஸ்தான முன்மணிமண்டப வேலையை மேற்பார்வை செய்ய தகுதிவாய்ந்த, அரச சேவையில் இருந்து இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியுடையோர் தமது சுய விவரங்களடங்கிய, தாமே தயாரித்த விண்ணப்பத்தை எதிர்வரும் 26.12.2001ஆம் திகதிக்கு முன்னர் செயலாளருக்கு விலாசமிட்டு அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். வலி. மேற்கு பிரதேசத்தில் வதிவோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.


துரைசிங்கம் ரகு
செயலாளர்,
பரிபாலன சபை,
முத்துமாரியம்மன் தேவஸ்தானம்.

*வழக்கம்பரை,*
*தொல்புரம், சுழிபுரம்.*

(94665)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14 | 25 |
| 03 | 11 |
| 1925 | 1998 |



### அமரர் சுப்பர் ஐயாத்துரை

திதி: சஷ்டி 20-11-2001

கண்ணுக்குள் கனவாகி எம் உயிருக்குள்
உறைந்துவிட்ட எம் தெய்வமே!
ஒளியாய் இருந்த நீங்கள் எங்கள்
நினைவாலயம் ஆனீர்கள்!
ஆண்டுகள் மூன்று சென்றாலும்
மறையவில்லை உங்கள் நினைவுகள்.

*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

(94572)

*மீசாலை வடக்கு,*
*கொடிகாமம்.*

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## ஆண்டொன்றின் நினைவில்...





| அமரர் நரசிங்கம் பொன்னுத்துரை | | | திருமதி பொன்னுத்துரை சரஸ்வதியம்மா |
|---|---|---|---|
| 01.01.1927 | ← | மலர்வு → | 23.09.1934 |
| 02.12.2000 | ← | உதிர்வு → | 22.04.2000 |

திதி: 20-11-2001

திருவுங் கல்வியும் சீர்கள் பலவும்
தருகரு கம்பனை தனிலவதரித்த
புகழ்மிகும் ஆசான் பொன்னுத்துரையும்
திகழ் பெரும்பதிபன் னாலையிலுதித்த
அருள் நிறை சரஸ்வதி அம்மாதானும்
இல்லறம் பேணியும் இரப்போர்க் கீந்தும்
நல்லறம் பலவும் நாளும் இயற்றிப்
பூவுலகினிற் பொன்றாப் புகழ் பெருக்கித்
தேவுலகடைந்தனர் ஆண்டொன்றானது
நாளும் உம் நினைவில் நனை கண்ணினராய்
என்றும் நினைவினில் இருத்தியே வாழ்வோம்.

*கம்பலை வளவு,*
*பன்னாலை,*
*தெல்லிப்பழை.*


குடும்பத்தினர்.

(94549)

# 14ஆவது வயதில் சிறுவன் சத்தியாவின் சிரசைச் சுற்றித் தெரிந்த ஒளிவட்டம்

**எதிர்வரும் 23ஆம் திகதி பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் அவதார தினமாகும். மனிதகுலத்தை வழிநடத்த ஒரேயொரு கடவுள் இடம், காலம், சூழல் இவைக்கேற்ப பலவிதமான பெயர்களைத் தாங்கி, மனித உடை அணிந்து அவதாரம் செய்கின்றார். அந்த அவதார வரிசையில் கலியுகத்தில் பூரண அவதாரமாக அவதரித்தவர்தான் பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா. சாயி பாபாவின் அவதாரம் பற்றிச் செய்திகள் பல மொழிகளில் பல்லாயிரக்கணக்கான நூல் வடிவில் வெளிவந்துள்ளன. 'சத்தியம் - சிவம் - சுந்தரம்' (கஸ்தூரி), 'சுவாமி' (ரா.கணபதி), 'அவதார உண்மைகள்', 'கலியுக அவதாரம்' போன்ற நூல்களில் இருந்து எடுக்கப்பட்ட தகவல்களின் தொகுப்பின் இரண்டாவது பகுதி இது.**

அப்பொழுது சத்தியாவிற்கு (சாயி பாபா) 14 வயது ஆரம்பமாகும்காலம். உரவகொண்டாவிலிருந்து பெற்றோர்களுடன் புட்டபர்த்தி வந்து சேர்ந்தார். சத்தியாவின் நிலை கண்ட பெற்றோர்கள் பயத்தால் பீடிக்கப்பட்டனர். அவர் கட்டைபோல் விறைத்துப் போவதும், பின்பு தடபுடலாக நடமாடுவதும், வேதாந்த இரக



சியங்களைப் பேசுவதும் மர்மமாய், அறிவிற்கு எட்டாத விடயமாக இருந்தது. வைத்தியம், மாந்திரீகம் இரண்டும் பலனளிக்கவில்லை. இறுதியில் பேயோட்டுவதில் வல்லவரான ஒருவரிடம் சத்யாவை அழைத்துச் சென்றனர். சிவந்த கண்களும், பயங்கரமான தோற்றமும் உடையவராக அம் மந்திரவாதி காட்சியளித்தார். தனக்குத் தெரிந்த சகல வித்தைகளையும் செய்தார். பயங்கர பரிகாரங்களைச் செய்தார். தன்னுடைய வலிமைக்கும் மாந்திரீக சக்திக்கும் இது ஒரு சோதனை என்றும் எண்ணிக்கொண்டார். ஆகக்கூடிய செயல்முறைகளைக் கையாண்டார். சத்தியாவின் தலையை மொட்டையடித்துக் கூரிய ஆயுதம் ஒன்றால் உச்சந்தலையிலே மூன்று இடங்களில் திருகி அடையாளமிட்டார். தலையிலிருந்து இரத்தம் கொட்டியது. மந்திரவாதி அப் புண்மீது எலுமிச்சஞ்சாறு போன்ற புளிப்பான சாறுகளையும் ஊற்றினார். பெற்றோர் செய்வதறியாது திகைத்தனர். அந்தத் திகைப்பு ஆச்சரியமாக மாறியது. ஏனெனில் இவ்வளவு சித்திரவதைகளுக்கும் சத்தியா கண்ணீர் விட்டோ, கவலைப்பட்டதாகவோ தெரியவில்லை. மேலும் மந்திரவாதியின் சித்திரவதை அதிகரிக்க பெற்றோர்கள் மீண்டும் வருவதாகச் சமாதானம் கூறி சத்யாவை வீட்டிற்கு அழைத்துவந்தார்கள்.

ஆனால், சத்தியாவின் நிலை மோசமாகத்தான் இருந்தது. வயதின் அறிவெல்லைக்கு அப்பாற்பட்ட பாடல்களைப் பாடினார். சிலசமயம் பத்து ஆள் பலமுள்ளவராகவும் காணப்பட்டார். குடும்ப நண்பர்கள் சிலரின் ஆலோசனையின் பேரில் பக்கத்து கிராமத்திலுள்ள வைத்தியரிடம் மாட்டுவண்டியில் அழைத்துச் சென்றார்கள். சிறிது தூரம் சென்றவுடன் "நான் எங்கும் போகவில்லை திரும்பிப் போ" என்று சத்தியா உத்தரவிட்டார். என்ன ஆச்சரியம்! வண்டியை இழுத்துச்சென்ற காளைகள் ஓர் அடிகூட முன்னெடுத்து வைக்கவில்லை. எவ்வளவோ முயற்சி செய்தும் காளைகள் அசைய மறுத்தன. அதன்பின் வேறுவழியின்றி வீடு திரும்பினர்.

1940ஆம் ஆண்டு வைகாசி மாதம் 28ஆம் நாள் சத்தியா வழக்கம் போல் படுக்கையை விட்டு எழுந்தார். மிக உற்சாகமாகக் காணப்பட்டார். வீட்டில் உள்ளவர்களையெல்லாம் தம் அருகே அழைத்து, தம் தெய்வீக சக்தியால் கற்கண்டும், மலர்களும் உருவாக்கி அவர்களுக்குக் கொடுத்தார். இதைக் கேள்விப்பட்டு அயல்வீட்டாரும் விரைந்து வந்தனர். அவர்களிற்கும் மலர், கற்கண்டு முதலியவற்றைத் தன் கையசைவால் உருவாக்கிக் கொடுத்தார். 'சத்தியா மாறிவிட்டான்' என்ற செய்தி எங்கும் பரவியது. வெளியில் சென்றிருந்த தந்தை வெங்கட்ராஜு இதனைக் கேள்விப்பட்டு விரைவாக வீடு திரும்பினார். உள்ளே கையை அசைத்து கற்கண்டு, விபூதி வழங்கிக்கொண்டிருக்கும் சத்தியாவைக் கண்டார். கோபங்கொண்டு இம்மாதிரியான சம்பவங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து, இந்த அத்தியாயத்தை முடித்துவிட விரும்பினார்.

தடியொன்றைக் கையிலெடுத்துக் கொண்டு சத்தியாவின் அருகே சென்று "நீ அதிகப்பிரசங்கித்தனமாக நடந்துகொள்கிறாய். இது நின்றுவிட வேண்டும். இல்லையேல் அடித்துவிடுவேன்" என்று பயமுறுத்தினார். "நீ கடவுளா? பிசாசா? பைத்தியக்காரனா? அதைச் சொல்" என்று உரத்த குரலில் கேட்டார். "நான் சாயிபாபா" என்று வெகுநாள்களாகச் சொல்லாது வைத்திருந்த பதிலை உடனே சொன்னார். சத்தியா தனது



நிஜ சொருபத்தை வெளிப்படுத்தினார். வெங்கட்ராஜு ஆச்சரியத்தால் பேச்சிழந்தார். கையிலிருந்த தடிதானே நழுவிக் கீழே வீழ்ந்தது. அண்ணன் சேஷமராஜு 'நீயே சாயிபாபா' என்று சொல்வதன் பொருள் என்ன என்று கேட்டார். "உங்கள் வெங்காவதூதர், நான் உங்கள் குடும்பத்திலே பிறக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்தார். ஆகவே நான் வந்தேன்" என்று பதில் சொன்னார். தொடர்ந்து "உங்கள் மனதையும் இல்லத்தையும் சுத்தமாக வைத்திருங்கள்" என்றார்.

சாயிபாபா என்ற பெயர் அக்கிராமத்தவர்களுக்கு ஆச்சரியத்தை விளைவித்தது. ஒரு வியாழக்கிழமை யாரோ ஒருவன் வந்து "நீ சாயிபாபா என்றால் அதை நிரூபித்துக் காட்டு" என்று சவால் விட்டான். "ஆம், அதை நிரூபிக்கின்றேன். மல்லிகை மலர்களைக் கொண்டுவாருங்கள்" என்று கட்டளையிட்டார் சாயிபாபா. கைநிறையக் கொடுத்த மல்லிகை மலர்களைத் தரைமீது வீசிவிட்டு 'இதோ பாருங்கள்' என்றார். என்ன ஆச்சரியம்! கீழே விழும்போதே அவைகள் எழுத்திலே 'சாயிபாபா' என்று உருப்பெற்று அமைந்திருப்பதை எல்லோரும் கண்டனர். மந்திரீகன் கையில் சிக்கி சித்திரவதைக்குட்பட்ட காலத்திலே அவர் அமைதியாக இருந்ததிலிருநதே அவர் ஏதோ ஒரு சாதாரண பையன் அல்ல என்று ஒவ்வொருவரும் உணர்ந்தனர்.

எப்படியேனும் பள்ளி இறுதி வகுப்பை முடித்து, சத்தியாவை (சாயி பாபா) அரசாங்க உத்தியோகத்திற்குத் தகுதிபெறச் செய்யவேண்டும் என்பதே அண்ணன் சேஷமராஜு வின் திட்டமாக இருந்தது. ஆகவே மீண்டும் சத்தியாவை உயர்நிலைப் பள்ளியில் சேர்த்தனர். இப்பொழுது பள்ளியிலே ஒவ்வொருவர் கவனத்தையும் ஈர்ந்தார். ஆசிரியர்கள் எல்லோரும் கூட்டமாகச் சேர்ந்து சத்தியாவைப் பரிசோதித்துப் பார்ப்பதற்காகப் பல கேள்விகளைக் கேட்டனர். அவர்கள் ஆச்சரியப்படும் வகையில் சத்தியா மிகப்பொருத்தமான பதிலைச் சொன்னார்.

இதற்கிடையில் சத்தியாவின் மனமாற்றத்திற்காகப் பிரசித்திபெற்ற விருபாஷரின் ஆலயத்திற்கு அழைத்துச்

**தொகுப்பு:**
**சேவைப் பகுதி,**
**யாழ்.சத்தியசாயி சேவா நிலையம்.**

சென்றனர். அங்கு கோயிலுக்குள்ளே வர மறுத்த சத்தியா, வெளியே நின்றுவிட்டார். எவரும் உள்ளே வர வற்புறுத்தவில்லை. கோயில் கர்ப்பக்கிரகத்தில் உள்ள லிங்கத்திற்கு குருக்கள் கர்ப்பூர தீபம் காட்டும்போது ஓர் அற்புதம் நிகழ்ந்தது. கர்ப்பக்கிரகத்தில் உள்ள லிங்கத்திற்கு பதில் அங்கு சத்தியா நிற்பதைக் கண்டனர். உடனே எல்லோரும் ஓடிச்சென்று வெளியே பார்த்த பொழுது சத்தியா ஒரு சுவரின்மேல சாய்ந்துகொண்டு அடிவானத்தைக் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டனர். சத்தியா கடவுளின் அவதாரம் என்ற நம்பிக்கை உறுதியாகிவிட்டது.

1940ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 20ஆம் நாள் சத்தியா வழக்கம் போல் பள்ளிக்குப் புறப்பட்டார். அன்று அவரின் முகத்தைச் சுற்றிலும் ஒரு தெய்வீக ஒளிவட்டம் பிரகாசிப்பதை அந்தப் பிராந்திய எக்சைஸ் இன்ஸ்பெக்டர் உட்படப் பலர் கண்டு கவரப்பட்டனர். பள்ளிக்குச் சென்ற சத்தியா சில நிமிடங்களில் வீட்டிற்குத் திரும்பி வந்து வாயிற்படியல் நின்றுகொண்டு தம்முடைய புத்தகங்களை



உள்ளே தூக்கிப்போட்டார். "நான் உங்கள் சதத்தியா அல்லன்; நான் சாயிபாபா" என்று உரக்கக் கூறினார். சமயலறையில் இருந்த அண்ணியார் எட்டிப் பார்த்தார். அப்பொழுது பாபாவின் (சத்தியா) சிரத்தைச் சுற்றிலும் வீசிக்கொண்டிருக்கும் ஒளிப்பிளம்பைக் கண்டு அப்படியே கண்பூத்து நின்றார். பாபா அவரை நோக்கி "நான் போகிறேன். நான் உங்களைச் சேர்ந்தவனல்லன்; எனக்கு வேலை இருக்கிறது; நான் இங்கு இருக்கமுடியாது" என்று சொல்லிக்கொண்டே வெளியே வந்தார். அண்ணி, அண்ணன் எவ்வளவு கெஞ்சிக் கேட்டும் அவைகளைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை.


அண்ணன் சேஷமராஜுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவருக்கு ஒரே குழப்பமாக இருந்தது. பதினான்கு வயதே நிரம்பப்பெற்ற ஒரு சிறுவன் பக்தர்கள் என்றும், மாயை என்றும், தன்வேலை என்றும் பேசுவது பெரும் புதிராக இருந்தது.

பாபா (சத்தியா) வீட்டிற்குள் செல்ல மறுத்து, வெளியேறி அருகில் உள்ள பங்களா தோட்டத்திற்குச் சென்று ஒரு பாறையின் மேல் அமர்ந்து கொண்டார். இச்செய்தி எங்கும் பரவத் தொடங்கி எல்லாத் திசைகளிலுமிருந்தும் பாபாவைக்காண மக்கள் அத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# தரமான சினிமாவுடன் பரிச்சயம் கொள்ள முயல்வோருக்குப் பயன்படக்கூடிய நூல்

ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலமாகத் தீவிர கலை இலக்கிய ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருவதென்




பது சாதாரணமானதல்ல. அத்தகைய அருந்தலான மனிதர்களில் ஒருவர் கே.எஸ்.சிவகுமாரன். அவருடைய இந்த ஆர்வமும் செயற்

**ஐ.சாந்தன்**

பாடும் வீண்போகாதவை. இன்றைய முன்னணி கலைஇலக்கியவாதிகளிற் பலர் அவரின் வழிகாட்டலுக்கும், ஊக்குவிப்புக்கும் உள்ளானவர்களே.

சிவகுமாரன் இருமொழி எழுத்தாளர். ஆங்கிலத்திலும் நிறைய எழுதுபவர். குறிப்பாக, ஈழத்துத் தமிழ்க் கலை இலக்கிய செயற்பாடுகள் பற்றிப் பிறமொழியாளர்களுக்கு அறிமுகப்படுத்துவதன் மூலம் தனித்துவமான ஒரு பணியினை ஆற்றி வருபவர். அவருடைய 'TAMIL WRITING IN SRI LANKA' மற்றும் 'ASPECTS OF CULTURE IN SRILANKA' என்ற இரு நூல்களும் இதற்குச் சிறந்த உதாரணங்கள்.

மேற்குறிப்பிட்ட காத்திரமான இரு செயற்பாடுகளுக்கும் ஆதாரமாக அமைவது சிவகுமாரனின் பன்முக ஆளுமையாகும். இருமொழிப் புலமையாளர், எழுத்தாளர், விமர்சகர் என்பதுடன்; சிறந்த பத்திரிகையாளரும் ஒலிபரப்பாளருமான அவரின் ஆற்றல்கள் அவரின் எழுத்தில் குவிமுனைப்படுத்தப்படுவது ஒன்றும் வியப்பன்று. ஆக்க இலக்கியங்களாக அவரது இரு கதைத் தொகுப்புக்கள் ('சிவகுமாரன் கதைகள்', 'இருமை') வெளியாகியுள்ளன. இவைதவிர, 'பத்தி எழுத்துக்களும் பல் திரட்டுக்களும்' என்ற வரிசையில் தம் எழுத்துக்களை அவர் தொகுத்து வெளியிட்டும் வருகிறார்.

'பத்தி எழுத்துக்கள் என்ற பெயரில் அவர்தம் எழுத்துக்களை வகைப்படுத்திய போதும், அவற்றில் மிகப் பெரும்பாலானவை ஆழம்மிகக் கொண்ட திறனாய்வுக் கட்டுரைகளே யாகும். சுருக்கமும் தெளிவும் அவற்றின் திறனாய்வுத் திறனை நிராகரிக்க வல்லனவன்று.

ஈழத்து நாவல்கள், சிறுகதைத் தொகுப்புகள், ஏனைய நூல்கள் பற்றிய தமது கட்டுரைகளைப் 'பத்தி எழுத்துக்களும் பல்திரட்டுக்களும்' என்ற வரிசையில் தொகுத்து வெளியிட்ட சிவகுமாரன், இப்போது 'அசையும் படிமங்கள்' நூலைத் தொகுத்துத் தந்துள்ளார்.

சிவகுமாரனுக்கு வாலாயமானது 'பத்தி எழுத்துக்கள்' என அவர் குறிப்பிடும் இக்குறுங்கட்டுரை வடிவமென்றால், அவரின் கலை ஈடுபாட்டில் முதலிடத்தைப் பெறுவது சினிமாவேயாகும். இவ்விரண்டும் சங்கமிக்கிற ஒரு நூல், 'அசையும் படிமங்கள்' திரைப்படக்கலை, திரைப்படத் திறனாய்வு - என்பன பற்றிய அவரது கட்டுரைகள் இருபத்துநான்கின் தொகுப்பாகும் இது.

ஒவ்வொரு கட்டுரையும் ஒவ்வொரு முக்கிய அம்சத்தைப் பேசுகிறது. சினிமா பற்றிய வரலாற்றுத் தகவல்கள், தொழில்நுட்பத் தகவல்கள் என்பன தொடக்கம், திறனாய்வு அடிப்படைகள், திறனாய்வு அணுகுமுறைகள், சினிமா சித்தாந்தங்கள் - என்பன ஈறாக ஆசிரியர் அறிமுகஞ் செய்கிறார். திரைப்படக் கலை பற்றிய ஓர் அடிப்படைக் கைந்நூலாகவும், அதேசமயம் ஓர் உசாத்துணை நூலாகவும் கூட, அசையும் படிமங்கள் மிளிர்கிறது.

தரமான சினிமாவுடன் அறிவுபூர்வமாகப் பரிச்சயம் கொள்ள முயலும் ஓர் ஆரம்ப ஆர்வலனுக்கும், தனது ரசனைத் தரததை வளர்த்துக்கொள்ள விரும்பும் ரசிகனுக்கும் அந்தந்த அளவில் பயன்படக்கூடிய தொகுப்பு

**அசையும் படிமங்கள்**
***ஆசிரியர்:* கே.எஸ்.சிவகுமாரன்**
***வெளியீடு:* மீரா பதிப்பகம்**
***விலை:* 50/-**

இது. சினிமாக்களும் சினிமா பற்றிய கண்ணோட்டமும் மேன்மேலும் கொச்சைப்பட்டுக்கொண்டே போகும் சூழல் எம்முடையது. தொண்ணூற்றொன்பது வீதமான தமிழர்களின் கலா ரசனையை மட்டுமன்றி, அவர்களின் அடிப்படைப் பகுத்தறிவையேகூடக் கேலிசெய்யும் முயற்சியில் தமிழ் சினிமா ஈடுபட்டுள்ளது.

இந்நூலுக்கு முன்னுரை எழுதியுள்ள எஸ்.ரஞ்சகுமார்கூட, 'இதரலலித கலைகளைப் பொறுத்த வரையில் பிறமொழிகளுடனும் பிறநாகரிகங்களுடனும் ஒப்பிடும்பொழுது பல நூற்றாண்டுகால செழுமைமிகுந்த வரலாற்றையும், பங்களிப்பையும், சாதனைகளையும், தன்னகத்தே கொண்டு சிறப்பானதொரு நிலையில் காணப்படும் தமிழ்மொழி; சினிமாவைப் பொறுத்தளவில் பரிகசிக்கப்படும் நிலையிலேயே காணப்படுகிறது' என அங்கலாய்க்கிறார்.

'லட்சக்கணக்கான மக்கள் எந்த வித ஒரு வழிகாட்டுதலுமின்றி தொடர்ந்து சினிமாப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். சினிமாவைப் புரிந்துகொள்வது எப்படி என்று யாருமே அவர்களுக்குச் சொல்லித் தருவதில்லை' என்றும்; 'மக்களின் ரசனையை மிக உயர்அளவில் பாதிக்கக் கூடிய சினிமாக்கலையைப் பகுத்தாய்தலை முறைப்படி வளர்க்க வேண்டியது உடனடித் தேவையாக உள்ளது' என்றும் உலகளவில்கூட குரல்கள் (பேலபெலாஸ்) எழுந்தன வென்றாலும் இன்றைய தமிழ்ச் சூழலின் நிலை இன்னும் மோசமாக உள்ளது.

அண்மையில் சென்னையில் நடைபெற்ற 'மாற்றுச்சினிமா' பற்றிய ஆய்வரங்கொன்றில், 'தமிழ் மாணவர்களுக்குச் "சினிமா ரசனை" கற்பிக்கப்பட்டால், அது அரசியலுக்கும், வர்த்தக - கலைப் போலிகளுக்கும், முதலாளிகளுக்கும் ஆபத்தானதாகிவிடும். எனவே, "சினிமா ரசனை" கல்வியில் புகுத்தப்படவில்லை' என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. (நிழல் - 1) பகடிபோலத் தோன்றினாலும் உண்மை இதுதான்.

இப்படியான ஒரு பின்னணியை - சூழலை மனத்திற்கொண்டு நோக்குகையில்தான் சிவகுமாரனின் கட்டுரைகளின் கனதியும் பயனும் புரியும் - 'அசையும் படிமங்கள்' மக்கள் மத்தியில் பயிலப்பட வேண்டிய நூல். அதை யார் அங்கு எடுத்துச் செல்வார்கள் என்பதான் தெரியவில்லை. ☆

# சில்லாலையில் மாதத்தில் இரு தினங்கள் கால்நடை வைத்திய சேவையை நடத்துக!

## கிராம அபிவிருத்திச் சங்கம் தீர்மானம்

சண்டிலிப்பாய்,நவ.20

சில்லாலைப் பகுதியிலுள்ள மகக ளின் நலன் கருதி மாதத்தில் இரு தினங்கள் கால்நடை வைத்திய சேவையை அங்கு நடத்துவதற்கு ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று சங்கானை கால்நடை வைத்திய அதிகாரியைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்று சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட் டுள்ளது.

சங்கத்தலைவர் பி.சூசைப்பிள்ளை தலைமையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற இக்கூட்டத் தில் இந்த கால்நடை வைத்திய சேவையை சில்லாலை கிராம அபி விருத்திச் சங்கக் கட்டடத்தில் நடத் தக் கூடிய வசதியுள்ளது என்றும்- கூடிய விரைவில் இச்சேவையை ஆரம்பிக்குமாறும் கால்நடை வைத் திய அதிகாரியைக் கேட்டுக்கொள் வது என்றும் தீர்மானிக்கப்பட்டுள் ளது.

இத்தீர்மானம் சண்டிலிப்பாய் டச் வீதியில் இயங்கி வரும் சங்கானை கால்நடை வைத்திய அதிகாரி அலு வலகத்திற்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது. (க-135)

## மேசைப் பந்து சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்,நவ.20

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான மேசைப்பந்து சுற்றுப்போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு சுண்டுக்குளி வை.எம்.சி.ஏ மண்டபத்தில் நடை பெறும். (க-ரி)

## வங்கியாளர் நிலைய பரீட்சை

யாழ்ப்பாணம்,நவ.20

இலங்கை வங்கியாளர் நிலையம் நடத்தும் இறுதிப்பரீட்சையும், நடு நிலைப் பரீட்சையும் எதிர்வரும் 24 ஆம், 25ஆம் திகதிகளில் காலை 9.30 மணிக்கு வேம்படி மகளிர் கல் லூரியில் நடைபெறவுள்ளது.(க-ரி)

## மாட்டு வண்டியில் தேர்தல் பிரசாரம்

வடமராட்சி,நவ.20

வடமராட்சி கிழக்கில் மாட்டு வண்டி யில் ஐ.தே.க. ஆதரவாளர்கள் நேற்று முன்தினம் பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

குடாநாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டை நினைவுபடுத்தும் விதத்தில் இத்தேர்தல் பிரசாரம் அமைந்திருந்தது.

மாட்டு வண்டியின் இருபக்கமும் யாழ். மாவட்ட ஐ.தே.க. முதன்மை வேட்பாளருக்கு ஆதரவான வாசகங் கள் கொண்ட விளம்பரத்தட்டிகள் கட்டப்பட்டிருந்தன. (க-173)

## 'இந்துருவலி'யில் சிமெந்து வருகிறது

யாழ்ப்பாணம்,நவ.20

யாழ். குடாநாட்டுக்கென சிமெந்தை ஏற்றிக்கொண்டு 'இந்துருவலி' கப் பல் இன்று திருகோணமலைத் துறை முகத்திலிருந்து புறப்படுகின்றது.

தனியாருக்கென சுமார் 50ஆயி ரம் சிமெந்து 'பக்கட்'டுகள் இக்கப் பலில் எடுத்துவரப்படுகின்றன. ஓரிரு தினங்களில் பருத்தித்துறை துறை முகத்தை வந்தடையும் இக்கப்பலில் இருந்து உடனடியாக இறக்கும் பணி கள் ஆரம்பமாகவுள்ளன. (க-ரி)


## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரி ஆரம்பப்பிரிவு ஆசிரியை **செல்வி சுதர்சினி குணநாயகம்** அவர்களின் பாசமிகு தாயார் **திருமதி குணநாயகம் சந்திரலேகா** அவர்களின் தீடீர் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் வட்டம்,
யாழ்.மத்திய கல்லூரி.

(94681)



ஆஸ்திரேலியா ஸ்கந்தா பழைய மாணவர் சங்கத்தின்

## விசேட புலமைப்பரிசுத் திட்டம்

**ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்று ஆறாம் தரத்தில் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கற்க வருகின்ற மாணவர்களுக்கு, ஆஸ்திரேலியா ஸ்கந்தா பழைய மாணவர் சங் கம், தவணைகள் தோறும் நிதி உதவி அளிக்க முன்வந்துள்ளது. இதன்மூலம் கல்வி மேம்பாட்டினை இப்பிராந்தியத்தில் மேன்மேலும் முன்னெடுக்க முடியும் என்பதனை கருத்திற்கொண்டு மேற்படி திட்டம் முன்வைக்கப்படுகிறது. தகுதியுள்ள மாணவர்கள் இத் திட்டத்தில் சேர்ந்து பயனடைவீர்களாக!**

*கந்தரோடை,*
*சுன்னாகம்.* (94670)

ஸ்கந்தா பழைய மாணவர் சங்கம்,
ஆஸ்திரேலியா.


### வவுனியாவில் எல்லா அமைப்புகளிடமும் ஆயுதங்கள்

# தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பில் புளொட் சேர்க்கப்படாதது விந்தையானது

## சுன்னாகத்தில் நடந்த கூட்டத்தில் சித்தார்த்தன்

வலி.வடக்கு,நவ.20

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப் பில் புளொட் சேர்த்துக்கொள்ளப் படாதது விந்தையாக இருக்கிறது. அந்தக் கூட்டமைப்பில் அங்கம் வகிப் பவர்கள் ஆயுதபாணிகள்தான். வவு னியாவுக்குச் சென்றால், அவர்களின் செயற்பாடுகளைக் கண்டறிந்து கொள்ளமுடியும்.

- இவ்வாறு ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் தர் மலிங்கம் சித்தார்த்தன் குறிப்பிட் டார்.

தேர்தல் களம்

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற பிரசாரக் கூட்டம் சுன்னாகம் சிவன் கோயிலுக்கு அருகில் கடந்த வெள்ளிக்கிழமை க.அல்வின்ராஜா தலைமையில் இடம் பெற்றது.

அங்கு உரையாற்றியபோதே சித் தார்த்தன் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

நாங்கள் நான்கு கட்சி கூட்டமைப் பில் ஏன் சேர்த்துக்கொள்ளப்பட வில்லையென்பது பற்றித் தெரியாது. நாங்கள் இந்தக் கூட்டமைப்பின் முன்னால் நான்கு அம்சத் திட்டம் ஒன்றை முன்வைத்தோம்.

★ தீர்வுக் கோட்பாட்டின் அடிப்படை யில் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும்.

★ புலிகளுடன் அரசு பேச்சுநடத்த வேண்டும்.

★ வன்னி மற்றும் தமிழ்ப் பகுதி களுக்கான பொருளாதாரத் தடை நீக்கப்படவேண்டும்.

★ யுத்தம் நிறுத்தப்படவேண்டும்.

- என்பனவே அந்தத் திட்டங்கள் ஆகும்.

தற்போது இக்கூட்டமைப்பினரே, புளொட் அமைப்பினர் ஆயுதம் வைத துள்ளார்கள்; இராணுவத்துடன் சேர்ந்து தொழிற்படுகின்றார்கள் என்று எல்லாம் குற்றம் சுமத்திவரு கின்றார்கள். இன்று எத்தனை குழுக் கள் ஆயுதங்களுடன் வன்னியில் உலாவருகின்றன என்பதை அங்கு சென்றால் நேரில் கண்டுகொள்ளலாம்.

இன்றும் கூட இராணுவத்தினரின் முகாம்களிலிருந்து பல்வேறு உதவி களையும் அந்த ஆயுதக்குழுக்கள் பெற்றுக்கொள்கின்றன.

கூட்டமைப்பில் புளொட் இணை வதானால் யாழ்ப்பாணம், வன்னியில் அது போட்டியிட முடியாது. வேண் டும் என்றால், கொழும்பு மாவட்டத் தில் போட்டியிடலாம் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியினர் என்னிடம் தெரிவித்தனர். அதனை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்கள் பல்வேறு துன்பதுயரங் களையும் கடந்த இரண்டு தசாப்தங் களாக அனுபவித்துவருகின்றார்கள். இத்தகைய அவல நிலைமைக்குக் காரணமாக இரண்டு பேரினவாதக் கட்சிகளுமே இருந்து வந்துள்ளன.

1956ஆம் ஆண்டில் தனிச் சிங் களச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முயன்ற பண்டாரநாயக்கா புத்தபிக்கு வினால் சுட்டுக்கொலை செய்யப் பட்டார். அதனைத் தொடர்ந்து ஆட்சி பீடம் ஏறிய ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா 1961ஆம் ஆண்டில் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய பல்வேறு நடவடிக்கைகளையும் மேற் கொண்டார்.

தனிச் சிங்களத்தை நடைமுறைப் படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்க் கட்சிகளும், இடதுசாரிக் கட் சிகளும் கூட்டமைத்துக் கொண்டன.



இது உண்மையான ஒரு கூட்டாகும். ஆனால் தற்போது நான்கு கட்சிகள் ஒன்றிணைந்துள்ள கூட்டை ஒரு கூட் டென்று கூறமுடியாது.

எல்லாத் தமிழ்க் கட்சிகளும் இக் கூட்டமைப்பில் சேர்வது பற்றி கலந் துரையாடப்படவில்லை. ஆகையி னால் இதனை ஒரு கூட்டமைப்பென்று கூறமுடியாது - என்றார்.

சாவகச்சேரி நகரசபைத் தலை வர் அன்ரன் பொன்னையா உரை யாற்றும் போது கூறியதாவது:-

1974ஆம் ஆண்டு இளைஞர்களை உணர்ச்சிவசப்படுத்திக் கொலைக் களத்திற்குத் தள்ளிவிட்டு வெளிநாடு களுக்குச் சென்று குளிரூட்டப்பட்ட அறைகளில் சுகபோக வாழ்க்கை வாழ்ந்துவிட்டு இன்று மீண்டும் மக் கள் முன் வாக்குக் கேட்டு வந்துள் ளார்கள்.

இவர்கள் கடந்த ஓர் ஆண்டில் நாடாளுமன்றத்திற்குச் சென்று எத னைச் சாதித்துள்ளார்கள்? நாங்கள் வன்னிப் பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த வேளையில் பல்வேறு அபிவிருத்தித் திட்ட நடவடிக்கைகளை மேற்கொண் டோம்.

யாழ்மாவட்டத்திலிருந்த நாடாளு மன்ற உறுப்பினர்கள் என்ன செய் தார்கள்?

எமது பொறுப்பிலிருக்கும் உள்ளூ ராட்சி மன்றங்களைக்கூட எம்மிடமி ருக்கும் நிதியைக்கொண்டே அபி விருத்தி செய்து வருகின்றோம். ஆனால் பெரிய அமைச்சர் என்று கூறிக்கொள்பவர் எமது சபைகளுக்கு எந்தவகையான உதவிகளும் செய் யவில்லை - என்றார்.

மற்றும் பலர் அங்கு உரையாற் றினர். (க-86)

## 14 ஆவது.....

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

தோட்டத்திற்கு விரைந்து சென்ற னர். எல்லோரும் பாபா சொல்லிக் கொடுத்த கடவுளின் நாமத்தை (கீர்த்தனங்களை) ஒன்றுசேர்ந்து பாடி னர். பாபா முதன் முதலில் -

*"மானச பஜரே குரு சரணம்*
*துஸ்தர பவஸாகர தரணம்"*

- என்ற கீர்த்தனத்துடன் நாம சங்கீர்த்தனத்தை ஆரம்பித்து வைத் தார். "குரு பெருமானின் பாதங்களை மனதில் தியானம் செய்வாயாக; அது ஒன்றே பிறவி எனும் கடத்தற்கரிய கடலைக் கடப்பதற்கு உதவும் சாதன மாகும்" என்பதே அக்கீர்த்தனத்தின் பொருளாகும்.

சத்தியா (பாபா) இனிமேல் பள் ளிக்கு வரமாட்டான் என்றும் - அவன் தங்களிற்கு எட்டாத நிலையில் இருக் கின்றான் என்றும் - அவனுடைய அருளைப் பெறும் பேறுபெற்றவர் களே அவனைச்சூழ இருக்கமுடி யும் என்றும் - கேள்விப்பட்ட அவ னது பள்ளித் தோழர்கள், யாவரும் மனமுருகி அழுதனர். அந்தப் பூந் தோட்டத்தில் மூன்று நாள்கள் பஜனை நடைபெற்றன. சில நாள் களின் பின்பு பெற்றோர்கள் அவ ருக்கு எவ்விதமான தடைகளையும் விதிப்பதில்லை என்றும் - பக்தர் களைச் சந்திப்பதற்கு எவ்வித இடை யூறும் செய்வதில்லை என்றும் - உறுதிமொழி கூறிப் புட்டபர்த்திக்கே அழைத்துச்சென்றனர்.

உரவகொண்டா நகரமாந்தர் அவ் வூர் எல்லைவரை உபசரித்து ஊர்வல மாக அழைத்துச் சென்று வழி அனுப் பினர். *(வளரும்)*


## 60ஆம் நாள் நினைவலைகள்

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்க
மாவட்டக் குருளைச் சாரணத் தலைவி

**செல்வி சிவரூபராணி வேலுப்பிள்ளை** அவர்களின்
(யா/தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலய ஆசிரியை)
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஆண்டுபல சென்றாலும் மாறாது,*
*துன்பத்தில் உன் இன்பச் சிரிப்பும்*
*துடிநிலையும், சாரணியப் பற்றுறுதியும்*
*எம் நினைவலைகளில் இருந்து அகலாது.*

*காங்கேசன்துறை மாவட்டச் சாரண கிளைச்சங்க*
*உறுப்பினர்கள்,சாரணத் தலைவர்கள்,*
*சாரணர்கள், குருளைச் சாரணர்கள்.*

(84682)



## மரண அறிவித்தல்

### நாகநாதி சதாசிவம்

புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட நாகநாதி சதாசிவம் நேற்று (19.11.2001) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், விஜயரெத்தினம், கந்தசாமி, கலாநிதி, கண்ணதாசன், காந்தரூபி, சாந்தி, இலங்கநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் நாகராசா, இராசமலர், லீலாதேவி, ராதா, வதனி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2001) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கேரதீவு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முதலாம் வட்டாரம்,*
*புங்குடுதீவு.* (94675)

தகவல்:
விஜயரெத்தினம்,
கண்ணதாசன். *(மகன்மார்)*



## பெருமதிப்புடன் பாராட்டி வாழ்த்துகிறோம்



### திரு.ந.யோகராஜன்

B.A., P.G. Dip. In Edu. (O.U.S.L), S.L.T.E.S.
DEPUTY ZONAL DIRECTOR, DEPARTMENT OF TECHNICAL EDUCATION & TRAINING
ZONE 4 (NORTH & EAST) SUB ZONAL OFFICE

எமது பிராந்தியப் பணிப்பாளர் அவர்களின் விடாமுயற்சியின் பயனாகக் கடந்த 8 வருடங்களுக்கும் மேலாக தற்காலிக ஊழியர்களாக இருந்த எம்மை வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் தமிழ் விவகாரங்கள் மாண்புமிகு அமைச்சர் K.N.டக்ளஸ் தேவானந்தா, எமது கிராமிய தொழிற்பயிற்சி அமைச்சர், பணிப்பாளர் நாயகம் P.H.G.பிறேம சிறி ஆகியோருடன் பேச்சு நடத்தியும் வேண்டுகோள் விடுத்தும் எமது பதவியை நிரந்தரமாக்கித்தந்தமைக்கு மனதார வாழ்த்துகின்றோம்.

அ.சந்திரகுமார்,
தலைவர்.

ம.மதிவர்ணன்,
செயலாளர்.

சிற்றூழியர் சங்கம், தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

(94678)

### வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்ல

# வாக்காளர் வ.பி.போ.சபை பஸ்களையே பயன்படுத்துவதற்கு அனுமதிக்க வேண்டும்

## யாழ். மாவட்ட வேட்பாளர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.20

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது குடாநாட்டில் வாக்காளர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்வதற்கு வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களை மட்டுமே பயன்படுத்த அனுமதிக்க வேண்டும். வேறு வாகனங்கள் பயன்படுத்துவதை அனுமதிக்கக் கூடாது.

- இவ்வாறு யாழ். மாவட்ட வேட்பாளர்கள், உதவித் தெரிவத்தாட்சி அலுவலரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். மாவட்ட வேட்பாளர்களுக்கான கூட்டம் நேற்று யாழ். செயலகத்தில் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் க.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்து கொண்ட வேட்பாளர்களே மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இவர்களது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் இது தொடர்பாக தேர்தல் ஆணையாளருடன் தொடர்பு கொண்டு ஆவன செய்வதாக உறுதியளித்தார்.

நடைபெறும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் ஒவ்வொரு வேட்பாளர்களுக்கும் ஆளடையாளப் பத்திரம் வழங்கப்படவுள்ளதாகவும் இந்தப் பத்திரம் தேவைப்படும் வேட்பாளர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் தெரிவத்தாட்சி அலுவரின் அலுவலகத்திற்கு வருகைதந்து பெற்றுக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சி, ஜனநாயக இடது சாரி முன்னணி, புளொட், முஸ்லிம் காங்கிரஸ், சுயேச்சைக் குழு ஆகிய கட்சிகள் இக்கூட்டத்தில் பங்கு பற்றின. ஈ.பி.டி.பி. இதில் பங்குபற்றவில்லை. (க-ரி)

# மின்வெட்டு நேரம் குறைப்பு

யாழ்ப்பாணம்,நவ.20

யாழ்ப்பாணத்தில் மின்விநியோகம் மேற்கொள்ளப்படும் பிரதேசங்களில் தற்சமயம் நடைமுறைப்படுத்தப்படும் மின்வெட்டு நேரத்தில் சிறு மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி பகல் வேளையில் முற்பகல் 11 மணி முதல் மாலை 6 மணி வரை அமுல் செய்யப்பட்டு வந்த மின்வெட்டு நேற்று முதல் பிற்பகல் 3 மணி வரை மட்டுமே அமுல் செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத்துடன் ஞாயிறு தினங்களில் பகல் நேர மின்வெட்டை முற்றாக நீக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

எரிபொருள் ஏற்றிய கப்பல் வடக்கே வந்துசேர்ந்ததும் அடுத்து வரும் நாள்களில் மின்வெட்டு நேரம் மேலும் குறைக்கப்படும் என்றும் - மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை -

மின்சார சபை குடாநாட்டில் புதிய இணைப்புக்களை வழங்குவதை தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்கள் மின்சாரத்தை இயன்றவரை சிக்கனமாகப் பயன்படுத்துவதன் மூலமும் -

'வெல்டிங்' மற்றும் அரிசி ஆலை போன்ற மின்சாரத்தை அதிகளவில் பயன்படுத்தும் தொழில்களை மேற்கொள்வோர், ஜெனரேட்டர் வைத்திருந்தால் அவற்றைப் பயன்படுத்துவதன் மூலமும் -

மின்சார சபைக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என சபை வட்டாரங்கள் கேட்டுள்ளன.

அத்துடன் மின் திருத்த வேலைகள் இயன்றவரை மின்வெட்டு நேரங்களிலேயே மேற்கொள்ளப்படுவதாகவும் -

தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங்களில் மாத்திரமே மேலதிக மின்வெட்டு அமுல் செய்யப்படுவதாகவும் -

அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை மின்மானி பொருத்தப்படாத வீடுகளுக்கான மின் கட்டணம் மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் -

கணிசமான அளவில் இம்முறை மின்கட்டணம் குறைக்கப்படும் என்றும் -

சபை வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

தற்போதைய மின்வெட்டு அமுல் செய்யப்படாமல் முழுநேரமும் மின்சாரம் தொடர்ந்து விநியோகிக்கப்பட்டிருந்தால் கடந்த எட்டாம் திகதியுடன் மின்விநியோகத்தை முற்றாக நிறுத்தவேண்டிய நிலை வந்திருக்கும் என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ-9)

### கருத்தரங்கு

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. (சாதாரண தர) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நலன் கருதி கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி இன்ரறக்ட் கழகத்தின் ஆதரவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்குத் தொடரில் நாளை புதன்கிழமை 9.00மணிக்கு ஆங்கில பாடத்துக்கான கருத்துரை இடம் பெறும்.

பிராந்திய ஆங்கில ஆதார நிலையப் பொறுப்பாசிரியர் திரு.கோ.சுப்பிரமணியம் கலந்துகொண்டு கருத்துரை வழங்குவார். (உ)


## விவசாயிகளுக்கான வாழை அழிவு கொடுப்பனவு வழங்கல்

2000ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தில் ஏற்பட்ட வாழை அழிவுக்கான நிதிக் கொடுப்பனவு இருபத்துமூன்று லட்சம் ரூபா வடக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களால் ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே வாழை அழிவுக்குப் பதிவுசெய்த, புத்தூர், உரும்பிராய் கமநல கேந்திர விவசாயிகள் அனைவரும் தமக்கு உரிய கமநல கேந்திர நிலையங்களுக்கு இன்று (2001-11-20) செவ்வாய்க் கிழமை காலை 9 மணி முதல் 4 மணி வரை சமுகம் கொடுத்து தமது கொடுப்பனவை உறுதிசெய்யும்படி கேட்கப்படுகின்றார்கள். அத்துடன் இதற்கான பணத்தினை நாளை (2001-11-21) புதன்கிழமை காலை 10 மணி தொடக்கம் வடக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் அலுவலகத்தில் நேரடியாகச் சென்று பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆ.கந்தசாமி,
தலைவர், வலி.கிழக்கு விவசாய சம்மேளனங்களின் ஒன்றியம்

(C/19371)



## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2001



தமிழ் மக்களின் விடியலுக்காக அன்றும், இன்றும்
என்றும் உழைத்து வரும்
எமது முதன்மை வேட்பாளர்
திரு.வீ.ஆனந்தசங்கரி அவர்களையும்
அதே வழியில் செயலாற்றி வரும் செயல்வீரன்
இளைய தலைமுறை வேட்பாளர்
அரவிந்தன் அவர்களையும்
ஆதரித்து நாடளுமன்றம் அனுப்புவோம்.



ச.அரவிந்தன்
இல. - 2

வீ.ஆனந்தசங்கரி
இல. - 3

**தமிழர் விடுதலைக் கூட்டணி** X

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ~~2~~ | ~~3~~ | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | | | | | | | | |

(93930)

- இளைய தலைமுறையினர்.


# திருகோணமலையில் மறியல்

திருகோணமலை,நவ.20

வடக்கு - கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர் சங்கம் நேற்றுத் திருமலை உள்துறைமுக வீதியில் அமைந்துள்ள மாகாண சபை பிரதம செயலாளரின் அலுவலகத்தின் முன்னால் மறியல்போராட்டத்தில் ஈடுபட்டது.

சங்கத் தலைவர் இ.தயாளன், பொதுச் செயலாளர் இ.மணிவண்ணன் உட்பட ஊழியர்கள் பலரும் சுலோக அட்டைகளுடன் காணப்பட்டனர்.

16அம்சக் கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டம் நடத்தப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் அமைச்சுக்களிலும் திணைக்களங்களிலும் தமிழ் மொழி அமுலாக்கப்படாமை, ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் கடமையாற்றும்படி பணிக்கப்படுதல் தொடர்பான கோரிக்கைகளே அவற்றில் முக்கியமாக இடம்பெற்றிருந்தன. (உ)

### அம்பாறையில் மாவை பேச்சு:

# ஈ.பி.டி.பிக்கு ரூ.38 லட்சம் மாதம் அரசு வழங்குகின்றது

## பொய் என்றால் மறுக்கட்டும்

அம்பாறை,நவ.20

"ஈ.பி.டி.பிக்கு மாதமொன்றுக்கு 38 லட்சம் ரூபாவை அரசு வழங்குகிறது. பிரேமதாஸா அரசு முதல் இன்றுவரை இப்பணம் வழங்கப்பட்டு வருகின்றது. இது பொய்யென்றால் மறுக்கட்டும்."

- தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவரான மாவை சேனாதிராஜா இவ்வாறு கூறினார்.

அம்பாறை மாவட்டத்தில் றாணமடு என்ற இடத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் உரையாற்றினார். அப்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு செய்யும் யுத்தச் செலவு, யுத்தத்துக்கு மக்கள் மீது சுமத்தும் வரி, இன ஒடுக்குமுறை, இராணுவ அடக்குமுறை என்பவற்றையெல்லாம் நாம் நாடாளுமன்றத்தில் எதிர்க்கின்றோம்.

அரசுக்கு எதிராக நாம் கையை உயர்த்தும் போது சுயேச்சை அணியில் அனுப்பப்பட்ட முன்னாள் எம்.பி.குணசேகரம் அரசுக்கு ஆதரவாக கையை உயர்த்துவார்.

**தேர்தல் களம்**

அரசின் சம்பளம் பெறும் ஈ.பி.டி.பியின் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் இராணுவத்தோடு இணைந்து செயற்படுகின்றனர்.

எமது கூட்டணி 15 அல்லது 16 எம்.பிக்களைப் பெறும் வாய்ப்பு ஏற்பட்டால் தமிழ் மக்களின் குறைகள் குறித்து குரல் கொடுப்போம்.

- இவ்வாறு சேனாதிராஜா கூறினார்.

இக்கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். (உ)

# 4 நாடாளுமன்ற ஆசனங்களைக் கொண்டு குடாநாட்டில் நாம் சாதித்தவை ஏராளம்

## தெல்லிப்பழை ஈ.பி.டி.பி. கூட்டத்தில் நிஷாந்தன்

வலி.வடக்கு,நவ.20

கடந்த பொதுத் தேர்தலில் யாழ். குடாநாட்டில் 4 நாடாளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றிய ஈ.பி.டி.பி. அதன் மூலம் சாதித்த சாதனைகளோ ஏராளம். ஆனால் 5.ஆசனங்களைக் கைப்பற்றிய ஏனைய கட்சிகள் இன்றுவரை எதனைத்தான் சாதித்தன? எனவே இவர்கள் பெற்றுக்கொண்ட ஆசனங்கள் அனைத்தும் விழலுக்கு இறைத்த நீராகவே போய்விட்டன.

இவ்வாறு கூறினார் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட பிரதி அமைப்பாளரும் நல்லூர் பிரதேச சபைத் தலைவரும் வேட்பாளருமான க.மணிபல்லவராஜன் (நிஷாந்தன்).

ஈ.பி.டி.பியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்கு அருகில் முன்னாள் அதிபர் க.நாகராஜா தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே நிஷாந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

யுத்தத்தினால் பாதிப்படைந்து இருக்கும் இம்மண்ணையும் மக்களையும் நல்லதொரு நிலைக்குக் கொண்டுசெல்ல வேண்டும் என்பதே எமது ஒரே கொள்கையாகும். அதற்காகவே நாம் பாடுபடுகின்றோம். அதற்காகவே நாம் நடந்து கொண்டும் செயற்பட்டுக்கொண்டும் இருக்கின்றோம்.

இத்தகைய நல்லதொரு செயற்பாட்டை நாம் மேற்கொள்வதற்கு உந்துசக்தியாக விளங்குவது மக்கள் எமக்கு அளித்த நாடாளுமன்ற ஆசனங்களே ஆகும்.

கடந்த பொதுத் தேர்தலின்போது நீங்கள் நாடாளுமன்றம் அனுப்பிய ஏனைய கட்சிகளின் ஐந்து உறுப்பினர்களும் ஐந்து சதமேனும் மக்களுக்காகச் செலவு செய்துள்ளார்களா? இல்லவே இல்லை.

வீரவசனம் பேசியவர்கள் என்ன செய்தார்கள்? வன்னிக்குச் சென்ற மக்கள் மீண்டும் யாழ்ப்பாணம் ஏன் வருகின்றார்கள்? சொந்த மண்ணில் நிம்மதியாகவும், சுதந்திரமாகவும் வாழவேண்டும் என்பதற்காகவே.

### அன்று மக்கள் பயந்தனர்

1997ஆம் ஆண்டு காலப்பகுதியில் கட்சியின் அலுவலகத்தை அமைக்க நாம் யாழ்ப்பாணம் வந்தபோது எங்களைக் கண்டு மக்கள் பயந்து ஓடினார்கள். நாங்கள் மக்களை அடிக்கப்போவதாகவும், துன்புறுத்தப்போவதாகவும் கொலைகள் செய்யப்போவதாகவும் செய்யப்பட்ட பிரசாரம் காரணமாகவே அவர்கள் இவ்வாறு நடந்து கொண்டனர். ஆனால் நாம் இன்று வரை மற்றையவர்கள் செய்த பிரசாரத்தைப் போன்று எதனையும் செய்யவில்லை.

எங்களிடம் இருக்கும் துப்பாக்கிகளை நாம் 1997ஆம் ஆண்டின் பின் யாரையும் நோக்கி நீட்டப்படவில்லை. எமது கையில் இருக்கும் துப்பாக்கி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறுவதைப் போன்று வைத்தியரின் கையில் இருக்கும் கத்தி போன்றது.

### கூட்டணியிடம் எந்த கொள்கையும் இல்லை

தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரையில் எந்த வகையான சொந்தக் கொள்கையும் அவர்களிடம் இல்லை. இவர்களுக்கு என்று ஓர் அரசியல் இலக்குக்கூட இல்லை.

ஈ.பி.டி.பியைப் பொறுத்தவரையில் நாம் மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என்ற இலக்கின் அடிப்படையிலேயே இயங்கி வருகின்றோம். தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரையில் தமிழீழக் கோரிக்கையை முன்வைத்து ஒரு மொழியை தமிழ் மக்கள் கற்க முடியாது என்று கூறிவந்தனர். ஆனால் இன்று தமிழ் மக்கள் பல நாடுகளுக்கும் சிதறிச் சென்று பல மொழிகளையும் கற்று வருகின்றார்கள்.

**தேர்தல் களம்**

இவர்களினால்தான் எமது நாடு சிதைந்துள்ளது. மக்கள் சிதறிப்போய் உள்ளார்கள். மக்கள் அழிந்தும் இழப்புகளுக்கும் உள்ளாகியுள்ளார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஆயுதபாணிகளைச் சேர்க்கமாட்டோம் என்று கூறினார்கள். ஆனால் இன்று அக்கட்சிக் கூட்டமைப்பில் கொள்ளைக்காரர்களும் கொலைகாரர்களும் கப்பம் வாங்குபவர்களும கூட இணைந்து கொண்டுள்ளார்கள்.

வேட்பாளரான மகேஸ்வரி வேலாயுதம் தமது உரையில் கூறியதாவது:-

எம்மைப் பொறுத்தவரையில் பல்வேறு துன்ப துயரங்களையும் தாங்கிப் போராடி வருவது நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்காகவோ அன்றி மந்திரிப் பதவிக்காகவோ அல்ல. மக்களுக்கு சிறந்த சேவையாற்ற வேண்டும் என்பதற்காகவே.

தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளித்தவர்கள் ஈ.பி.டி.பியினரே ஆகும். ஏனைய கட்சியினர் உங்களுக்கு ஏதாவது செய்தார்களா? 1997ஆம் ஆண்டு ஜனாதிபதியுடன் வாதிட்டே டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணத்திற்கு வந்தார். அவர் வந்தே இம்மண்ணில் காணாமற்போனவர்கள் மற்றும் தேவையற்ற கைதுகளையும் நிறுத்தினார்.

- என்றார்.

இந்தக் கூட்டத்தில் ஈ.பி.டி.பியின் முன்னாள் எம்.பி. எஸ்.சிவதாசன், வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவரும் வேட்பாளருமான என்.திரிலோகநாதன், நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் புலவர் ஏ.டபிள்யூ. அரியநாயகம் ஆகியோரும் உரையாற்றினர். (க-7-86)

# முத்தமிழ் விழா ஒத்திவைப்பு

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில்
இன்று (20-11-2001) செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த
முத்தமிழ் விழா தவிர்க்கமுடியாத காரணத்தால்
ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

அதிபர்,
(C/19376) ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்.

---

உ
சிவமயம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்
அத்திவாரமாக அமைந்துள்ள
பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவுனரும்
சைவப்பெருவள்ளலாருமான

## சேர் பொன்.இராமநாதன்

அவர்களின்

# நினைவு தின விழா

*காலம்:* நாளை (21.11.2001) புதன்கிழமை
*நேரம்:* காலை 6.30 மணி முதல்
*இடம்:* ஸ்ரீபரமேஸ்வரன் ஆலயம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சபா மண்டபம்

நிகழ்ச்சி நிரல்

1. காலை 6.30 - 8.30 வரை அருள்மிகு பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானுக்கு 108 சங்காபிஷேகமும் விசேட பூசையும்.
2. 8.30 மணிக்கு சேர் பொன்.இராமநாதன் திருவுருவச் சிலைக்கும் பல்கலைக்கழக சபா மண்டபத்திலுள்ள அவரின் உருவப்படத்திற்கும் துணைவேந்தர் அவர்கள் மாலை அணிவித்து அஞ்சலி செய்யும் நிகழ்வு.
3. 8.40 மணிக்கு சேர் பொன்.இராமநாதன் வேதாகம நிறுவன மாணவர்களின் வேத பாராயணம், திருமுறை ஓதல், அவர்களுக்குச் சான்றிதழ் வழங்குதல்.

இவ்வைபவத்தில் மங்களவாத்திய இசையினை இணுவில் என்.ஆர். கோவிந்தசாமியின் புதல்வர்கள் வழங்குவர்.

இந்நிகழ்வினையொட்டிய 'கலை நிகழ்ச்சிகள்' 23.11.2001 வெள்ளிக்கழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,
இந்து மன்றம், யாழ்.பல்கலைக்கழகம்,
ஸ்ரீ பரமேஸ்வராக்கல்லூரி இயக்குநர் சபை,
ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய பரிபாலன சபை.
திருநெல்வேலி,
19.11.2001. (94684)

---

# பாராட்டி நன்றி நவில்கின்றோம்

கரணவாய் மத்தி ஸ்ரீசுட்டான் கலட்டி
அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தானம்
கட்டட நிதிக்கு ஒதுக்கப்பட்ட மூன்று லட்சம் ரூபாவில்
ஒரு லட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபாவைத் தந்து உதவிய



வடக்கு புனர்வாழ்வு மற்றும்
வடக்கு - கிழக்கு
தமிழ் விவகார இந்து சமய கலாசார
மாண்புமிகு அமைச்சர்
K.N.டக்ளஸ் தேவானந்தா
அவர்களையும்

உடுப்பிட்டித் தொகுதி அமைப்பாளர்
உயர்திரு ப.ரவீந்திரன் (நாசிக்)
அவர்களையும்
பாராட்டி எமது உள்ளம் கனிந்த நல்வாழ்த்துக்களை
தெரிவித்துக்கொள்கின்றோம்.

பரிபாலன சபையினர்,
கரணவாய் மத்தி - கரவெட்டி. (94683)

---



# 31 ஆம் நாள் நினைவலைகள்

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி
பேராசிரியர் செ.பாலச்சந்திரன்
அவர்களின்
பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, இந்த நாளில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உடற்கல்வித்துறை,
இரண்டாம் வருட மாணவர்கள்
(3 ஆம் அணி).
(94687)

---

## கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,நவ.20

ஹற்றன் நஷனல் வங்கியின் ஆதரவுடன் யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்ட சங்கம் ஏற்பாடு செய்துள்ள கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் இன்று மாலை யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி ஆடுகளத்தில் நடைபெறும் ஆட்டங்களில் மோதும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ 3.30 மணி:- பெண்கள் பிரிவு - பட்டர்பிளை வி.க. எதிர் பமிலியன் வி.க.

★ 4.15 மணி:- ஆண்கள் பிரிவு - ஜொனி யன்ஸ் வி.க. எதிர் கிராஸ்கொப் பர்ஸ் வி.க. (உ)

## சுகாதாரத் தொண்டர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,நவ.20

யாழ்ப்பாணம், நல்லூர் பிரிவு சுகாதாரத் தொண்டர்களுக்கான கலந்துரையாடல் நாளை புதன் கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். மணியம் கட்டடத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்.மாவட்ட சுகாதாரத் தொண்டர்கள் சங்கம் அறிவித்துள்ளது. (உ)

## வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை

யாழ்ப்பாணம்,நவ.20

நீதிமன்றில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை எதிர் வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இதேவேளை -

திட்டச் செயற்படுத்துகை அமைச்சின் அபிவிருத்தி அலுவலர்களுக்கான முதல் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையும் 24ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (க-ரி)

## ஜி.சீ.ஈ. பரீட்சை அனுமதி அட்டைகள் கப்பலில் வருகின்றன

யாழ்ப்பாணம்,நவ.20

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 11ஆம் திகதி நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள், விடை எழுதும் தாள்கள், ஏனைய ஆவணங்கள் நாளைமறுதினம் வியாழக்கிழமை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் கப்பலில் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்படவுள்ளதாக பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-ரி)


**ராஜா** யாழ்ப்பாணம்
கமல், மனீஷா,
ரவீணாராண்டன்
மற்றும் பலர் நடித்த
**ஆளவந்தான்**
தினசரி:- 10.00, 2, 5 (பு.நே)
சனி, ஞாயிறு 10.00, 2, 5 (பு.நே)
இந்தியாவிலும், இலங்கையிலும்
ஒரே தினத்தில் மாபெரும் வெளியீடு.
ஆசனங்களை முன்கூட்டியே
பதிவு செய்துகொள்ளவும்.
(C/19317)

**நிறைஞ்சனாஸ்**
சங்கானை
**THE PLOT** (ரீகல்)
இதுவரை கண்டிராத ஆண்கள்,
பெண்களுக்கிடையிலான
விறுவிறுப்பான கராட்டிச் சித்திரம்.
தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.)
(C/2924)

**நாகம்ஸ்** சுன்னாகம்
ஷியாம், ஜோதிகா, சிம்ரன்
நடித்த
**12-B** (ரீகல்)
வாழ்க்கையில் எதிர்பாராத திருப்பங்கள்
காட்சி நேரம் மாற்றம்
காட்சிகள்: - 11.00, 3.00 (பு.நே)
(94674)

**லக்ஷ்மி** இணுவில்
விஜய், சிம்ரன், சிவாஜி நடித்த
**ஒன்ஸ்மோர்**
3ஆவது வாரம்
தினசரி: - 10.30, 2.30 (ப.நே)
(94692)


---

# கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலக சக ஊழியரும் நண்பருமான
T.A.U.பெர்னாண்டோ (எடிசன்) அவர்களின் அன்புச் சகோதரி

## தோமாஸ் சோனியா

(11 ஆம் வட்டாரம் நெடுந்தீவு)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதோடு, சகோதரியின் ஆன்ம இளைப்பாற்றுக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*துயரில் பங்குகொள்ளும்*
RRAN பயணச் சீட்டுக்காரியாலய அலுவலர்கள்,
*யாழ்ப்பாணம்.* அபிவிருத்தித் தொண்டர் பிரதான இணைப்பாளர்
காரியாலய அலுவலர்கள்.
(94686)

# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை ரோகினியம்மா

பத்தமேனி, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை ரோகினியம்மா நேற்று (19.11.2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யூனியன் செல்லத்துரையின் அன்பு மனைவியும் தனபாலசிங்கம் (கொழும்பு), மங்களவதனி (கொழும்பு), காலஞ்சென்ற குணபாலசிங்கம் மற்றும் பூபாலசிங்கம் (பிரான்ஸ்), யோகமங்களவதனி, கமலநாயகி, ஜெயபாலசிங்கம் (பிரான்ஸ்), இந்துமதி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கமலாம்பிகை, காலஞ்சென்ற இராஜேந்திரம் மற்றும் மகேஸ்வரி, இராசகுமாரி, வில்வராயர், பாலசிங்கம், பவானி, ஸ்ரீநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் துஷ்யந்தன், ஏகாம்பரநாதன் பவித்திரா, ரஜித்திரா, உதயகுமார் கலாறஞ்சினி, வசந்தகுமார் துஸ்யந்தி, சிவபாலன் நளினி, நந்தகுமார் மந்தாகினி, சந்திரசேகரம் சுதாயினி, ராஜ்குமார் சர்மிளா, கோமளா, மோகனதாஸ், பிரமிளா, கோபிநாத், கோமதி, கேதீசன் ஈசாயினி, சிவாயினி, ததீசன், கஜிதா, அபிரா, ஹரி, மதுரா, விவேதா, ஹரீஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சிவானி, நிலானி, சௌமியா, அஷ்ணவி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.11.2001) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தீர்த்தாங்குள இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*யூனியன் வளவு,* தகவல்:
*பத்தமேனி,* பொ.பாலசிங்கம்
*அச்சுவேலி.* (மருமகன்)
(94689)

## சிவராசா இராசமணி

சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவராசா இராசமணி நேற்று (19.11.2001) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவராசாவின் (இளைப்பாறிய மின் அத்தியட்சகர்) அன்பு மனைவியும், உதயகுமார் (கனடா), சிவமலர், இராசமலர் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவகுமாரன், கணேஸ்வரி (கனடா), ஸ்ரீராஜன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், துரைசிங்கம் (இ.மி.ச.), துரைராசா, சிங்கராசா (கனடா), இந்திரராசா (இ.மி.ச.) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தர்ஷா, டிலக்ஷன், விநோதன், அர்ச்சனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2001) செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*சுன்னாகம் கிழக்கு,* சி.சிவகுமாரன்
*சுன்னாகம்.* (மருமகன்)
(94685)

## சிவகுரு பரஞ்சோதி

(சுன்னாகம் பிரபல வியாபாரி)

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரபல வியாபாரி வி.எஸ். பரஞ்சோதி 17.11.2001 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு - நாகமுத்து தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - நீலமணி தம்பதியினரின் பாசமிகு மருமகனும், சரோஜினிதேவியின் (கனடா) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தவரட்ணம், மகாராசா மற்றும் இராசாத்தியின் அன்புச் சகோதரனும், ஜமுனாதேவி (கொழும்பு), ஜெயத்திலகம் (மீனா - கனடா), ஆறுமுகசோதி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஸ்வகுமாரன் (கொழும்பு), சண்முகராஜா (கனடா), கமலறஞ்சினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், அஜித்குமார், டிலக்சன் (கொழும்பு), சிந்து (கனடா), அர்ச்சனா, றமீறா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2001) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*டாக்டர் சுப்பிரமணியம் வீதி,* பரஞ்சோதி ஆறுமுகசோதி
*சுன்னாகம்.* (மகன்)
(94662)

## சின்னக்குட்டி கதிர்காமலிங்கம்

(நயினாதீவு)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி கதிர்காமலிங்கம் நேற்று (19.11.2001) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராசேஸ்வரி (சின்னமணி) அவர்களின் அருமைக் கணவரும் சுதர்சனா (பிரான்ஸ்), ஜெயபர்குருபரன் (பிரான்ஸ்), ஜெயக்குமார் (பிரான்ஸ்), ராஜ்மோகன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் கெங்காதரன் (பிரான்ஸ்), சத்தியகலாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அருமை மாமனாரும் பிரான்ஸில் வசிப்பவர்களான கரிசனா, கீர்த்தனா, சயானா, ஜெயனா ஆகியோரின் அருமைப் பேரனும் காலஞ்சென்ற கணேஸ், மற்றும் பார்வதி, சிதம்பரநாதன் (ஓய்வுபெற்ற குற்றப் புலனாய்வு), தில்லைநாயகி, மீனாட்சி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2001) செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*26/16, ஓடைலேன்,* தகவல்:
*வண்ணார்பண்ணை,* வை.இரத்தினசபாபதி (இரத்தினம்)
*யாழ்ப்பாணம்.* (மைத்துனர்)
(94693)

# ஆனமடுவவில் தேர்தல் வன்செயல்கள் கைக்குண்டு வீச்சு! துப்பாக்கிச் சூடு!!

புத்தளம்,நவ.20

ஆனமடுவப் பகுதியில் தேர்தல் பிரசாரத்தை முடித்துக்கொண்டு திரும்பிய வடமேல் மாகாண சபையின் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினர் டி.எம்.தர்மசேனா மீது கைக்குண்டு வீசப்பட்டது. இதனால் அவரும் அவரது கார்ச்சாரதியும் படுகாயம் அடைந்து குருநாகல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் பாலித்த ரங்கபண்டார தலைமையில் வந்த கோஷ்டியினரே குண்டெறிந்தனர் என ஆனமடுவ பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் பள்ளம என்னும் பகுதியில் உள்ள பொ.ஐ.முன்னணி காரியாலயம் மீதும் கைக்குண்டு வீசப்பட்டது. அங்கிருந்த 6 பேர் காயமடைந்து சிலாபம் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.

இந்த இரு சம்பவங்களும் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றன.

இதற்கு இடையில் புத்தளம் தேர்தல் திணைக்களத்திற்குச் சொநதமான வாகனமொன்றின் மீதும் கைக்குண்டு வீசப்பட்டது; வாகனம் சேதமடைந்தது.

பள்ளம என்னுமிடத்தில் ஐ.தே. கட்சி பிரசார பொதுக்கூட்டத்தின் போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். அதில் இருவர் காயமடைந்தனர்.

ஆனமடுவ, புத்தளம் பொலீஸார் புலன் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

# சுவரொட்டிகளை அகற்றுவதை பொலீஸார் இடைநிறுத்தினர்

நாடுமுழுவதும் தேர்தல் பிரசார சுவரொட்டிகள் மற்றும் அலங்காரங்களை அகற்றும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டிருப்பதாக ஸ்ரீலங்கா பொலீஸ் மா அதிபரை மேற்கோள் காட்டி செய்தி ஏஜென்சி ஒன்று நேற்றிரவு தகவல் வெளியிட்டிருந்தது.

இந்தச் சுவரொட்டிகளையும் அலங்காரங்களையும் அகற்ற வேண்டாம் எனப் பல்வேறு தரப்பினரிடம் இருந்தும் வந்த அழுத்தங்களினாலேயே இந்தப் பணி இடை நிறுத்தப்பட்டிருக்கிறது.

இதேவேளை -

சுவரொட்டிகளை அகற்றும் பணியில் கடந்த சில நாள்களாக ஈடுபட்டிருந்த பொலீஸார் அவற்றை அகறறுவதில் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கியதாகவும் -

அது தொடர்பாக அவர்கள் தமது மேலிடங்களுக்கு அவ்வப்போது முறையிட்டு வந்ததாகவும் - அந்தச் செய்தி ஏஜென்சி மேலும் தெரிவித்தது. (உ-4)

## ஆனந்தசங்கரியை...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகமாகவே டக்ளஸ் தேவானந்தா தலைமையில் ஈ.பி.டி.பி. செய்துள்ளது. இதனை உங்களுக்குப் புரியவைக்க வேண்டும் என்ற ஆசை எங்களுக்கு அதிகமாகவே இருக்கிறது. எனவே அதற்காக இப்பகுதிக்கு வருகை தருவது நல்லது என்றே நினைக்கின்றேன்.

யாழ்ப்பாண நகரத்துடனான தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்டு ஐந்து வருடங்கள் நாங்கள் அவலவாழ்வு வாழ்ந்ததை, நீங்கள் அறியாமலிருந்த அவலத்தை உங்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். அப்போது எங்களைத் தேடி வந்தவர்கள் யார்? எங்களுடன் கூட வாழ்ந்தவர்கள் யார்? இதை உங்களுக்கும் தெரிய வைக்க வேண்டும். அதற்காக ஒரு தடவை வாருங்கள்.

ஐயா! ஆனந்தசங்கரி அவர்களே!

தீவுப் பகுதியில் வாழுகின்ற எங்களை மனிதர்களாகவோ, எங்களுக்கு நாளாந்த வாழ்க்கைத் தேவைகள் இருப்பதாகவோ நீங்கள் உணர்ந்துகொள்ளவில்லை என்பதையே உங்கள் நாடாளுமன்ற உரை என்று நீங்கள் விளம்பரப்படுத்தியிருக்கும் வாசகங்கள் எடுத்துரைக்கின்றன. எங்கள் தலைகள் ஒவ்வொன்றும் உங்களுக்கு வாக்குகளாக மட்டுமே தெரிகின்றன. எங்கள் வாக்குகளைக் கவருவதற்கு ஆசைப்படும் உங்களுக்கு எங்கள் வாழ்க்கையின் மீது அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை என்னும் எங்கள் கவலையைத் தெரியப்படுத்த காத்திருக்கிறோம். உடன் வருக.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# பெண்களை விட ஆண்களுக்கு பாலியல் தொந்தரவுகள் அதிகம்

## ஆய்வு தரும் அதிர்ச்சித் தகவல்

கொழும்பு,நவ.20

இலங்கையில் பெண்களை விட ஆண்களே பெருமளவுக்குப் பாலியல் தொல்லைகளுக்கு உட்படுத்தப்படுகின்றார்கள்.

சர்வதேச தொழிலாளர் சம்மேளனமும் இலங்கை தொழில் அமைச்சும் இணைந்து அண்மையில் நடத்திய ஆய்வு ஒன்றிலேயே இந்த அதிர்ச்சி தரும் தகவல் வெளியாகியிருக்கின்றது.

சில பகுதிகளில் உள்ளூர் மட்டங்களில் பெண்களே அதிகமாக பாலியல் தொல்லைகளுக்கு உட்படுத்தப்பட்டாலும் நாடளாவியரீதியில் ஆண்களே பெருமளவுக்குப் பாலியல் சித்திரவதைகளையும் தொந்தரவுகளையும் எதிர்நோக்குகின்றார்கள்.

இவற்றில் பெரும்பாலும் வீடுகள் மற்றும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் சிறுவர்களே பெருமளவும் பாதிக்கப்படுகின்றனர்.

இவ்வாறு ஆண்பிள்ளைகளைப் பாலியல் தொல்லைகளுக்கு உட்படுத்துவதில் பெண்களை விடவும் ஆண்களே அதிகளவில் ஈடுபடுகின்றனர்.

அத்துடன் சிறுவர்களைக் கடத்துதல், அவர்களை விபச்சாரத்துக்கு பயன்படுத்துதல், வெளிநாடுகளுக்கு விற்றல் மற்றும் அவர்களை வைத்து நீலப்படம் எடுத்தல் ஆகிய அனைத்துக் கொடுமைகளும் இலங்கையின் சகல பகுதிகளிலும் தாராளமாக நடைபெற்று வருகின்றன.

இந்தச் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு நாட்டில் நிலவும் வறுமைநிலையே முக்கியமான காரணமாகும்.

- இவ்வாறு அந்த ஆய்வுகள் மேலும் தெரிவிக்கின்றன.

இதேவேளை-

இந்த நிலையை ஒழிப்பதற்கு இலங்கை அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் இந்தப் பிரச்சினை மிகவும் உச்சக்கட்டத்தை அடைந்துவிடும் எனவும் -

நாட்டில் நிலவும் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதன்மூலம் இதனை ஓரளவுக்கேனும் குறைக்கமுடியும் எனவும் -

சர்வதேச தொழிலாளர் சம்மேளனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் கிளொடியா ஸ்ரெபன்சியா தெரிவித்திருக்கிறார். (உ-4)

## தேர்தல் வன்முறைகள்:

# ஐ.தே.க. வேட்பாளர்கள் இருவரை கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு,நவ.20

இரத்தினபுரி, புத்தளம் மாவட்டங்களில் போட்டியிடும் ஐ.தே.கட்சி வேட்பாளர்கள் இருவரைக் கைது செய்யுமாறு நீதிமன்றம் நேற்று பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

கடந்த வாரம் இரத்தினபுரியில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் அட்டகலப்பன பிரதேச சபைத் தலைவர் மற்றும் பதினொரு பேர் தாக்கப்பட்டமை தொடர்பாக இந்த மாவட்டத்தின் ஐ.தே.கட்சி வேட்பாளர் சுசிந்த புஞ்சிநிலமேயைக் கைதுசெய்யுமாறு எம்பிலிப்பிட்டிய நீதிவான் உத்தரவிட்டார்.

மற்றொரு வன்முறைச் சம்பவம் தொடர்பாக புத்தளம் மாவட்ட ஐ.தே.கட்சி வேட்பாளர் பாலித பண்டாரவைக் கைது செய்யுமாறு புத்தளம் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (உ-4)

### கத்திக்குத்து

தென்மராட்சி,நவ.20

சண்டையை விலக்குப்பிடிக்கச் சென்றவர் கத்திக்குத்துக்கு இலக்கானார். இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு தொண்டமனாறு கெருடாவிலில் இடம்பெற்றது.

வயிற்றில் கத்திக்குத்துக்கு இலகான இதே இடத்தைச் சேர்நத சின்னப்பொடி மனோராசா (வயது 28) என்பவர் மந்திகை ஆஸ்பத்திரியல் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-117)

### பொலீஸ் பதவியுயர்வு சட்டவிரோதம் என நீதிமன்றம் தீர்ப்பு

கடந்த மார்ச் மாதம் 30பொலீஸ் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட பதவி உயர்வுகள் சட்ட விரோதமானவை என உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

பதவி உயர்வில் பாதிக்கப்பட்டவியனகே தாக்கல் செய்த மனு மீதே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்து.

மனுதாரருக்கு 25ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்கும்படியும் நீதிமன்றம் பொலீஸ் திணைக்களத்திற்கு உத்தரவிட்டுள்ளது. (உ-20)



# பொதுத் தேர்தல் - 2001

## கௌரவமாய்ப் பணியாற்ற.....!



அரச ஊழியர்களே!

கௌரவம், மதிப்பு, மரியாதையுடன் உங்கள் பதவிக் கடமையை நீங்கள் ஆற்றுவதை புதிதாக மலரும் ஐ.தே.கட்சியின் ஆட்சி உறுதி செய்யும்.

★ அனைத்து அரச ஊழியர்களின் இடர்காலக் கொடுப்பனவு முழுமையாக - தாமதமின்றி - முழு நிலுவைகளுடன் மூன்று மாத காலத்துக்குள் சேர்த்து வழங்கப்படும்.

★ அரச ஊழியரின் சம்பள நிலுவைகள், சம்பள உயர்வுகள், பதவி உயர்வுகள் வழங்குவதிலுள்ள தாமதம் நீக்கப்படும்.

★ எந்தவித அரசியல் தலையீடுகளும் இன்றி - கட்சி முகாம்கள், அலுவலகங்களுக்குச் சென்று கைகட்டிச் சேவகம்புரியாமல் - சுயாதீனமாக - தமது மனச்சாட்சிப்படி – நீதி, நியாயப்படி - கௌரவத்துடன் அரச ஊழியர்கள் பணியாற்றுவதற்கான சூழ்நிலை மீண்டும் ஏற்படுத்தப்படும்.

★ வன்செயல் பாதிப்பு நஷ்டஈடு சகல அரச ஊழியர்களுக்கும் சமச்சீராகக் கிடைப்பது உறுதி செய்யப்படும்.

★ அரச ஊழியர்கள் தமது போக்குவரத்து 'வாரண்ட்டை' பயன்படுத்தக்கூடிய வழமை நிலை ஏற்படுத்தப்படும்.

★ ஊழலற்ற அரச நிர்வாக இயந்திரம் அரசியல் தலையீடின்றி - லஞ்ச லாவண்யமின்றி - இயங்குவது உறுதி செய்யப்படும்.

★ வாழ்க்கைச் செலவுக்கேற்ப சம்பள உயர்வு வழங்கப்படும்.

தி.மகேஸ்வரன்,
முதன்மை வேட்பாளர்,
யாழ்.மாவட்டம்.

(C/19378)

ஐக்கிய தேசியக் கட்சி X 4



# மரண அறிவித்தல்

## அமிர்தாம்பிகை திருநாவுக்கரசு

நாயன்மார்கட்டு, நல்லூரைப் பிறப்பிடமாகவும் சங்குவேலி வடக்கு, மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட அமிர்தாம்பிகை திருநாவுக்கரசு நேற்று (19.11.2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நாயன்மார்கட்டு சதாசிவம் - பூரணம் தம்பதியினரின் மூத்த புதல்வியும், இராமலிங்கம் திருநாவுக்கரசு அவர்களின் அன்பு மனைவியும், மனோநாயகம் (இளைப்பாறிய சுகாதாரப் பரிசோதகர்), கலாநிதி கமலநாதன் (பீடாதிபதி - யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி), திருமதி கமலவேணி சண்முகராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், செழியன் (ஆஸ்திரேலியா), துளசி (கொழும்பு), சுசிதரன் (பிரான்ஸ்), முகுந்தன் (பிரான்ஸ்), முரளிதரன் (பிரான்ஸ்), சசிதரன் (பிரான்ஸ்), சிந்து (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சண்முகராசா, திருமதி தவமணி, திருமதி இராஜாம்பிகை ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சங்குவேலி வடக்கு இல்லத்தில் நாளை (21.11.2001) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சங்குவேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*சங்குவேலி வடக்கு,* மனோநாயகம்,
*மானிப்பாய்.* (C/19373) கமலநாதன்.





ஐக்கிய தேசியக் கட்சி

குடாநாட்டு மக்களின் விடிவிற்கான உரிமைக்குரல் நாடாளுமன்றில் ஒலித்து, அவலங்களை நீக்க வடமராட்சி மைந்தனை ஆதரியுங்கள்!

சி.குலேந்திரராஜா (குயிலன்)

(93931)

உங்கள் சின்னம் X

உங்கள் மைந்தனின் இல. 11 X

# இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தும் முயற்சியை படையினரே முறியடியுங்கள்!

## பிரதேச ஒருமைப்பாட்டை உறுதிசெய்யுமாறு பிரதமர் அறைகூவல்

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இடைக்கால நிர்வாகமொன்றை ஏற்படுத்தும் முயற்சிகளைத் தோற்கடித்து நாட்டின் பிரதேச ஒருமைப்பாட்டை உறுதிசெய்ய ஆயுதப் படையினர் முன்வரவேண்டும்.

இவ்வாறு படையினருக்கு அழைப்பு விடுத்திருக்கிறார் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, இது தொடர்பாக அவர் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார். அதில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

இந்தப் பரிசுத்த பூமியை புராதன காலத்திலிருந்து குன்றுகள், ஆறுகள், வனங்கள் போன்ற இயற்கைத் தடைகளையெல்லாம் தாண்டி பாதுகாத்த வீரபுருஷர்களின் நீண்ட வரலாற்றுச் சங்கிலியின் இன்றைய சந்ததியினராக நீங்கள் இருக்கின்றீர்கள். கடந்த 17 வருடங்களாக நீங்கள் செய்த தியாகங்கள் காரணமாக இன்று கோவில்களில் பூசைகளும், தேவாலயங்களில் ஆராதனைகளும், பள்ளிவாசல்களில் தொழுகையும் நடைபெறுகின்றன; எமது பிள்ளைகள் பாடசாலை செல்கின்றனர்; தென்னிலங்கையில் ஜனநாயகத் தேர்தல்கள் நடைபெறுகின்றன; பிளவுபடாத ஸ்ரீலங்கா இப்போதும் இருக்கிறது.

நாம் உங்களுக்குக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

'எடிபல', 'அக்குணுபகல' நடவடிக்கைகளில் நீங்கள் செய்த தியாகங்கள் எமது நாட்டின் ஒவ்வொரு அங்குல மண்ணையும் மீட்க உதவின. யாழ்ப்பாணத்தையும் அதன் பல பகுதிகளையும் மீளக் கைப்பற்ற உதவின.

ரணவிரு அதிகார சபையை நாம் உருவாக்கி படையினருக்கு வீடுகள், நிலம், அவர்களின் பிள்ளைகளுக்கு கல்வி ஆகியவற்றை வழங்கினோம்.

இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்தி நாட்டைப் பிரிப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகளை தோற்கடிப்பதற்கு உங்கள் பங்களிப்பு இப்போது தேவை.

- இவ்வாறு பிரதமர் தனது வேண்டுகோளில் தெரிவித்துள்ளார்.

### கொழும்புத்துறையில் சிப்பாயைக் காணவில்லை

கொழும்புத்துறைப் பகுதியில் சில தினங்களுக்கு முன்னர் படை முகாமிலிருந்து குளிப்பதற்காகப் புறப்பட்டுச் சென்ற இராணுவச் சிப்பாய ஒருவர் காணாமற் போயிருககின்றார்.

அவர் முகாமிற்குத் திரும்பாததை அடுத்து அவரைத்தேடிக் கண்டுபிடிக்க முயற்சி எடுக்கப்பட்டிருப்பதாக விசேட ஊடகத்தகவல் மையம் தெரிவித்தது. (உ)

### பிரதேச செயலர் விடுவிக்கப்பட்டார்

கடந்த வியாழனன்று வாகரையில் தமது அலுவலகத்தில் இருந்த சமயம், தமது வாகனத்தோடு சேர்த்து கடத்திச் செல்லப்பட்ட வாகரைப் பிரதேச செயலர் எஸ்.பி. பாலசுப்பிரமணியம் நேற்றுமுன்தினம் காலை அவரது வாகனத்துடன் சேர்த்து விடுவிக்கப்பட்டார்.

இவரை புலிகளே கடத்திச் சென்றதாக அரசுத் தரப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

(முன்னர் வந்த் செய்தி 5ஆம் பக்கத்தில்) (உ)

### குடாக்கடல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்கரைப் பகுதியில் கரையொதுங்கிய சடலமும் -

நேற்றுப் படையினரால் குருநகர் இறங்குதுறையில் வைத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினிடம் ஒப்படைக்கப்பட்டன.

அவற்றைப் பொறுப்பேற்ற செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் தமது படகு மூலம் குடாக்கடல் ஊடாக அவற்றை எடுத்துச் சென்று பள்ளிக்குடாவில் வைத்து விடுதலைப் புலிகளிடம் கையளித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ-ரி-9-51-139)

# புலிகள் நால்வர் உயிரிழப்பு

வவுனியா,நவ.20

கடந்த சில தினங்களில் இடம்பெற்ற மோதல்களில் உயிரிழந்த விடுதலைப் புலிகள் நால்வர் மற்றும் தேசியத் துணைப்படை வீரர் ஒருவர் ஆகியோரின் விவரங்களைப் புலிகள் வெளியிட்டுள்ளனர்.

கடந்த 11ஆம் திகதி [illegible] இடம்பெற்ற மோதலில் [illegible] என்று அழைக்கப்படும் கப்டன் தென்றல் மாறன் (முருகதாஸ் ஜெயரூபன்) என்பவரும் -

கடந்த 12ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டம் கல்முனைப் பகுதியில் இடம்பெற்ற மோதலில் லெப்டினன்ட் விவேந்திரன் (குப்புசாமி வேலாயுதம் - மட்டக்களப்பு)என்பவரும் -

கடந்த 15ஆம் திகதி திருகோணமலை மாவட்டம் கந்தளாய்ப் பகுதியில் இடம்பெற்ற மோதலில் வீரவேங்கை சோமகரன் (இராமலிங்கம் கேதீஸ்வரன் - மட்டக்களப்பு) என்பவரும் -

நேற்றுமுன்தினம் மணலாறுப் பகுதியில் இடம்பெற்ற மோதலில் மேஜர் கலைவாசன் (கணபதி செல்வராஜா - யாழ்ப்பாணம்), தேசியத் துணைப்படை வீரர் வீரவேங்கை சற்குணராஜா (முத்துக்குமார் சற்குணராஜா - யாழ்ப்பாணம்) ஆகியோரும்-

உயிரிழந்ததாகப் புலிகள் அறிவித்துள்ளனர். (உ)

### கோஷ்டி மோதல்

நவாலி வடக்கு புலவர் வீதியில் இரு இளைஞர் குழுக்களுக்கிடையில் நேற்றுமாலை மூண்ட கோஷ்டி மோதலில் 9பேர் காயமடைந்தனர்.

### முறைகேடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டும் வருவோம் என்று எதிர்பார்த்திருக்கவில்லை. ஆயினும் இத்தேர்தலை நேர்மையாகவும் நீதியாகவும் நடத்துவதன் மூலமே ஜனநாயக நடைமுறையைப் பலப்படுத்த முடியும் என நம்பும் அரசியல் கட்சிகளுடனும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் ஒத்துழைத்து, வாக்காளர்கள் தமது ஜனநாயக வாக்குரிமையை பயமுறுத்தலும் வன்செயலும் இன்றி அளிப்பதற்கு உதவ நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

யாழ்ப்பாணம், தீவகம் உட்பட சகல இடங்களிலும் தேர்தல் மற்றும் வாக்களிப்பின்போது எமது கண்காணிப்பாளர்கள் பணியாற்றுவர் - என்று தெரிவிக்கப்பட்டது. (உ)

### புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டுப் பகுதிக்குச் சென்று பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் விசேட பூசை ஒன்றில் கலந்துகொண்ட பின்னர் சில இடங்களில் அவர்கள் கூட்டங்களை நடத்தினர்.

அத்துடன் அரசடித் தீவு, பழுகாமம், போரதீவு போன்ற பகுதிகளில் வீடுவீடாகச் சென்று பிரசாரம் செய்தனர்.

இவர்களுடன் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பாக கூட்டமைப்பில் இணைந்து போட்டியிடும் - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தைச் சேர்ந்தவரான - ஞானமுத்து கிருஷ்ணபிள்ளையும் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டார். (உ-4)


எமது புதிய வீடியோ CD வெளியீடு
* நந்தா
பிரதிகளை உடன் பெற்றுக்கொள்ளலாம்.
அடுத்த வெளியீடு
* பொன்னான நேரம்
அஸ்டி எலக்ரோனிக்ஸ்
15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/19377)

எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்
சூர்யா, லைலா நடித்த
நந்தா
கமலின்
ஆளவந்தான்
(ஹிந்தி) (C/19374)
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.

தேவை
போட்டோப் பிரதி எடுப்பதில் அனுபவமுள்ளவர்கள் தேவை.
உடன் வரவும்.
மாயவன் கொமினிக்கேஷன்
சேர் பொன்.இராமநாதன் வீதி, (யாழ். பல்கலைக்கழக முன்பாக) யாழ்ப்பாணம். (94679)

கடைக்கு ஆள் தேவை
திருநெல்வேலிப் பகுதியில் இயங்கும் பான்ஸி விற்பனை நிலையம் ஒன்றுக்கு பெண் விற்பனையாளர் ஒருவர் உடன் தேவை.
விளம்பர இல:1394
மே/பா.உதயன், யாழ்ப்பாணம்.

எமது புதிய வீடியோ CD வெளியீடு
சூர்யா, ராஜ்கிரண், லைலா
* நந்தா *
விஷ்ணு வீடியோ
கே.கே.எஸ்.றோட், கோண்டாவில். (94688)

கத்தி தீட்டுதல்
அச்சுக் கூடக் கத்தி தீட்டிக் கொடுக்கப்படும்.
வஸ்தியன் அச்சகம்,
402, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (94652)


## கண்ணீர்க் காணிக்கை!

எமது கல்லூரியின் பீடாதிபதி
கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்
அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி தி. அமிர்தாம்பிகை**

அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குவதோடு, ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்துயரில் நாமும் பங்கெடுத்துக்கொள்கின்றோம்.

உப பீடாதிபதிகள்,
விரிவுரையாளர்கள்,
நிர்வாக உத்தியோகத்தர்கள்,
துணை ஆளணியினர்,
மாணவர்கள்.
யாழ்ப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரி,
கோப்பாய்,
யாழ்ப்பாணம். (C/19372)


IBMS
கற்கை அலகுப் பரீட்சைகள்
Corel Draw
Page Maker
புலமைப் பரிசில்த் திட்டம் I,II,III, மாணவருக்கான மேற்படி பரீட்சைகள் இம்மாதம் ஞாயிற்றுக்கிழமை 30ம் திகதி IBMSன் யாழ் காரியாலயத்தில் நடைபெறும் Corel Draw பரீட்சை காலை 9.00-11.00 வரையும் Page Maker பரீட்சை பிற்பகல் 1.00-3.00 மணி வரை நடைபெறும் இப்பரீட்சைக்கு தோற்றவிரும்பும் மாணவர்கள் இம்மாதம் 25ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் தலைமை அலுவலகத்தில் பெயர்களைப் பதிவு செய்யவும். செய்முறைப் பரீட்சைகள் 30/11/2001 பிற்பகல் 2.00-5.00 மணிவரை நடைபெறும்.
17/11/2001
Director (Ad)





அரச அலுவலர்களின் உரிமைக் குரல்
நாடாளுமன்றில் ஒலிக்க...
ஆதரிப்பீர் தமிழர் கூட்டணியை!
சுரேஷ் பிரேமச்சந்திரன்
தமிழர் விடுதலைக் கூட்டணி (93901)




இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் ஒரே தெரிவு



யுத்தத்துக்கு முடிவு, கட்டு, அச்சமற்ற அமைதி வாழ்வைக் காண.....
எக்காலமும் ஒன்றான வடக்கு - கிழக்கு மாகாணத்தில் விசேட அதிகாரங்களுடனான ஆட்சி அமைக்க....
வீணையே உங்கள் தெரிவு!
சேவையே எங்கள் இலக்கு!



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.11.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.